பக்கங்கள்:26 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 07 ஞாயிற்றுக்கிழமை 24.10.2021 கதிர் 353

### இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசியலில் இப்போது காய்த்த மரம் சுமந்திரன் தான் போலும். எல்லோரினதும் தாராள கல்லெறி அவர் மீதுதான். 'நாளொரு சர்ச்சை, தினம் ஒரு குழப்பம்' என்று அவரின் அரசியல் போகின்றது. அது போகட்டும். தமிழ்க் கூட்டமைப்புக்குள் ☞2

# எல்லை நிர்ணய மூலம் வடக்கின் இனப் பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாட்டை உடன் நிறுத்துக!

## சமலுக்குக் கூட்டமைப்பு, முன்னணி எம்.பிக்கள் கூட்டாகக் கடிதம்

(ந.லோகதயாளன்)

மாகாணம் தாண்டிய எல்லை நிர்ணய மூலம் வடக்கின் இனப் பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாட்டை உடன் நிறுத்துமாறு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து நீர்ப்பாசன அமைச்சரும் மற்றும் உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக்ஷவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பமிட்டுள்ள அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதியின் கிராமத்தினுடனான மக்கள் சந்திப்பு எனும் தொனிப்பொருளில் கடந்த 03. 04.2021 இல் வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் வெடிவைத்த கல்லு கிராம அலுவலர் பிரிவில் உள்ள 'போகஸ்வெல' எனத் தற்போது பெயர் மாற்றம் பெற்றுள்ள கொச்சியான் குளம் என்ற தமிழ் மக்களின் மரபுரிமையுடைய பூர்வீக கிராமத்தில் நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

இதன்போது அப்போதைய வவுனியா மாவட்ட செயலாளர் சமன் பந்துலசேனவின் வேண்டுகோளின் பிரகாரம் வடமத்திய மாகாணத்தின் எல்லைக்குட்பட்ட கெப்பிட்டிகொலாவ பிரதேச செயலாளர் பிரிவின் கனுகா வெல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 600 குடும்பங்களும், பதவியா கிராம அலுவலர் பிரிவு மற்றும் கம்பிலிவெவலதெகன்ன கிராமங்களைச் சேர்ந்த 430 குடும்பங்களும் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் ☞26

# '13'ஐ ஒன்று சேர்ந்து வலியுறுத்த தமிழ்த் தேசியக் கட்சிகள் முயற்சி

## யாழில் 2ஆம் திகதி கூடுகின்றன

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 24

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றுமுழுதாக அமுல்படுத்த இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு இந்திய அரசை ஒருமித்த நிலைப்பாட்டில் கோருவதற்குத் தமிழ்த் தேசியக் கட்சிகள் முடிவெடுத்துள்ளன.

இது தொடர்பான தமிழ்த் தேசியக் கட்சிகளின் கலந்துரையாடல் எதிர்வரும் நவம்பர் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது என ரெலோவின் ஊடகப் பேச்சாளர் கு.சுரேந்திரன் தெரிவித்தார். ☞26

### இந்தியக் கடற்படையால் கைது செய்யப்பட்ட

## வல்வெட்டித்துறை மீனவர்கள் இருவருக்கும் விளக்கமறியல்

(ந.லோகதயாளன்)

இந்தியக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு இந்தியக் கடற்படையால் கைதுசெய்யப்பட்ட யாழ்., வடமராட்சி - வல்வெட்டித்துறை மீனவர்கள் இருவரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நிமலதாஸ் ☞26

## மேலும் 19 பேர் மரணம்

இலங்கையில் மேலும் 19 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 10 பெண்களும் 09 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய ☞26

## வடக்கில் 26 பேருக்கு கொரோனா

வவுனியாவில் ஐந்து வயது சிறுவன் ஒருவர் உட்பட வடக்கில் நேற்று 26 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது.

தொற்றாளர்களாக உறுதிப் படுத்தப்பட்டவர்களில் ☞26

## 50 பேரின் பங்குபற்றலுடன் மத வழிபாட்டுக்கு அனுமதி

வழிபாட்டுதலங்களில் சமய அனுஸ்டானங்கள் மற்றும் விசேட வழிபாடுகளுக்கான தினங்களில் 50 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று (நேற்று) முதல் இந்த அனுமதி வழங்கப்படுகின்றது. எவ்வாறாயினும் ☞2

# அரிசி - பருப்பு விலைகள் பார்க்க என்னை மக்கள் நியமிக்கவில்லை

## இப்படிக் கூறுகின்றார் கோட்டாபய



நாட்டு மக்கள் என்னை ஜனாதிபதியாக நியமித்தது பருப்பு மற்றும் அரிசியின் விலைகளைப் பார்த்துக்கொள்வதற்கு என்றால் அதற்கு நான் தேவையில்லை.

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நூறு சதவீதம் கரிம உரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய பண்ணை ஒன்றைப் பார்வையிட நேற்று சென்றபோதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞2

Science For Technology (SFT)
A/L 2023
புதிய பிரிவுகள் ஆரம்பம்
A/L 2021, 2022
மாணவர்களுக்கான துரிதமீட்டல்
மற்றும் Past Paper Class
(குறுகிய காலத்தில் A தர சித்தியை அடைவதற்கு)
✓ குழுவாகவும் / தனியாகவும் கற்கலாம்
✓ நேரடி வகுப்பு மற்றும் ZOOM
மதுசூதன் M.Sc
077 907 3773

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவருக்கு எதிராக கொஞ்சம் பிரசாரக் குரலை எழுப்பும் பங்காளிக் கட்சித் தலைவராக முன்னணியில் இருப்பவர் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன். புளொட் தலைவர் சித்தார்த்தனும் கூட தனது நீண்ட மௌனத்தை அதிசயமாக கலைத்து,? சுமந்திரனுக்கு எதிராக பகிரங்க வெளியில் திடீரென கருத்து வெளியிட்டார். ஆனால் குறுகிய காலத்துக்குள் சுதாகரித்துக் கொண்டார்.

சுமந்திரன் எதிர் சித்தார்த்தன் முறுகலில் யார் முதலில் சீண்டியவர், யார் குழப்பத்துக்கு முதலடி எடுத்து வைத்தவர் என்பது தெரியவில்லை. ஆயினும் ஒரு சில நாள்களுக்குள்ளேயே இருவருமே நாடாளுமன்றத்தில் தனித்து சந்தித்துப் பேசி, முரண்பட்டு, விவாதித்து, தங்களுக்குள் தீர்த்துக் கொண்டனர் என்று அறிய வந்தது. அதை நாங்கள் பேசித் தீர்த்துக் கொண்டோம் என்று பிறிதொரு சந்தர்ப்பத்தில் சித்தார்த்தன் குறிப்பிட்டிருந்தார். தனிப்பட்ட தரப்புகளிடம் சுமந்திரனும் அதை ஒப்புக் கொண்டார் என வேறு வட்டாரங்கள் மூலம் அறிந்தேன். அதனால் சர்ச்சை – முரண்பாடு – இப்போது சித்தார்த்தன், சுமந்திரன் இடையே பெரிய அளவில் இல்லை என்றே எண்ணுகிறேன்.

ஆனால், சுமந்திரன் எதிர் செல்வம் முரண்பாடு இப்போதுதான் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. நல்லது. தொடரட்டும்.

சுமந்திரனைத் தாக்கி ஒரு செய்தி நிறுவனத்துக்கு செவ்வி அளித்தார் செல்வம். சுமந்திரன் பற்றிய தமது எரிச்சலை – சீற்றத்தை – கோபத்தை – கரித்துக் கொட்டி வெளியிட்டார் செல்வம். எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள்தான் அதிலிருந்தன.

ஆனால், அதையும் தாண்டி செல்வத்தின் ஒரு கருத்து வித்தியாசமாக இருந்தது. அதற்காக அவரைப் பாராட்ட வேண்டும்.

விரைவில் மாகாண சபைத் தேர்தல் வந்தால் யார் கூட்டமைப்பின் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர் என்பதுதான் இப்போது பிரதான கேள்வி. இவ்விடயத்தில், நாடாளுமன்றத் தேர்தலில் தோற்று வேட்பாளர்களில் பேர் பட்டியலில் ஆறாவது இடத்துக்குத் தள்ளப்பட்ட மாவை சேனாதிராசா, இந்த வயது போன நேரத்திலும் 'அடைந்தால் மகாதேவி இல்லையேல் மரணதேவி' என்ற ஒரே பிடிவாதத்தில் அந்தப் பதவிக்கு கண் வைத்து ஒற்றைக் காலில் நிற்கின்றார் என்பது தெரிந்ததே.

ஆனால், அதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள்ளேயே அதன் தலைவருக்குக் கடும் எதிர்ப்பு இருக்கும் நிலைமையில், கூட்டமைப்பின் பங்காளிக்கட்சித் தலைவர்கள் தமக்கு முதுகு கொடுத்து, துணை புரிந்து, உதவுவார்கள் என்று மாவை சேனாதிராசா மலைபோல நம்பியிருக்கின்றார் என அவருடன் தொடர்புபட்ட வட்டாரங்கள் தெரிவித்து வந்தன.

ஆனால், ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தங்கள் தரப்புக் கருத்தை சூசகமாகத் தெளிவுபடுத்தி, மாவை தரப்பின் மலை போன்ற நம்பிக்கையைத் தகர்த்து விட்டார் என்றே கூற வேண்டும்.

"மாவை அண்ணனின் பெயரை ஸ்ரீதரன் எம்.பி. விழுந்தடித்து உச்சரித்ததால் அது வந்ததே தவிர, நாங்கள் அது பற்றி எதுவும் முடிவு செய்யவில்லை." – என்று கூறிய செல்வம் அதையும் தாண்டி பல விடயங்களை வரிசைப்படுத்தினார்.

"முதல்வர் வேட்பாளர் தெரிவு ஒரு கூட்டுமுயற்சி. இதுதமிழர்களைப்பொறுத்த வரை மிக மோசமான காலகட்டம். எங்கள் நிலங்கள், உரிமைகள் பறிபோகும் ஆபத்துக் காலம். 13ஆவது திருத்த அதிகாரப் பகிர்வுகள் கூடக் கிட்டுமா என்பது சந்தேகம்தான். ஆகவே இச்சமயத்தில் ஆளுமை கொண்ட, அந்தந்த இடத்திலேயே துணிச்சலாக முடிவெடுத்து நெருக்கடிகளை முறியடிக்கும் வாண்மை கொண்ட, துடிப்பான ஒரு முதலமைச்சர் எங்களுக்குத் தேவை. வெறும் வாயால் பேசிக் கொண்டிருப்பவர்களால் பயனில்லை." – என்ற சாரப்பட உறுதியாகக் குறிப்பிட்டார் செல்வம்.

ஆக, முதலமைச்சர் தொப்பி, மாவைக்கு அளவில்லை என்பதுதான் தமது கருத்து என்பதை எல்லோருக்கும் புரிய வைக்கும் அளவுக்கு வெளிப்படுத்தி விட்டார் செல்வம்.

அரசியல் கட்சிகளின் நலனுக்கு அப்பால் சென்று ஓரளவு வெளிப்படையாக இவ்விடயத்தில் உண்மையை – யதார்த்தத்தை – பேசிய செல்வம் பாராட்டுக்குரியவராகின்றார்.

அவரது இந்த செவ்வியைப் பார்த்த பின்னராவது யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு, தமது பகல் கனவை – நப்பாசையை – விட்டு விலகி, தாராளமாக, உண்மையான தமிழரசுத் தலைவராகச் செயற்படுவதற்கு மாவை சேனாதிராசா தாமாக முன்வர வேண்டும்.

முன்வந்தால், 'புதிய சுதந்திரன்' பத்திரிகையில் அவர் எழுதச் செய்த 'மாவை ஒரு சரித்திரம்' என்ற தொடர் கட்டுரைத் தலைப்புப் போல அவரை மெச்சும். இல்லையேல் சரித்திரத்தையே மாற்றிச் சொல்லித் திட்டும். அவர் புரிந்து கொண்டால் சரி.

– மின்னல் –

## அரிசி - பருப்பு விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எங்களது முந்தைய அரசுகள் கூட இதைச் செய்ய முயற்சித்தன. இது கடினமான பணி. எனது முன்னோர்களுக்குத் தெரியும் பாரம்பரிய பயிர்ச் செய்கையை எப்படிச் செய்வது என்று. ஆனால், துரதிஷ்டவசமாக எந்தத் தலைவரும் இந்த முடிவை எடுக்கவில்லை.

என்னை நியமித்தது பருப்பு மற்றும் அரிசியின் விலையைப் பார்த்துக் கொள்வதற்காக என்றால் அதற்கு நான் தேவையில்லை. அதைவிட மாற்றம் ஒன்றைக் கொண்டு வருவதற்காகவே மக்கள் என்னை ஜனாதிபதியாக நியமித்தார்கள். விசேடமாக இந்த விவசாயத்துறை தொடர்பில்.

நான் ஜனாதிபதிப் பதவியேற்றது முதல் உரத்தை இலவசமாக வழங்கினேன். உண்மையில் விவசாயியின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவே இலவசமாக வழங்கப்பட்டது. அதேபோல், நெல்லின் உத்தரவாத விலையை அதிகரித்தோம் – என்றார்.

## 50 பேரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்த சந்தர்ப்பங்களில் உரிய சுகாதார வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும்.

ஏனைய நாள்களில் தனித்தனியாகச் சென்று மக்கள் வழிபாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்.

சமய அனுஸ்டானங்கள் மற்றும் விசேட வழிபாட்டு தினங்களில் மாத்திரமே இவ்வாறு 50 பேர் வரை ஒன்றுகூடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் –
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் –
076 443 8622

அமெரிக்க லொத்தர் விசா DV-2023

- அமெரிக்காவில் நிரந்தர குடியுரிமை பெறுவதற்கான விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
- 18 வயதிற்கு மேற்பட்ட எவரும் விண்ணப்பிக்கலாம்.
- பிரதான விண்ணப்பதாரிக்கு கடவுச்சீட்டு அவசியம்.
- அமெரிக்க லொத்தர் விசா சேவையில் கடந்த 22 வருடகாலத்தில் எம்மூடாக விண்ணப்பித்த 1000ற்கு மேற்பட்டவர்கள் தற்போது நிரந்தரமாக அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.
- தெரிவு செய்யப்படும் அதிஷ்டசாலிகளுக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல் அனைத்தும் எம்மால் மேற்கொள்ளப்படும்.

முடிவுத்திகதி - 09.11.2021

குறிப்பு : இறுதிநேர நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கு கடைசிவரை காத்திராது இன்றே விண்ணப்பியுங்கள்.



தொடர்புகளுக்கு
அருள் வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.
076 4431 576
இல.10, இ.போ.ச பஸ் டிப்போ எதிரில் பிரதான வீதி, பருத்தித்துறை.
இல.09, அருள் ஜ்வெல்லறி புதிய மாநகர சபை கட்டடத்தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

லாண்ட்மாஸ்டர் விற்பனைக்கு

ஜப்பானில் இருந்து தருவிக்கப்பட்ட K8 - NITIA model லாண்ட்மாஸ்டர் Cobota latest version, Not registered with rota - weeler விற்பனைக்கு உண்டு.
விலை 400,000/=
நேரடியாகப் பார்வையிட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
0767403814

உ

குகமயம்

## நனி நன்றி

முருகன் பணியே முதற் பணியென,
முழுவாழ்வும் ஈந்த எம்தந்தை, கந்தனடியில்,
குகபதம் அடைந்த வேளை வருகை தந்து, துயர் துடைத்து,
ஆறுதல்கூறித் தேற்றிய, அன்புள்ளங்களுக்கும் உறவினர்களுக்கும்
அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், தெரிவித்தவர்களுக்கும்,
இணையங்கள், ஊடகங்கள் வாயிலாகவும் இதய அஞ்சலி
தெரிவித்தவர்களுக்கும், பல்வேறு உதவிகளை உணர்வுடன்
ஆற்றியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளை
வழிநடத்திய பெருமக்களுக்கும், ஆறுதல் கூறி அஞ்சலி
தெரிவித்த சிவாச்சாரியார்களுக்கும், இறுதி ஊர்வலத்திலும்,
தகனக்கிரியையிலும் கலந்துகொண்ட
அன்பர்களுக்கும் நண்பர்களுக்கும்
இறுதி ஊர்வலத்தின் போது காத்திரமான பணியாற்றிய
யாழ் மாநகரசபையினருக்கும்...
"உங்களது மாசற்ற அன்பையும், சேவையினையும்,
பங்களிப்பினையும் நீளநினைந்து,
நவில்கின்றோம்" நனி நன்றி.
முருகா சரணம்!

குமாரதாஸ் மாப்பாணர் குடும்பம்,
மாப்பாணர் வளவு – நல்லூர் – யாழ்ப்பாணம்
24.10.2021

# அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவுக்கு எதிராக மக்கள் வீதிக்கிறங்கினால் இரத்த ஆறு ஓடும்!

## கரு ஜயசூரிய எச்சரிக்கை

நாடளாவிய ரீதியில் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளும் நாட்டுமக்களும் வீதிகளில் இறங்கிப் போராட ஆரம்பித்தால், பாரிய கலவரங்கள் வெடித்து இரத்த ஆறு ஓடக்கூடும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய எச்சரித்திருக்கின்றார்.

அத்தகைய நிலையேற்படுவதற்கு அரசாங்கம் இடமளிக்கக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் சார்பில் கரு ஜயசூரியவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டிருப்பவை வருமாறு -

கல்வித்துறைசார் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள குழப்பநிலைக்கு தீர்வு காணப்படும் என்று நாட்டுமக்கள் அனைவரும் எதிர்பார்த்தனர்.

சம்பந்தப்பட்ட அனைத்துத்தரப்பினரும் பொறுமையுடன் செயற்பட்டிருந்தால் சுமார் இருவருடங்களின் பின்னர் மீண்டும் பாடசாலைகளுக்குச் செல்வதற்கும் தமக்குரிய சிறுவர் பராயத்தை அனுபவிப்பதற்கும் மாணவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கும்.

இருப்பினும் தற்போது மாணவர்கள் மிகவும் துரதிஷ்டவசமான சூழ்நிலைக்கு முகங்கொடுத்திருக்கின்றனர். அதுமாத்திரமன்றி ஆசிரியர்கள் கடந்த காலங்களில் அரசியல்வாதிகளினதும் பொலிஸாரினதும் அடக்குமுறைகளுக்கும் அவமதிப்புக்களுக்கும் இலக்காகினர். முதலில் நாட்டுமக்களின் உணர்வுகளை அரசாங்கம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே தற்போதேனும் பழிவாங்கல் நடவடிக்கைகளை நிறுத்தி, அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்புடன் எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து பாடசாலை கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்குமாறு உரிய தரப்பினரிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

அதுமாத்திரமன்றி மறுபுறம் இரசாயன உரத்திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் நிலையில், அதனால் மிகமோசமான பாதிப்புக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

இரசாயன உரத்துக்குப் பதிலாக சேதன உரத்தைப் பயன்படுத்துவது சுற்றுச்சூழலுக்கு மிகவும் நேயமானதாக இருந்தாலும், உலகின் வேறெந்தவொரு நாடும் மிகக்குறுகிய காலத்துக்குள் உர வகையின் பயன்பாட்டை மாற்றியமைப்பதற்கு அழுத்தம் பிரயோகித்ததில்லை.

அவ்வாறு மாற்றியமைப்பது நடைமுறையில் சாத்தியமான விடயமும் அல்ல. மிகப்பாரியளவிலான சேதன உரப்பயன்பாட்டுக்கு மாறிய பூட்டான் கூட, அந்தச் செயற்திட்டத்தில் வெற்றியடைவதற்கு எதிர்வரும் 2030 ஆம் ஆண்டுவரையில் காத்திருக்கின்றது.

இவையனைத்துக்கும் அப்பால் நாட்டுமக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கின்றார்கள். அதிகரித்துள்ள வாழ்க்கைச்செலவால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளும் நாட்டுமக்களும் வீதிகளில் இறங்கிப்போராட ஆரம்பித்தால், கலவரங்கள் கூட ஏற்படக்கூடும்.

அவ்வாறான நிலை தோற்றம் பெறுவதற்கு இடமளிக்கவேண்டாம் என்று அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றோம்.

உர விவகாரத்தில் விவசாய அமைச்சின் செயலாளர் உள்ளடங்கலாக இதுதொடர்பாக நன்கு தேர்ச்சி பெற்றவர்கள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பகிரங்கமாகவே தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

இந்நிலையில் தற்போது வெவ்வேறு நாடுகளில் இருந்தும் உரத்தை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. உண்மையில் இதனை அரசாங்கம் 6 மாதகாலத்துக்கு முன்னரேயே செய்திருக்கவேண்டும். தற்போது இறக்குமதி செய்யப்படுகின்ற உரவகைகள் உரியவாறான பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதில்லை. எனவே, சாதாரண விவசாயிகளின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அதற்கேற்றவாறு அடுத்தகட்ட நகர்வுகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கின்றோம் என்று கரு ஜயசூரிய அவ்வறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.



## ஒரு கிலோ கீரி சம்பா அரிசி 125 ரூபாவுக்கு சந்தைப்படுத்தல்

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட கீரி சம்பா அரிசி கிலோவொன்றின் விலை 125 ரூபா என்ற ரீதியில் சந்தைப்படுத்த விடுக்கிறோம் என வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதன்படி, அடுத்தவாரம் முதல் சதொச ஊடாக இந்த அரிசி விநியோகம் இடம்பெறும் என அவர் கூறியுள்ளார்.

அதேநேரம் மீண்டும் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்படுமா என்பது தொடர்பாக இப்போதைக்குக் கூற முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.




## கறுப்பு பூஞ்சை காரணமாக மரணம் பதிவு; வெளியான தகவலில் உண்மையில்லை!

கறுப்பு பூஞ்சை காரணமாக கொவிட் தொற்று உறுதியானவர் ஒருவர் உயிரிழந்தார் என வெளியாகிய தகவல்களில் உண்மையில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கராப்பிட்டிய போதான வைத்தியசாலையில் கொவிட் தொற்றுக்கு இலக்காகியிருந்த நபர் ஒருவர் கறுப்பு பூஞ்சை நோயால் உயிரிழந்தார் என சில ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

எனினும் இந்த மரணம் கறுப்பு பூஞ்சை காரணமாக சம்பவிக்கவில்லை என வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் செல்டன் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த நபர் கடந்த செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி உயிரிழந்தார் எனவும், மரணம் தொடர்பில் சந்தேகம் காரணமாக நுரையீரல் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

மரணம் தொடர்பிலான அறிக்கையில் கறுப்பு பூஞ்சைகள் நுரையீரலில் காணப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் சட்ட வைத்திய அதிகாரி நடத்திய பிரேதப் பரிசோதனையின் போது குறித்த நபர் கொவிட், நிமோனியாவால் உயிரிழந்தார் எனவும், கறுப்பு பூஞ்சையால் அல்ல எனவும் வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## எரிபொருள் இறக்குமதி செய்வதற்கு ஓமானிடம் கடன் பெறும் இலங்கை



எரிபொருளை இறக்குமதி செய்ய ஓமான் நாட்டிடம் இருந்து 360 கோடி டொலர் கடனைப் பெற அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இந்தக்கடன்தொகைக்கு மேலதிகமாக எரிபொருளை இறக்குமதி செய்வதற்காக இந்தியாவிடம் இருந்து 50 கோடி டொலர்களை கடனாக பெற்றுக்கொள்ள தயாராக இருப்பதாகவும் திறைசேரியின் அனுமதியை பெற அந்த யோசனை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கம் மன்பில குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, இந்த மாதத்துக்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்யத் தேவையான டொலர் வழங்கப்படும் என மத்திய வங்கியின் ஆளுநர் உறுதியளித்துள்ளார்.

இந்த நிலைமையில் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சிகள் உருவாக்கிய கனவு எந்த வகையிலும் நனவாகாது எனவும் எரிசக்தி அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# நீதி பெற யாது செய்வது?

**இலங்கையில் பொறுப்புக் கூறலை நிலைப்படுத்துதல் தொடர்பாக கடந்த மார்ச் 23ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலகம் அறிவித்திருக்கின்றது.**

**'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில்' மேற்படி 46/01 இலக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.**

**இலங்கையில் மனித உரிமை தொடர்பான குற்றங்களை உள்ளடக்கிய மீறல்கள், துஷ்பிரயோகங்கள் தொடர்பான ஆதாரங்கள், சாட்சியங்களைப் பாதுகாப்பது மேற்படி பொறுப்புக் கூறலை மேம்படுத்துவதற்கு முக்கியமானது என அந்தத் தீர்மானத்தில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் குறிப்பிட்டு, அதனை அங்கீகரித்திருந்தது.**

**அத்தோடு அத் தீர்மானத்தின் கீழ் –**

**இலங்கையில் மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள், அவை தொடர்புடைய குற்றங்கள் சம்பந்தமான தகவல்கள், ஆதாரங்கள் போன்றவற்றைச் சேகரித்தல், ஒருங்கிணைத்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் அவற்றைப் பேணிப் பாதுகாத்தல் ஆகியவை சம்பந்தப்பட்ட விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் திறனை வலுப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.**

**அது மாத்திரமல்லாமல், இக் குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களுக்காகச் செயற்படவும் –**

**இவ்விடயங்களில் தகுதியான நியாயதிக்கம் கொண்ட உறுப்பு நாடுகளின் செயற்பாடுகள் உட்பட்ட நீதித்துறை மற்றும் பிற நடவடிக்கைகளுக்கு ஆதரவாகக் காரியமற்றவும் –**

**அத்தீர்மானத்தில் விதந்துரைக்கப்பட்டிருந்தது.**

**அந்தப் பணிகளுக்கான செயற்பாட்டுத் தளம் – அலுவலகம் – சொற்படத் தொடங்கியிருக்கின்றது.**

**அதையே, இலங்கையின் பொறுப்புக் கூறல் தொடர்பான திட்டம், அது தொடர்பான தீர்மானத்துக்கு அமைய செயற்படத் தொடங்கியிருப்பதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தரப்பு கோடி காட்டியிருக்கின்றது.**

**அந்தத் திட்டச் செயலகம் ஜெனிவாவை மையமாகக் கொண்டு செயலாற்றத் தொடங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.**

**மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை தொடர்பில் ஏற்கனவே ஒரு லட்சத்து இருபதாயிரம் தனித் தனி ஆவணங்களுடன் இந்தக் காப்பகம் செயற்படத் தயாராக இருப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.**

**இந்த அலுவலகத்தை யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தரப்புகள் எவ்வாறு அணுகுவது, எவ்வாறு உரிய வகையில் தொடர்பாடல்களைப் பேணிப் பொறுப்புக் கூறலின் பயனை ஈட்டுவதற்கு ஒத்துழைத்துப் பணியாற்றுவது என்பவை தொடர்பில் இந்தக் கொடூர யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான அராஜகங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தெரியவில்லை. இது விடயத்தில் அவர்களுக்குத் தெளிவுமில்லை.**

**வருடம் தோறும் 'ஜெனிவா அரசியல் யாத்திரை' நடத்தி அரசியல் லாபமீட்ட முயலும் அரசியல்வாதிகள் இது விடயத்தில் சற்றுச் சிரத்தை எடுத்து மக்களுக்குப் புரிய வைத்தால் நல்லது. செய்வார்களா?**

# இலங்கை - கனடா நாடாளுமன்ற நட்புறவு சங்கத் தலைவராக சுரேன்



இலங்கை - கனடா நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்கான இலங்கை - கனடா நாடாளுமன்ற சங்கத்தின் மறுசீரமைப்புக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தக் கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்றதுடன், இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மக்கினோன் விசேட விருந்தினராகக் கலந்துகொண்டார். இந்த நிகழ்வில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவும் கலந்துகொண்டிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் உதயன கிரிந்திகொட செயலாளராகவும், நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், டயானா கமகே மற்றும் இஷாக் ரஹ்மான் ஆகியோர் பிரதித் தலைவர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான கீதா குமாரசிங்ஹ உதவிச் செயலாளராகவும், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

பொதுநலவாயத்தில் பகிரப்பட்ட பங்கெடுப்பு, கொழும்புத் திட்டத்தின் ஊடாக அபிவிருத்தி உதவிகள் மற்றும் இதற்கு மேலதிகமாக இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த கனேடிய சமூகம் போன்றவற்றின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையில் பரஸ்பர நட்புறவு காணப்படுவதாக இங்கு உரையாற்றிய சபாநாயகர் தெரிவித்தார்.

பொருளாதார மற்றும் வர்த்தகத் துறைகள் குறித்து கருத்துத் தெரிவித்த சபாநாயகர், இலங்கைக்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வரும் பத்து நாடுகளில் கனடா காணப்படும் நிலையில், இலங்கையில் தற்பொழுது காணப்படும் புதிய வாய்ப்புக்களைப் பயன்படுத்தி மேலும் முதலீடுகளை மேற்கொள்ளவும், வர்த்தகச் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கும் கனேடியப் பிரதிநிதிகள் முன்வர வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார். கொவிட் - 19 தாக்கம் குறைவடைந்ததும் கனடாவிலிருந்து அதிகமான சுற்றுலாப் பயணிகளை வரவேற்பதற்கு எதிர்பார்த்திருக்கிறோம் எனவும் சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் குழப்பம் மற்றும் முரண்பாடுகள் காணப்பட்டமை மற்றும் வலுவான கல்வி இணைப்புக்கள் காரணமாக இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த கனேடியர்களின் சனத்தொகையால் கனடா நன்மையடைந்துள்ளது என இங்கு கருத்துத் தெரிவித்த இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மக்கினோன் தெரிவித்தார்.

கனடா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு ஜனநாயகம் வரலாற்றின் மையமாக இருப்பதுடன், பன்முகப்படுத்தப்பட்ட ஜனநாயகம் பல்வேறுபட்ட சமூகங்களை உள்ளடக்குவதற்கு சிறந்த வழியென்றும், ஜனநாயகத்தை விஸ்தரிப்பதற்கும் அதனைப் பாதுகாப்பதற்கும் நாடாளுமன்றத்தாலும், நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் சிறந்த பங்களிப்பைச் செலுத்த முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை - கனடா நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் தனது நன்றியுரையில், பல்லினங்களைக் கொண்ட இரு முன்னாள் காலனித்துவ நாடுகளும் சிறந்ததொரு நாளைக்காக ஒத்துழைப்புடன் செயற்பட எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார். அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் ஆளும்கட்சி, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

## பெற்றோர்களின் அனுமதியுடனேயே பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி

பாடசாலை மாணவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படும்போது, பெற்றோர்களின் அனுமதி கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 16 முதல் 18 வயதுக்கு இடைப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கல்வி அமைச்சின் பாடசாலை செயற்பாடுகள் தொடர்பான மேலதிக செயலாளர் எல்.எம்.பி. தர்மசேன இதனைத் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய பெற்றோர்களின் அனுமதிக்கான விண்ணப்பப்படிவம் ஒன்று வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து, பெற்றோரின் கையொப்பம் பெறப்பட்டிருக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தடுப்பூசி ஏற்றல் இடம்பெறும் நிலையங்கள் தொடர்பான தகவல்களை, சுகாதார வைத்திய அதிகாரிகள், அதிபர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள் ஆகியோரிடம் பெற்றோர்கள் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

# அறங்காவலர் மாப்பாணர் நினைவு நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக். 24

அண்மையில் குகபதம் அடைந்த யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி கோவிலின் பத்தாவது அறங்காவலர் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியாரை நினைவு கொள்ளும் நிகழ்ச்சிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன. இந் நிகழ்ச்சிகளை நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலை கூடல் முன்னெடுக்கின்றது.

முதலியார் குகபதம் அடைந்து பதினாறாம் நாளாகிய இன்று காலை நல்லூரான் செம்மணி வளைவினை அண்மித்த பகுதியில் மேற்படி கூடல் மற்றும் குகனேயர் குழாம் அடியவர்களால் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் இப்பூவுலகில் வாழ்ந்த காலத்தினை அடையாளம் கொள்ளும் முகமாக 92 பனம்விதைகள் நாட்டி வைக்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை கூடலின் இணைச் செயலர் சா.சுதர்சன் மேற்கொண்டு வருகின்றார்.

மாலை நாலு மணிக்கு கூடலின் இணைத் தலைவர் இ. இளங்கோவன் தலைமையில் மெய்நிகர் முறையில் பிரார்த்தனை வழிபாடும், உரைகளும் இடம்பெறவுள்ளன. தீப மேற்றல், பிரார்த்தனை ஆகியவற்றுடன் கலாநிதி, செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், பேராசிரியர். என். சண்முகலிங்கன் ஆகியோர்களதும் குகநேயர் குழாம் அடியவர் ஈ.கஜேந்திராவினதும் உரைகளும் கூடலின் இணைச் செயலர் கவிஞர் த.ஜெயசீலனின் கவிப்பாமாலையும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

# இலங்கையில் டெல்டா பிளஸ் திரிவடையும் அபாயம் உள்ளது

## சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை



வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புபவர்கள் மூலம் இலங்கையில் டெல்டா பிளஸ் திரிவடையும் அபாயம் காணப்படுவதாக சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் இதனைக் குறிப்பிட்டார்.

இதேவேளை நாட்டில் டெல்டா பிளஸ் திரிவடையுமாயின் பொதுமக்களின் செயற்பாடு அதற்கு காரணியாக அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே பொதுமக்கள் சுகாதார விதிமுறைகளைக்கடுமையாகப்பின்பற்றுவது அவசியம் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் டெல்டா பிளஸ் திரிவு தொடர்பாக நாட்டில் தொடர்ந்தும் பெற்றுக்கொள்ளப்படும் மாதிரிகள் ஊடாக பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஹேமந்த ஹேரத் மேலும் தெரிவித்தார்.

# மக்களின் நம்பிக்கையை சீர்குலைக்கும் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று!

மக்களின் நம்பிக்கையை சீர்குலைக்கும் வகையில் செயற்படும் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

அவ்வாறு நடந்துகொள்பவர்கள் தொடர்பாக அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளின் செயலாளர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு மாகாண ஆளுநர்களுக்கு அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கிடையில் இடம்பெற்ற கூட்டத்தின்போதே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்துக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் உறுப்பினர்களின் நடவடிக்கை இருந்தால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுப்பது ஆளுநர்களின் கடமை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


அத்துடன் 2021 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலில் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரையும் இணைத்துக்கொள்ள விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses ( 3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.



மாங்கல்யா
லக்ஷ்மி நாராயணா
இல:- 266 பலாலி வீதி.
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
திருமண சேவை
077 197 1667
077 316 4796

மணமகன் விவரம்

பிறந்த திகதி - 1991.09.10 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - சித்திரை
கி.பா - 25 செவ் - 12 இல்
தகைமை - G.C.E A/L
தொழில் - Management Assistant
எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகள்

பிறந்த திகதி -1989.01.27 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அத்தம்
கி.பா - 34 செவ் - 2இல்
தகைமை - G.C.E. A/L தொழில் - Company owner
எதிர்பார்ப்பு - A/L படித்த மணமகள்

பிறந்த திகதி - 1989.22.05 மதம் - இந்து
ஜாதி - விஸ்வகுலம் ஆண் நட்சத்திரம் - கேட்டை
கி.பா - 42 செவ் - 2 இல்
தகைமை - Surveyor தொழில் - அரசசேவை
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச மணமகள் தேவை

பிறந்த திகதி - 1987.11.13 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 64 செவ் - 6இல்
தகைமை - H.N.D.A தொழில் - அரச சேவை
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை

பிறந்த திகதி - 1989.9.10 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூராடம்
கி.பா - 31 செவ் / சூரி- 9இல்
தகைமை - B.Com தொழில் - DO அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள்

பிறந்த திகதி - 1987.06.02 மதம் - இந்து
ஜாதி - K பகுதி நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 20 செவ் - 7 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor Eng மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1993.10.11 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 30 செவ் - 7 இல்
தகைமை - B.Sc Civil Eng தொழில் - Singapour
எதிர்பார்ப்பு - Eng / Doctor மணமகள் தேவை

பிறந்த திகதி -1974.01.08 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - திருவாதிரை
கி.பா - 10 செவ் - 3இல்
தகைமை - Lowyer தொழில் - சட்டத்தரணி
எதிர்பார்ப்பு - 1980 பின்பு A/L படித்த மணமகள். சீதனம் பெரிதாக எதிர்பார்க்கவில்லை

மணமகள் விவரம்

பிறந்த திகதி - 1991.03.05 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - சுவாதி
கி.பா - 18 செவ் 7 இல்
தகைமை - Business Management
தொழில் -Bank Officer
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 27.08.1994 மதம் - இந்து
ஜாதி - பத்தர் பெண் நட்சத்திரம் - பரணி
கி.பா - 32 செவ் சூரி - 2 இல்
தகைமை - B.Sc தொழில் - அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 1992.08.04 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - சித்திரை 2
கி.பா - 3 செவ் - 9 இல்
தகைமை - G.A.Q தொழில் -
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன் தேவை

பிறந்த திகதி - 1990.27.10 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - திருவோணம்
கி.பா - 30 செவ் -7 இல்
தகைமை - BA தொழில் - DO அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச உயர் பதவி மணமகன் தேவை

பிறந்த திகதி - 1990.07.14 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - உத்தரட்டாதி
கி.பா - 23 செவ் - 6 இல்
தகைமை -B.Sc, M.Sc தொழில் - அரச உயர் பதவி
எதிர்பார்ப்பு - Eng/ Doctor அரச உயர் பதவி மணமகன்

பிறந்த திகதி - 26.04.1993 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ரேவதி
கி.பா - 40 செவ் - 8இல்
தகைமை - Cima
தொழில் - Bank accountant
எதிர்பார்ப்பு - அரச சேவை. கொழும்பில் மணமகன்

பிறந்த திகதி -1993.11.01 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - கார்த்திகை
கி.பா - 67 செவ் -1 இல்
தகைமை - H.N.D.A தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரசசேவை யாழ் மணமகன்

பிறந்த திகதி - 1993.09.06 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பரணி
கி.பா - 33 செவ் - 12இல்
தகைமை - .B.Sc தொழில் - DO அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச உயர்பதவி மணமகன்

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்திறூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர்
தொலைபேசி
021 222 3000



Personal English Classes
K Ganesh (BA.Pera)
இந்த தனி வகுப்புகளில் பழக்கும் போது பேச்சு பயிற்சிகளும் இடம்பெறும்.
Grade 7-
GCE OL AL
பட்டதாரிகள் ,
தொழில்புரிவோர்
Spoken Grammar
கற்கமுடியும்.
077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்



இறைச்சிக் கோழி விற்பனை
புறோயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500



- செல்லத்துரை ரவீந்திரன் -


இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 170

**426.சர்வதேச குற்றவியல் மன்றத்தை நேரடியாக அணுக அந்தச் சமர்ப்பணம் வழிவகுத்து தருமா?**

வரக்கூடிய பலன்களை தராசில் நிறுத்து, அறிவு பூர்வமாக, நன்மை தீமைகளை அறிந்து, செயல்பட வேண்டும். முதலாவது தமிழ் மக்கள் தமது சர்வதேச




போராட்டங்களை எப்படி வழியமைத்துக் கொள்வது, அங்கிருக்கக் கூடிய அனுதாப அலைகளை – இந்த மக்கள் நீதிமறுக்கப்பட்டவர்கள் என்றிருக்கும் உணர்வுகளை – எப்படி காரியசித்தியாக்கி கொள்வது என்ற ஒருமுகப்பட்ட பாதையில் பயணிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். தங்கள் வளங்களை பயனுள்ள வழிகளில் எப்படி பயன்படுத்துவது என்று திட்டமிடல் வேண்டும். ஏதோ சிலம்பு கிடைக்கிறது என்பதற்காக அதைச்சுற்றி வெற்றி வாய்ப்பு பெறலாம் என வெளிக்கிட்டு, குடத்தையும் பானையையும் உடைத்து, சிலம்புதான் சரியில்லை என்று போவதில் அர்த்தம் இல்லை. தங்களது அங்கலாய்ப்பில் நிதர்சனம் என்று இல்லாமல் அங்கும் இங்கும் ஓடுவதில் எது வித நன்மையும் விளையப் போவதில்லை, அனுபவங்களை தவிர. முன்னையப் போல் வளங்கள் மட்டும் அல்ல. காலமும் நேரமும் கூட தமிழ் மக்கள் பக்கம் இல்லை.

அச்சறுக்கையாக இருக்கும் எல்லை வேலியில் ஒரு பொட்டுத் துவாரம் இருந்தால் நாய் தலையை ஓட்டி தப்புவதற்கு வழியுண்டு என்று நினைக்கும். ஒரு வழியாக உடம்பையும் இழுத்துப் பக்கத்துக் காணிக்குள் போய்விட்டாலும், அங்கிருந்தெல்லாம் வெளியேறி சுதந்திரமாக ஓடிவிடலாமா என்பதையும் பார்க்கவேண்டும். சட்டங்களும் அப்படித்தான். சில இடைவெளிகள் சில வாயில்களைத் தரலாம். அவற்றில் புகுந்தாலும் வெற்றி பெற்று வெளிவரலாம் என்பது நிச்சயமற்றது. ரோகிங்கிய மக்கள், மியன்மாரின் குடிமக்கள், வன்முறைகளாலும் அட்டூழியங்களாலும் பங்களாதேசத்தை அடைந்தவர்கள். பங்களாதேசம் அவர்களுக்காக – அங்கு அடைக்கலம் தேடியவர்கள் என்பதற்காக – குற்றவியல் நீதிமன்றத்தை நாடியது. ஆனால் தம் நாட்டுக்குள்ளே இருக்கும் தமிழ் மக்களும், முக்கியமாக அகதிகளும், அப்படி அட்டூழியங்களால் பலவந்தமாக வெளியேறி வந்தவர்கள் என பிரித்தானியா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் அணுகுமுறையை எடுக்கும் என்பது சாத்தியமில்லை. கனடா தமிழ் மக்களுக்கான வெளிப்படையான நிலைப்பாட்டை எடுத்தாலும், அவர்களுக்காக குற்றவியல் மன்றத்தை அணுகும் அரசியல் நிலைப்பாட்டில் இல்லை. ஆஸ்திரேலியா, பிரித்தானியாவின் அகதிக் கொள்கைகள் தமிழ் மக்களுக்கு ஆதரவற்றவையாகவே உள்ளன. இராஜதந்திர ரீதியில் அகதி அந்தஸ்து கோரி, அவர்கள் வருவதை நிறுத்தும் பாணியில், ஸ்ரீலங்காவின் ஒத்துழைப்பு கோரி தங்களது உறவை வலுப்படுத்தவே நடவடிக்கைகள் எடுக்கின்றன.

கோரிக்கைகள் வைக்கலாம். எல்லாமே ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

இந்தியாவில் 1977இல் இருந்து இன்று வரை எத்தனை லட்சக்கணக்கான தமிழ் அகதிகள் (ஏதிலிகள்) சீவிக்கிறார்கள். அவர்களுக்கு இந்தியா ஆதரவு தருகிறது. அவர்கள் தங்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்று மீளக் குடியமர்த்தப்படவேண்டும் என்று ஒப்பந்தம் போட்டது. அவை பற்றி இந்தியா சர்வதேசத்தை அணுகியதில்லை. தன்னுடைய வல்லாதிக்கத்தில் தன்னால் செய்ய முடியும் என்ற எதேச்சாரித்துவத்திலும் முன்னெடுத்தது. தமிழ் மக்களது அரசியல்தான் பின்னால் இந்தியாவைக் கூட ஸ்ரீலங்கா 13ஆவது சரத்தை, இவற்றுக்காக முதலில் அமுல்படுத்தக் கோருகிறது. எங்கே ஆணித்தரமான வழிகள் உண்டோ, அவற்றில் ஆதாரம் தேடாமல், ஆக்கி கொள்ளாமல், அரிசிக்கும் காய்கறிக்கும் எங்கெங்கோ அலைந்து கொண்டு நளினம் செய்யப்படுகின்றது.

ஏதோ 3, 4, 5 நட்சத்திர விருந்து படைத்து விடுவோம், பக்கத்து கடை சாப்பாடு தேவையில்லை என்ற மாதிரி இப்பொழுது தமிழ் மக்கள் பசியை உணர்கிறார்கள்.

**427.தமிழ் மக்களுக்கு நடந்தது, நடப்பது இனப்படு கொலை என சர்வதேசம் ஏற்றுக்கொள்கிறதா?**

இங்கு சர்வதேசம் என்பதும் இனப்படுகொலை என்ற கூற்றும் பொதுவெளியில் பேசப்படும் அர்த்தத்திலிருந்து சட்ட அடிப்படையில் பார்க்கப்படவேண்டும்.

ஐ.நா. போன்ற கட்டமைப்பிலுள்ள சர்வதேசம் வேறு. அது சர்வதேச நாடுகளினாலானாலும் அவை அந்தக் கட்டமைப்பின் வழிமுறை, பொறிமுறைகளுக்குக் கட்டுப்பட்டவை. தனித்தனியான அபிப்பிராயங்கள், அவர்களுக்கிடையே இருந்தாலும் கட்டமைப்பின் ஊடாகத்தான் அந்த சர்வதேசத்தின் அபிப்பிராயம் வெளிப்படுத்தப்படும். அது போலவே முஸ்லிம் நாடுகளை உள்ளடக்கிய முஸ்லிம் நாடுகள் ஒன்றியம், ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய யூனியன், இந்தியக் கடல் பரப்பில் இருக்கும் சார்க் நாடுகள் என கட்டமைப்புக்கள் உண்டு. அவையெல்லாம் நடந்த அட்டுழியங்களை ஒட்டி ஆதங்கப்பட்டுள்ளன. சில தங்களது அரசியல் போக்கை அனுசரித்து இனப்படுகொலை என சொன்னாலும் இந்தியாவை தவிர, எதுவும் அப்படியான தீர்மானம் எடுத்ததில்லை.



இந்த கட்டமைப்புக்கள் இயங்கும் சர்வதேசத்தை விட, பரந்தளவில் அந்தந்த நாடுகளின் மக்கள், அவர்களது அபிப்பிராயம் என்ற ஒரு சர்வதேசமும் உண்டு. அது சட்டத்தின் மேலாக மனச்சாட்சியில் இயங்குவது “அந்த சர்வதேசம்” தங்களது அபிப்பிராயங்களில் தமிழ் மக்களுக்கு நடந்த, நடக்கின்ற அட்டுழியங்கள் இனப்படுகொலை என்றே தெரிவித்துள்ளன.

அதன் வெளிப்பாடுகளாக பெயர்பெற்ற மனித உரிமை சட்டத்தரணிகள் சட்டவாளர்கள், அவற்றில் ஈடுபடும் சர் வதேச அரசியல் சாரா அமைப்புகள் அப்படியான தீர் மானம் எடுத்து பொதுக் கருத்துக்களாக வெளியிட்டு அதனை ஐ.நாவுக்குப் பாரப்படுத்தலாம். ஆனால் ஐ.நா. போன்ற கட்டமைப்புக்களுக்கு, அவற்றின் நடவடிக்கைகளுக்கு, அபிப்பிராயங்களாகக் கருதப்படுமேயொழிய, நடைமுறைப்படுத்த கூடிய அதிகாரம் கொண் டவையாக அமைவதில்லை. தமிழ் மக்களைப் பொறுத்தளவில் அப்படியான ஆதரவான அபிப்பிராயங்கள் பலவுண்டு. ஆனால் எமது ஒற்றுமையற்ற, சிதறுண்ட அரசியலால், அவற்றை நாம் அறுவடைகள் செய்ததில்லை.

ஐ.நா. தனது பொறிமுறைகள் வழிமுறைகளில் ஆராய்ந்து எடுக்கும் தீர்மானங்களை, அமுல்படுத்தக் கூடிய நிறைவேற்று அதிகாரம் கொண்டிருக்கின்றன. அவை கூட முன்னர் சொல்லியபடி, வலுவான அரசுகளால் நிர்ணயிக்கப்படுகின்றன.

அப்படி வலுவுள்ள அரசுகளால் நிர்ணயிக்கப்படாத, அரசு சாரா சுயாதீன தீர்மானம் ஒன்று தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் விசாரணைகளின் பின் மக்களின் நிரந்தரத் தீர்ப்பாயத்தினால் (Permanent People's Tribunal) ஸ்ரீலங்காவை ஒட்டி செய்யப்பட்டது. முடிவில் அங்கு நடந்தவை, நடப்பவை இனப்படுகொலை எனத் தீர்ப்புகள் காணப்பட்டாலும், அதை அடைந்த பாதைகள் முக்கியம், அது, எங்களது அரசியலின் சாட்சியங்கள் கூட.

(வளரும்)



# RADIANT DAWN

**A Sunday Supplement in English to Kalaikkathir**

**Page I** — **Sunday the 24th of October 2021**


**We welcome students' articles in word for publication**

**-Editor-**


kalaikkathiredu@gmail.com





## An exercise on passive voice for Grade 8 and 9 students.

Ranjan asked a Coca Cola dealer about the history of the drink. Here are the questions he asked. Read the questions and complete the description. The first one is done for you.

1. How many gallons do they sell every year?
2. Who invented the drink?
3. What name did they give to the drink?
4. Who bought the business later?
5. Where and when did they open the first factory?
6. How many bottles and cans have they produced so far?

### THE DEALERS DESCRIPTION

1.6 billion gallons (1) *are sold* are sold. every year in over one hundred and sixty countries.The drink (2) --------------- by Dr. John Pemberton in Atlanta as a health drink on 8 May 1886 but it (3)--------------- the name Coca Cola by his partner, Frank Robinson, because it was originally made from coca plant. In the first year they sold only nine drinks a day. The business (4)-----------------by a man called Asa Candler in 1888 and the first factory(5)--------------- in Dallas, Texas, in 1895. Coca Cola is still made there. Billions of bottles and cans (6)--------------- since1895, but the recipe is still kept a secret.

Answers:- 1. are sold / 2. was invented / 3. was given / 4. was bought / 5. was opened / 6. have been produced

## An easy exercise for grades 4 and 5 kids

*Fill in the blanks with the correct verbs from the box.*

*bakes barks blows burns crawls drives falls flies flows hoots rings rolls sails shines swims ticks*

01. A wheel --------------
02. A ship ----------------
03. The sun --------------
04. The clock ------------
05. A fish -----------------
06. A dog -----------------
07. A baker ---------------
08. A baby ----------------
09. The wind ----------------
10. An owl -------------------
11.Fire ------------------------
12. A plane ------------------
13. A telephone -------------
14. A driver ------------------
15. Rain ----------------------
16. A river --------------------




Answers :- 1- rolls/ 2- sails/ 3-shine / 4- ticks/ 5- swims /6-barks/ 7- bakes/ 8 crawls /9- blows/ 10-hoots/ 11- burns /12- flies / 13-rings/ 14- drives/ 15-falls/ 16- flows/

## For grade 9 and 10 students . Can you complete these proverbs?

*Choose the correct endings from the box.*
*Write the number of the correct endings in the given lines.*

| A. | B |
|---|---|
| (a) An apple a day -------------------------- | 01. according to your cloth. |
| (b) Birds of a feather ----------------------- | 02. makes the most sound. |
| (c) Cut your coat --------------------------- | 03. enchantment to the sight. |
| (d) Distance lends -------------------------- | 04. are soon parted. |
| (e) Empty vessels --------------------------- | 05. sweep well. |
| (f) A fool and his money-------------------- | 06. keeps the doctor away. |
| (g) A hungry man is ------------------------ | 07. tastes sweetest. |
| (h) Forbidden fruit ------------------------- | 08. a silver lining |
| (i ) Every cloud has------------------------ | 09. flock to together. |
| (j) New brooms ----------------------------- | 10. an angry man. |



Answers : - a-6 / b-9 / c-1 / d- 3 / e - 2 / f - 4/ g - 10 / h - 7/ i - 8 / j - 5

## A CLOZE TEST FOR GRADE 9 AND 10.

Chose the correct word from the box and fill in the blanks to complete the following passage

bargain/ expose / fixed / fruit / home / items / market / our / polluted / quick / receipt / saves / sell / sun

### STREET MARKETS

Street markets and street sellers have become a common sight in Sri Lanka. They sell vegetables (1) ............. ,sweets and ornaments. Some even (2)................ clothes. We are used to buying (3) ................. provisions at the fair once a week.It is easier to buy our needs on our way (4)............... from work.

Buying in the street has its advantages. You can (5)..................with the sellers..Their prices are not always (6) ................ and things are usually cheaper. Bargaining is an art if you do it properly, you may be lucky too. Street (7) ................ customers deal directly with the sellers and this (8) ............... time both for the customer and the seller. There are no bills, no (9) .................. to be issued and transactions are (10) .............. and simple.

There are disadvantages as well.Street markets (11).................. their wares to too much (12)................and air. The food gets (13) .................. and can be unhygienic. But the street markets are never short of buyers. Neither are they short of (14) ............ for sale.

Answers : -1. fruits / 2. sell/ 3. our / 4. home / 5. bargain / 6. fixed / 7. market / 8. saves / 9. receipt / 10 . quick / 11. expose / 12. sun / 13. polluted / 14. items

## A COMPREHENSTION EXERCISE FOR GRADES 9 AND 10.

Given below are details about SriLanka. Match with their sub-headings Number 1 is done for you. Put the numbers of the sub-headings in the boxes next to the details.

1.CLIMATE / 2. TOURIST ATTRACTION / 3. RELIGION/4. GOVERNMENT/ 5. ECONOMY/ 6. LOCATION/ 7. AREA/ 8. PRECIOUS STONES /9 LANGUAGES/ 10 CAPITAL/

(a) SriLanka is an Island nation that lies to the South West of India. [ ]
(b) It is a Republic with a Presidential and Parliamentary system. [ ]
(c) It is nearly sixty five thousand square kilometres in extent. [ ]
(d) It is a tropical country with an average temperature of 23 degrees C. [ ]
(e) Tea, rubber and spices are the chief exports that earn foreign exchange. [ ]
(f) Ancient ruins and Wildlife Parks are places the visitors should not miss. [ ]
(g) People in SriLanka speak Sinhala, Tamil and English. [ ]
(h) There are Budhists, Hindus , Christians and. Islamist in the island. [ ]
(i) Sri Kote Jayawardnepura is the Capital city of SriLanka. [ ]
(j) Sri Lanka is famous for its diamonds, ruby , emeralds and topaz. [ ]

Answers:- a - 6/ b - 4/ c - 7 / d- 1/ e - 5/ f - 2 / g - 9 / h - 3 / i - 10 / j - 8

**Reading is to the mind what exercise is to the body - Joseph Addison**

# Jaffna Fort - Tourist Attraction





Jaffna Fort romanized: Yālppāṇak Kōṭṭai; is a fort built by the Portuguese at Jaffna, Sri Lanka in 1618 under Phillippe de Oliveira following the Portuguese invasion of Jaffna. Since long long ago before Portuguese invasion there stood and still stands smart the Kottai Muneeswaran temple, the sacred shrine of the Hindus. Devotees in large number visit this temple and worship with great piety and a sense of respect and fear.

The fort is located near the coastal village of Gurunagar. Due to numerous miracles attributed to the statue of Virgin Mary in the church nearby, the fort was named as Fortress of Our Lady of Miracles of Jafanapatão (Fortaleza de Nossa Senhora dos Milagres de Jafanapatão). It was captured by the Dutch under Rijcklof van Goens in 1658 who expanded it. In 1795, it was taken over by the British, and remained under the control of a British garrison till 1948. As the only large military fort in the country, due to the presence of only government and military buildings within its ramparts, it was garrisoned by a detachment of the Ceylon Army.

With the onset of the Sri Lankan Civil War it came under siege on several occasions and was the scene of pitched battles. From 1985 to 1995 it was under the control of the LTTE during this time the LTTE destroyed several of key features to stop the Army getting control due to the site being used to stage attacks but it was recaptured by the Sri Lanka Army in 1995 after a 50-day siege during Operation Riviresa. It was also vandalised by locals to rebuild houses damaged from the war . Today it remains garrisoned by a detachment of the Sri Lanka Army with limited access to visitors and is being renovated with Dutch funding.

# Naguleswaram Temple



Keerimalai Naguleswaram temple historically known also as the Thirutambaleswaram Kovil of Keerimalai, is a famous Hindu temple in Keerimalai, located north of Jaffna, Northern Province, Sri Lanka in the suburb of Kankesanthurai. One of the oldest shrines of the region, it is the northernmost of the island's Pancha Ishwarams of Lord Siva, venerated by Hindus across the world from classical antiquity. Hindus believe its adjacent water tank, the Keerimalai Springs, to have curative properties, which irrigation studies attribute to high mineral content sourced from underground.

Keerimalai is 50 feet above sea level, and situated west of Palaly. Hindus flock in large numbers on Aadi Amaavaasai day which falls during the Tamil month of Aadi, to carry out rituals for their forefathers and bathe in the natural springs. Carried out largely by men, "Keerimalai" is particularly famous for this festival.





# Keerimali Springs

The Pandyan-Cholan princess Maruthapura Veeravalli built the Maviddapuram Kandaswamy Temple two miles from Naguleswaram in 785 CE after she was cured of her facial disfigurement at the Keerimalai springs, and later married the King Ukkira Singhan a scion of Vijaya's dynasty, at the temple's springs. Eliandurvan, one of the four brothers of the Mukkuvar king Vedi Arasan ruled at Keerimalai.

"Maasi Magam" and "Aadi Amaavaasai" festival days, the latter falling during the Tamil month of "Aadi" (mid July-mid August) brings Hindu pilgrims to the town to carry out rituals for their forefathers and take a divine dip in the natural springs. These rituals are usually carried out by men.

Following destruction by the Portuguese in 1621, Naguleswaram's Brahmin priests hid the main icons in a well before fleeing, which were since recovered. After a gap of almost 400 years in 1894 ACE, local Sri Lankan Tamil Hindu people of under the urging of Hindu reformer Arumuka Navalar came together and built the present temple. However the temple was destroyed by fire in 1918 and had to be rebuilt.

On Monday 6 February 2012, a major reconstruction of the temple was completed under the authority of the chief priest, Sivasri Naguleswara Kurukkal, and Naguleswaram's Mahakumbhabhishekam took place. It was a monumental event with thousands of devotees who came to pray and receive blessings.

# MISS CEYLON

1. I saw her striding down
An unnamed , unlit road.
I was sure, pretty sure,
That I had seen her earlier.

2. But I couldn't place her
For she had an old forlorn face,
A vacant look , shrunken cheek,
Lined with dry salt , drooped lip.

3. I followed her and caught up
For she was staggering , unsteadily,
At a snail's pace - I thought ...
She might fall flat and faint.


4. I hailed her , Hey! Hey!...
Where are you going?
"I don't know" she moaned.
What's your name? I demanded......

5.` " Lanka" , she wept and wailed.
Now, I knew her, I recalled.
Her youthful figure and vigour.
When she was Miss Lanka.

6. What has happened to you?
I enquired. taking pitty on her.
My own sons.... My own sons..
Have m - - - - - ed me, she gasped.

- Sharmili -

# SEAT BELTS



" Click!" That's the sound of safety. That's the sound of survival. That's the sound of a seat belt locking in place. Seat belts save lives and that's a fact. That's why I don't drive anywhere until mine is on tight. Choosing to wear a seat belt is simple as choosing between life and death. Which one do you choose?

Think about it. When you are driving a in a car , you may be going 60 miles per hour or faster. That car is speeding down the road. Then somebody ahead of you locks up his or her breaks. Your driver doesn't have time to stop. The car that you are in crashes. Your car was going 60 miles per hour . Now it has suddenly stopped. Your body, however, is still going at 60 miles per hour. What's going to stop your body? Will it be the windshield or your seat belt ? Every time you get into a car you make that choice. I choose the seat belt.

Some people think that seat belts are uncomfortable . They think seat belts cramp their style. To them I say, what's more uncomfortable? Wearing a seat belt or flying through a car's windshield? What's more comfortable? Being safely anchored to a car or skidding across the road in your jean shorts? Wearing a seat belt is both cooler and more comfortable than the alternatives.

Let's take a closer look at your choices. If you are not wearing the seatbelt , you can hop around the car and slide in and out of your seat easily. That sounds like a lot of fun. But you are also more likely to die or suffer serious injuries. If you are wearing a seat belt , you have to stay in your seat. That's no fun. But, you are much more likely to walk away unharmed from a car accident. Hmm... a small pleasure for a serious pain. That is a tough choice I think that will avoid serious pain.

You will not be killed in a car wreck if you are wearing a seat belt. You are much less likely to get seriously injured if you are wearing one. So why not take the safer way? Why not go the way that has proven to result in fewer deaths . You do want to live , don't you?

Wearing a seat belt does not make you " invincible" . You still can get hurt or killed while wearing your seat belt. But, wearing them has proven to be safer than driving without them . You are much less likely to get seriously injured if you are wearing your seat belt.

# BE A PLAIN MIRROR

Oh mirror !
My friend,
You have
The power
To reflect
The faces
That stand
In front of you.

Can you show
The true faces
Of those
Who stand
In front of you?
No, I'm sure
You don't have
That ability.

Do not ever try
To acquire
Such a power;
I warn you my dear,
You know why...
Just think of
What happened
To those men!

Men who showed
The true faces
Of men of ....
High standing!

They vanished,
Or their wives
And children
Found their torsos
In gutters
One sad morning.

Some lay far away
On highways
With both eyes open
But more than two
Open and red,
For they tried
To open many others'
To atrocities around.

So my dear friend,
Be content with
Your power
To reflect only
The exterior and
Not the interior.
Never be a scanner,
Be content as
A plain mirror.

-T. Kiruthika -

# A Comprehension Exercise for Grades 9 and 10. Read the passage and answer these questions.

The Colosseum is an ancient stadium in the centre of Rome. It is the largest of its kind. It is very old. They started building it in the year 70 . It took ten years to complete it. It is still there today.



In ancient Rome , men fought each other in it. They fought against lions, tigers and bears. Oh my ! It was dreadful. But most of the people loved it. As many as 80,000 Romans would pack inside the stadium to watch them. These gruesome events went on till 523.

The Colosseum had been damaged many times over the years. It was struck by lightning in the year 217. This started a fire . Much of the Colosseum is made of stone. But the fire damaged the upper levels made of wood . It took many years to repair the damage. It was not finished until 240.

The worst damage happened in 1349. A mighty earthquake shook Rome and the Colosseum collapsed . Pieces of the arena were all over the ground. Many people took away the stones and used them to repair their houses and churches. The damage to t the Colosseum was never repaired. It is a good thing that its outer wall still stands strong.

Today the Colosseum is one of Rome's most popular tourist attraction. People from all over the world " throng" in Italy to see it. The Pope leads a big march around the Colosseum every Good Friday. It is a well known symbol and it has even appeared on the back of a coin.

1. What happened to the Colosseum first?

2. How long did the Romans take finish building the Colosseum?

3. What caused the fire that damaged the upper levels of Colosseum?

4. What was the Colosseum used for first?

5. Which caused the most damage to the Colosseum?


6. What did the people do with the stones they took away?

7. What is meant by " gruesome"? ( exciting, horrifying , funny, boring) .

8. Which was not a way in which the Colosseum was NOT damaged?
(a) earthquake. (b) tsunami. (c) lightning. ( d) fire

9. How useful is Coliseum today?

10. Was Coliseum a stadium or a fun city?





# 'No compromise on Taiwan'

## - China warns US

China on Friday urged Washington to tread carefully on Taiwan after President Joe Biden said the US would defend the self-ruled island from attacks by Beijing.

On Thursday (October 22), China's foreign ministry stated that it will not make concessions or compromises on matters concerning its vital interests and sovereignty.

China also advised the United States to exercise caution in Taiwan after President Joe Biden stated that the US would defend the self-ruled island against Chinese assault.

"China has no room for compromise on issues involving its core interests, " foreign ministry spokesman Wang Wenbin said, warning that Washington "should act and speak cautiously on the Taiwan issue."

China, Russia aware of US' military might, will defend Taiwan if Beijing attacks: Biden

Earlier, US President Joe Biden said in a CNN town hall meeting that the United States would come to Taiwan's defence if it came under attack by China.

"Yes, we have a commitment to do that," Biden said on Thursday when asked if the United States would defend Taiwan if China attacked the country.

He also said that China and Russia know the United States has the most powerful military in the history of the world.

Communist China considers self-ruled Taiwan to be its own territory and has promised to take the island one day, using force if necessary.

Beijing's bellicose rhetoric has increased in recent years, fueling worries that the island of 23 million people could become a major global flashpoint.

# WHO Recommends Malaria Vaccine



The World Health Organization (WHO) is recommending widespread use of the RTS,S/AS01 (RTS,S) malaria vaccine among children in sub-Saharan Africa and in other regions with moderate to high P. falciparum malaria transmission. The recommendation is based on results from an ongoing pilot programme in Ghana, Kenya and Malawi that has reached more than 800 000 children since 2019.

“This is a historic moment. The long-awaited malaria vaccine for children is a breakthrough for science, child health and malaria control,” said WHO Director-General Dr Tedros Adhanom Ghebreyesus. “Using this vaccine on top of existing tools to prevent malaria could save tens of thousands of young lives each year.”

Malaria remains a primary cause of childhood illness and death in sub-Saharan Africa. More than 260 000 African children under the age of five die from malaria annually. In recent years, WHO and its partners have been reporting a stagnation in progress against the deadly disease.

"For centuries, malaria has stalked sub-Saharan Africa, causing immense personal suffering,” said Dr Matshidiso Moeti, WHO Regional Director for Africa. “We have long hoped for an effective malaria vaccine and now for the first time ever, we have such a vaccine recommended for widespread use. Today’s recommendation offers a glimmer of hope for the continent which shoulders the heaviest burden of the disease and we expect many more African children to be protected from malaria and grow into healthy adults.”

Key findings of the pilots informed the recommendation based on data and insights generated from two years of vaccination in child health clinics in the three pilot countries, implemented under the leadership of the Ministries of Health of Ghana, Kenya and Malawi. Findings include: Feasible to deliver: Vaccine introduction is feasible, improves health and saves lives, with good and equitable coverage of RTS,S seen through routine immunization systems. This occurred even in the context of the COVID-19 pandemic.

Reaching the unreached: RTS,S increases equity in access to malaria prevention.

Data from the pilot programme showed that more than two-thirds of children in the 3 countries who are not sleeping under a bednet are benefitting from the RTS,S vaccine.

Layering the tools results in over 90% of children benefitting from at least one preventive intervention (insecticide treated bednets or the malaria vaccine).




Kushinagar International Airport inaugurated by 95 Buddhist monks, SL Minister

A total number of 111 passengers, including 95 Buddhist monks from Sri Lanka, landed at the newly-built Kushinagar International Airport, marking the first international flight to land at the airport.







**The first consignment of nano fertilizers from India arrived during early hours of 20th October 2021.**

# எழில் கதிர்







## இந்தக் காலத்து அழகுக் குறிப்புக்கள்

**வெள்ளரிக்காய்**

வெள்ளரிக்காயை கண்களில் சிறிது நேரம் வைத்து அமைதியாக உட்கார்ந்தால், கண்களில் இருக்கும் சோர்வு நீங்கி, கருவளையங்களும் நீங்கிவிடும் என்று பாட்டிகள் சொல்வார்கள். எனவேதான் இப்போதும், எந்த ஒரு அழகு நிலையங்களுக்கு சென்றாலும், முகத்திற்கு பேஸ் மாஸ்க் போட்ட பின், கண்களுக்கு வெள்ளரிக்காய் துண்டுகளை வைக்கின்றனர்.

**முகத்தை கழுவுதல்**

முகத்தை தினமும் மூன்று முதல் நான்கு முறை குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இதனால் முகத்தில் உள்ள அழுக்குகள் நீங்கி, முகம் பொலிவாக இருக்கும்.

**ஆவி பிடித்தல்**

ஆரம்ப காலத்தில் முக அழகைப் பராமரிக்கவென தனி சிகிச்சைகள் இருக்காது. ஆகவே அப்போது பெண்கள் ஆவி பிடித்துத் தான், அழகைப் பராமரித்து வந்தார்கள். எனவே முகத்தில் உள்ள பருக்களை போக்குவதற்கு ஆவி பிடித்தால், பருக்கள் வராமல் தடுக்கலாம்.

**பழங்கள்**

கடைகளில் விற்கும் பேஸ் மாஸ்க்குகளை போடுவதற்கு பதிலாக, பழங்களை வைத்து மாஸ்க் போட்டால், அதில் உள்ள சத்துக்கள் முகத்தை பளிச்சென்று பொலிவுற வைக்கும். அதிலும் மாம்பழம், பப்பாளி, எலுமிச்சை, திராட்சை, ஸ்ட்ரோபெரி போன்றவை மாஸ்க் போடுவதற்கு மிகவும் சிறந்த பழங்களாகும்.

**முடி மசாஜ்**

தேங்காய் எண்ணெயை வெதுவெதுப்பாக சூடேற்றி, தலைக்கு தடவி, நன்கு 20 நிமிடம் மசாஜ் செய்து, 30 நிமிடம் ஊற வைத்து குளித்தால் முடி வளர்ச்சி அதிகரிப்பதோடு அடர்த்தியாகவும் வளரும். குறிப்பாக இரவில் தலைக்கு மசாஜ் செய்துவிட்டு காலையில் குளிப்பது நல்ல பலனைத் தரும்.

**தயிர்**

கூந்தலுக்கு இரசாயனம் கலந்த கண்டிசனர்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக தயிரைப் பயன்படுத்தினால், கூந்தல் நன்கு பட்டுப் போன்று, மென்மையாக இருக்கும்.

**எலுமிச்சை**

பாட்டிகள் சொல்வதில் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டியவைகளில் முக்கியமானவை எலுமிச்சையை தலைக்கு பயன்படுத்துவதுதான். ஏனெனில் எலுமிச்சையின் சாற்றினை தயிருடன் சேர்த்து கலந்து, தலைக்கு மசாஜ் செய்து குளித்தால், தலையானது சுத்தமாக பொடுகின்றி இருக்கும். மேலும் கூந்தல் உதிர்தலும் தடைப்படும்.

**நெய்**

உதடுகள் மென்மையாகவும், வறட்சியின்றியும் இருப்பதற்கு லிப் - பாம்களை பயன்படுத்தாமல், சிறிது நெய்யை தடவி வந்தால், உதடுகளில் வெடிப்புகள் ஏற்படாமல் தடுக்கலாம்.

**கடுகு எண்ணெய்**

கைகள் மற்றும் கால்களில் வளரும் முடியை எடுப்பதற்கு வக்ஸிங் செய்வோம். அவ்வாறு வலியை உண்டாக்கும் வக்ஸிங்கை செய்வதற்கு பதிலாக, தினமும் காலையில் எழுந்ததும் கைகள் மற்றும் கால்களுக்கு கடுகு எண்ணெய் கொண்டு மசாஜ் செய்து பின் குளிக்க வேண்டும். இதனைத் தொடர்ந்து தினமும் செய்து வந்தால் கைகள் மென்மையாக முடியின்றி இருக்கும். இதனால்தான் நமது பாட்டிகள் கைகள் மற்றும் கால்களில் முடி இல்லாமல் இன்றும் இளமை மாறாத தோற்றத்தில் காணப்படுகின்றனர்.

## சரும நிறத்தை அதிகரிக்க இலகுவான சில அழகுக் குறிப்புகள்

இன்று சரும நிறத்தை அதிகரிக்கச் செய்யக் கூடிய எளிய அழகு குறிப்புகள் பற்றித் தான் நாம் தெரிந்து கொள்ளப் போகிறோம். அழகு என்பது அவர வர் குணம் சார்ந்தது என்று சொல்வது உண்மை தான். இருப்பினும் அதை யாரும் ஏற்றுக்கொள்வது இல்லை. சொல்லப்போனால் பழங்காலத்தை விட இக்காலத்தில்தான் அதிக சருமப் பிரச்சினைகளை சந்திக்க நேரிடுகிறது. இதற்கு மோசமான சுற்றுச்



சூழல் மட்டுமன்றி, ஆரோக்கியமற்ற பழக்கவழக்கங்களும் பல ஆரோக்கிய பிரச்சினைகளும் தான் காரணம்.

முகப்பரு, கரும்புள்ளிகள், வறட்சியான சருமம் போன்றவற்றால் பொலிவிழந்த மற்றும் அசிங்கமான முகத்தை பலரும் பெறுகிறோம். அதற்காக நம் முன்னோர்கள் எந்த ஒரு சரும பிரச்சினைகளையும் சந்தித்ததில்லை என்றில்லை. பழங்காலத்தில் நம் முன்னோர்கள் தங்களது அழகை மேம்படுத்த எந்த ஒரு இரசாயனம் கலந்த அழகு சாதனப் பொருட்களையும் பயன்படுத்தவில்லை. மாறாக இயற்கைப் பொருட்களைக் கொண்டுதான் தங்களது சருமத்தைப் பராமரித்தார்கள்.

இங்கு அப்படி பழங்காலத்தில் பின்பற்றப்பட்டு வந்த அழகுக் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை தினமும் பின்பற்றி வந்தால், நிச்சயம் உங்கள் சரும நிறம் அதிகரிப்பதோடு, சருமப் பிரச்சினைகளின்றி பொலிவோடு காட்சியளிக்கலாம்.

ரோஸ் வோட்டர் சரும அழகை அதிகரிக்க மிகவும் பயன்படுகின்றது. எனவே இரண்டு தேக்கரண்டி ரோஸ் வாட்டருடன், இரண்டு தேக்கரண்டி காய்ச்சாத பால் சேர்த்து நன்றாக கலந்து சருமத்தில் பூச வேண்டும்.

பின்பு பத்து நிமிடம் கழித்து சருமத்தை கழுவ வேண்டும். இவ்வாறு தினமும் செய்து வர சரும செல்களுக்கு புத்துணர்ச்சி கிடைக்கும். இதனால் என்றும் சருமம் அழகாகவும் பளபளப்பாகவும் காணப்படும்.

**பால் மா மற்றும் எலுமிச்சைச் சாறு**

பால் மாவில் எலுமிச்சைச் சாறு மற்றும் தேன் சேர்த்து பசையாக்கி முகத்தில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து, பின் முகத்தை கழுவ வேண்டும். இப்படி செய்து வந்தால், முகத்தின் நிறம் அதிகரிப்பதை உங்களால் உணர முடியும்.

**ஓட்ஸ் மற்றும் புளித்த தயிர்**

ஓட்ஸை முதல் நாள் இரவிலேயே ஊற வைத்து, மறுநாள் காலையில் அதனை அரைத்து பசை போல செய்து, புளித்த தயிர் சேர்த்துக் கலந்து, முகத்தில் தடவி ஊற வைத்து கழுவவேண்டும். இப்படி தொடர்ந்து செய்து வந்தால், நல்ல பலனை விரைவில் காணலாம்.

**உருளைக்கிழங்கு**

எலுமிச்சையைப் போலவே, உருளைக்கிழங்கிலும் வெளிற்றும் தன்மை அதிகம் உள்ளது. ஆகவே உருளைக்கிழங்கை பசையாக்கி அதனை தினமும் முகத்தில் தடவி நன்கு ஊற வைத்து கழுவினால், முகம் பொலிவோடு மின்னும்.

**துளசி**

துளசியில் உள்ள அன்டி - ஒக்ஸிடன்ட் மற்றும் ஏனைய ஊட்டச்சத்துக்கள், சரும செல்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, சருமத்தை பொலிவோடும் ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்ளும். முக்கியமாக துளசி முகப்பரு பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வளிக்கும். அதற்கு துளசியை அரைத்துப் பசையாக்கி முகத்தில் தடவி 15 - 20 நிமிடம் ஊற வைத்து கழுவவேண்டும்.

**குங்குமப்பூ**

குங்குமப்பூவை பாலுடன் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 20 - 30 நிமிடம் ஊற வைத்து கழுவ, குங்குமப்பூவில் உள்ள வெளிற்றும் தன்மையினால், சருமத்தில் உள்ள கருமை நீங்குவதோடு, சருமத்தின் நிறமும் மேம்பட்டு காணப்படும். அதிலும் இந்த செயலை தினமும் ஒருவர் பின்பற்றினால் சீக்கிரம் மாற்றத்தைக் காணலாம்.

**மஞ்சள் மற்றும் தக்காளி**

மஞ்சள் மற்றும் தக்காளி, சாற்றினை ஒன்றாக கலந்து பசை செய்து, முகத்தில் தடவி மாஸ்க் போட்டு வந்தால், அது சருமத்தின் நிறத்தை அதிகரிக்கும்.

**பாதாம் எண்ணெய்**

பாதாம் எண்ணெயை வெதுவெதுப்பாக சூடேற்றி, முகத்தில் தடவி மசாஜ் செய்து நன்கு ஊற வைத்தால், முகத்தில் இரத்த ஓட்டம் அதிகரித்து, முகம் பிரகாசமாக இருக்கும்.

**கடலை மா**

கடலை மாவில் மோர் சேர்த்து கலந்து பசை செய்து, முகத்தில் தடவி உலர வைத்து கழுவ வேண்டும். இப்படி அன்றாடம் செய்துவந்தால், சருமத்தின் நிறம் அதிகரிக்கும்.

**புதினா**

புதினாவில் புத்துணர்ச்சியூட்டும் தன்மை அதிகம் உள்ளது. மேலும் சருமத்தில் உள்ள அழுக்குகளை முற்றிலும் வெளியேற்றும் சக்தியும் உள்ளது. அதற்கு புதினா இலையை அரைத்து சாறு எடுத்து, அதனை முகத்தில் தடவி 10 - 15 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும்.

**வாழைப்பழ முகப்பற்று**

வாழைப்பழத்திற்கும் சருமத்தின் நிறத்தை அதிகரிக்கும் தன்மை உள்ளது. அதற்கு நன்கு கனிந்த வாழைப்பழத்தை மசித்து, அதில் தேன் மற்றும் 1 மேசைக்கரண்டி புளித்த தயிர் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி பற்றுப் போட வேண்டும்.

**சந்தன பற்று**

எண்ணெய்ப் பசைச் சருமம் உள்ளவர்கள், சந்தனப் பொடியை நீரில் கலந்து பசை செய்து, முகத்தில் தடவி பற்றுப் போட்டு வந்தால், சருமத்தின் நிறம் அதிகரிப்பதை நன்கு காணலாம்.



இந்த பற்று முகத்தை புத்துணர்ச்சியுடனும் வெளிக்காட்டும்.

சந்தனத்தில் உள்ள உட்பொருள்கள், முகப்பரு, தழும்புகள் மற்றும் கரும்புள்ளிகளைப் போக்கும். ஆகவே சந்தன பொடியை பால் அல்லது நீரில் கலந்து பசை செய்து, தினமும் முகத்தில் தடவி 20 - 30 நிமிடம் ஊற வைத்து கழுவி வர நல்ல மாற்றத்தைக் காணலாம்.



# விருந்துக்கதிர்





விருந்துக்கதிர்

# கம்பு கூழ் செய்யத் தெரியுமா?

**கம்பு - 1/2 கிண்ணம்**
**தண்ணீர் - 5 கிண்ணம்**
**மோர் - 3/4 கிண்ணம்**
**உப்பு - 1/2 தேக்கரண்டி**
**மேலே தூவ சின்ன வெங்காயம் - சிறிதளவு**

## செய்முறை

கம்பை கழுவி 1/2 கிண்ணம் தண்ணீரில் 10-15 நிமிடங்கள் ஊற வைக்கவும். மிக்சியில் ஒன்றிரண்டாக உடைத்துக் கொள்ளவும். நீங்கள் கடையில் கிடைக்கும் கம்பு மாவிலும் கூழ் தயாரிக்கலாம். ஆனால், நான் முழு தானியத்தில் செய்வதையே விரும்புவேன். இறுதியில் இதன் சுவை நன்றாக இருக்கும். மீதமுள்ள 1 கிண்ணம் தண்ணீர் சேர்த்து கம்பை வேக வைக் கவும். நீங்கள் குக்கர் உபயோகித்தும் தயாரிக்கலாம். பாத்திரத்திலும் செய்யலாம். பாத்திரத்தில் வேக 1/2 மணி நேரம் வரை ஆகும். இதுவே கம்பு சோறு அல்லது கம்பு சாதம் இதை மதிய உணவாக ஏதேனும் குழம்பு அல்லது ஊறுகாயுடன் உண்ணலாம்.

மீதமுள்ள கம்பு சாதத்தை அடுத்த நாள் காலையில் கரைத்து கூழாக உண்ணலாம். மீதமுள்ள கம்பு சாதத்தை ஆற விடவும். ஆறிய பின்னர் எலுமிச்சையை விட சற்று பெரிய அளவில் உருண்டைகளாக செய்து குடிக்கும் தண்ணீர் ஊற்றி அதில் போட்டு வைக்கவும்.

இது தண்ணீரில் இரவு முழுவதும் அல்லது குறைந் தது 2 மணி நேரமாவது இருக்க வேண்டும். சற்று புளித்தால் தான் கூடுதல் சுவையுடன் இருக்கும். நீங் கள் சாப்பிடத் தயாராகும்போது அந்த உருண்டையை தண்ணீரில் கரைத்து கடைந்த மோர் மற்றும் உப்பு போடவும். கம்பங்கூழ் பரிமறத் தயார்.

நீங்கள் இந்த கஞ்சி அல்லது கூழை நறுக்கிய சின்ன வெங்காயம் மற்றும் பச்சை மிளகாயுடன் பரிமாறலாம். ஏதேனும் வடகம், மோர் மிளகாய், சிறிதளவு ஊறுகாயுடனும் பரிமாறலாம். நீங்கள் கூழ் தயாரிக்க புளிக்கும் வரை காத்திருக்க தேவையில்லை. ஆறிய உடனே தயாரித்து கொள்ளலாம். நீங்கள் இதே தயாரிப்பு முறையில் கடையில் கிடைக்கும் கம்பு மாவிலும் கம்பு கூழ் தயாரிக்கலாம்.

## கம்பில் அடங்கியுள்ள சத்துக்களும் மருத்துவக் குணங்களும்

சிறுதானியங்களிலேயே அதிக அளவாக கம்பில்தான் 11.8 சதவீதம் புரதம் உள்ளது. ஆரோக்கியமான தோலிற்கும், கண்பார்வைக்கும் முக்கிய சத்தான 'விற்றமின் ஏ' யை உருவாக்குவதற்கும் முக்கிய காரணியான பீட்டா கரோட்டீன் கம்பு பயிரில் அதிக அளவில் உள்ளது.

**100 கிராம் கம்பில் உள்ள சத்துக்கள்**

கல்சியம் - 42 கிராம், இரும்புச்சத்து - 12 மி.கி., விற்றமின் பி - 0.38 மி.கி.,

ரைபோபிளேவின் - 0.21 மி.கி., நியாசின் - 2.8 மி.கி. உள்ளது.

மற்ற எந்தத் தானியத்திலும் இல்லாத அளவு 5 சதவீதம் எண்ணெய் இதில் உள்ளது. இந்த எண்ணெயில் 70 சதவீதம் நிறைவுறாக் கொழுப்பு அமி லம் உள்ளது. இது உடலுக்கு மிகவும் அத்தியாவசிய மான கொழுப்பு அமிலம் ஆகும்.

### கம்பின் மருத்துவ பயன்கள்

**உயர் இரத்த அழுத்தத்தினை குறைக்கும்**

கம்பில் அதிக அளவு பொட்டாசியம் மற்றும் மக்னீசியம் சத்துக்கள் நிறைந்துள்ளன. இவை உயர் இரத்த அழுத்தம் போன்ற பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்கும்.

**இரும்புச்சத்து நிறைந்தது**

கம்பில் மிகவும் அதிக அளவில் இரும்புச்சத்துக்கள்



நிறைந்துள்ளன. இது உடலில் ஏற்படும் இரத்தச்சோகை மற்றும் முடி கொட்டுதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்க உதவும்.

**எளிதில் செமிபாடடையும்**

நாம் உண்ணும் உணவுகள் அனைத்தும் எளிதில் செமிபாடு அடைய வேண்டும். கம்பு, நார்ச்சத்து அதிகம் கொண்டதால் வயிற்றில் செமிபாட்டுக் கோளாறுகள் மற்றும் புண்கள் கொண்டவர்கள் தொடர்ந்து சில காலம் உண்டுவந்தால் வயிறு சம்பந்தமான அத்தனை குறைபாடுகளையும் நீக்கும்.

### கம்பு தரும் நன்மைகள்

**மாதவிடாய் பிரச்சினைக்கு தீர்வு**

பெண்களுக்கு மாதந்தோறும் ஏற்படும் மாதவிடாய் சமயங்களில் அதிக இரத்தப் போக்கும், அடிவயிற்று வலியும் ஏற்படுகின்றன. இப்படியான நேரங்களில் கம்பு கூழ் அல்லது கம்பு சூப் குடித்துவந்தால் அந்தப் பிரச்சினைகள் தீரும்.

**உடல் எடையினை குறைக்க உதவும்**

கம்பங்கூழில் அதிக அளவு நார்ச்சத்து மற்றும் குறைந்த அளவு கொழுப்புச் சத்து உள்ளன. இந்த கம்பங் கூழை குடித்துவந்தால் உடலில் உள்ள தேவை யற்ற கொழுப்புகள் கரைந்து உடல் எடை குறையும். எனவே உடல் எடையினை குறைக்க விரும்புவோர் கம்பு உணவை தினமும் எடுத்துக் கொள்வது நல்லது.

**குடல் புற்று ஏற்படுவது தடுக்கப்படும்**

மனிதர்களுக்கு ஏற்படும் பல்வேறு புற்றுநோய்களில் ஒன்று தான் குடல் புற்றுநோய். கம்பு உணவுகளை தினந்தோறும் ஒருமுறையேனும் உட்கொள்பவர்களுக்கு குடல் புற்றுநோய் ஏற்படுவது தடுக்கப்படுவதாக மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**உடலுக்கு குளிர்ச்சி அளிக்கும்**

இன்றைய நவீன காலகட்டத்தில் அனைவரும் வேலை மற்றும் உணவுமுறை காரணமாக உடல் சூடு பிரச்சினையால் அவதிப்படுகின்றனர். அதிகபடியான உடல் சூட்டின் காரணமாக பல்வேறு நோய்களுக்கு ஆட்படுகின்றனர். இவ்வாறு உடல் சூட்டால் அவதிப்படுபவர்கள் தினமும் சிறிது அளவு கம்பு கூழ் குடித்து வந்தால் இவர்களின் உடல் சூடுதணியும். இதனால் உடல் குளிர்ச்சியடையும்.

**நீரிழிவு நோயை தடுக்க உதவும்**

கம்பில் அதிக அளவு நார்ச்சத்து மற்றும் குறைந்த அளவு கிளைசெமிக் இண்டெக்ஸ் உள்ளதால் இதனை உண்ணும்பொழுது உங்களுக்கு நீரிழிவு நோய் ஏற்படாமல் காக்க உதவும். எனவே தினசரி கம்பு உணவை உண்டு வந்தால் நீரிழிவு வியாதி ஏற்படாமல் தடுக்கலாம்.

**மலச்சிக்கலை போக்க உதவும்**

தவறான உணவுப் பழக்கங்களின் விளைவாக இன்றைய காலகட்டத்தில் மலச்சிக்கல் மிகவும் மோசமான பிரச்சினையாக கருதப்படுகின்றது. கம்பில் அதிக அளவு நார்சத்து நிறைந்துள்ளது. இதனை உண்டு வரும்பொழுது மலச்சிக்கல் பிரச்சினை வராமல் முற்றிலுமாக தடுக்கின்றது.

**இளமைத் தோற்றம் நீடிக்கும்**

கம்பு அதிகம் உட்கொள்பவர்களின் இரத்தத்தில் இருக்கும் செல்கள் ஒட்ஸிஸன் உறிஞ்சுவதை அதிகப்படுத்து வதால், அவர்களின் தோலில் சுருக்கங்கள் ஏற்படுவது தடுக்கப்படுகிறது. மேலும் தோல் பளபளப்பாக இருப்பதை உறுதி செய்கிறது. முதுமை அடைவதை தாமதப்படுத்துகிறது.

மனச்சோர்வு இருந்தால் உடல் சோர்வு உண்டாகும். அதுபோல் வெயிலில் அதிகம் அலைகிறவர்கள், கடின வேலை செய்பவர்கள் அதிகம் சோர்வடைகின்றனர். இவர்கள் புத்துணர்வு பெற கம்பை கூழாக்கி, அதனுடன் மோர் கலந்து மதிய வேளையில் அருந்தி வந்தால் உடல் சோர்வு நீங்கி புத்துணர்வு கிடைக்கும்.

செமிபாட்டுக் கோளாறு கொண்டவர்கள் கம்பங் கஞ்சியை அருந்தி வந்தால் கோளாறுகள் நீங்கி நன்கு பசியெடுக்கும். வயிற்றில் புண்கள் உண்டா னால் வாயிலும் புண்கள் ஏற்படும். வயிற்றுப் புண்களை குணப்படுத்தும் குணம் கம்புக்கு உண்டு.

கம்புடன் அரிசி சேர்த்து நன்கு குழையும்படி சோறாக்கி மதிய உணவில் சேர்த்துக்கொண்டால் குடல்புண், வயிற்றுப்புண், வாய்ப்புண் குணமாகும்.

உடல் வலுவடைய கம்பு மிகச் சிறந்த உணவாகும். அடிக்கடி கம்பங்கஞ்சி சாப்பிட்டு வந்தால் உடல் வலுவடையும்.

கண் நரம்புகளுக்கு புத்துணர்வு கொடுத்துப் பார்வையை தெளிவாக்கும். இதயத்தை வலுவாக்கும். சிறுநீரைப் பெருக்கும். நரம்புகளுக்கு புத்துணர்வைக் கொடுக்கும். இரத்தத்தை சுத்தமாக்கும். உடலில் தேவையற்ற நீரை வெளியேற்றும். நோய் எதிர்ப்பு சக்தியைத் தூண்டும். தாதுவை விருத்தி செய் யும். இளநரையைப் போக்கும்.

அதிகமாக கம்பங்கஞ்சி அருந்தினால் சில சமயங்களில் இருமல், இரைப்பு போன்றவற்றை உண்டாக்கும். அதனால் அளவோடு சாப்பிட்டு ஆரோக்கியமாக வாழலாம்.

# மருத்துவக் கதிர்



## நீரிழிவு நோயை அடையாளம் காணும் வழிமுறைகள்!

நீரிழிவு என்பது உடலில் போதுமான இன்சுலின் உற்பத்தி செய்யவோ அல்லது பயன்படுத்தவோ இயலாமையால் வகைப்படுத்தப்படும் ஒரு நாள்பட்ட நிலை. இது பல காரணிகளால் இருக்கலாம். அவை சுற்றுச்சூழல், வாழ்க்கை முறை, உணவுப் பழக்கம் மற்றும் மரபணு போன்றவற்றால் ஏற்படலாம். நீரிழிவு நோய் பரவுவது பாலின சார்புடையது அல்ல என்று பெரும்பாலும் கூறப்படுகிறது. இருப்பினும், பல ஆய்வுகள் பெண்களுடன் ஆண்களை ஒப்பிடும் போது நீரிழிவு நோய்/சர்க்கரை நோய் ஆண்களுக்கே அதிகம் என்று கூறுகின்றன.

### ஆரம்பகால அறிகுறிகள்

உயிரியல், வாழ்க்கை முறை, கலாசாரம், சமூக பொருளாதார நிலை, மரபியல், ஊட்டச்சத்து காரணிகள் மற்றும் பாலியல் ஹார்மோன்கள் ஆகியவற்றில் சிக்கல் இருந்தால் நீரிழிவு நோய் ஏற்பட அதிக வாய்ப்புகள் உண்டு. ஆரம்ப கட்டத்தில் இதற்கான அறிகுறிகளை அடையாளம் கண்டுகொள்வதால் பல பிரச்சினைகளைத் தடுக்கலாம். பெண்களுடன் ஒப்பிடும்போது ஆண்களில் அறிகுறிகள் வித்தியாசமாகக் காணப்படலாம். சரி வாருங்கள் நீரிழிவு நோய்க்கான ஆரம்பகால அறிகுறிகளை இப்போது பார்ப்போம்.

### கண் பார்வை மங்கல்

கண்பார்வை கூர்மையானவர்களுக்கு பார்வைத்திறன் மங்கலாக இருக்கும். பார்வையில் ஏற்கனவே குறைபாடு இருப்பவர்களுக்கு இவை மேலும் மங்கலான பார்வைக் குறைபாட்டை உண்டாக்கும். நீரிழிவு நோய் ஒருவருக்கு இருந்தால் அவரின் கண்களில் இருக்கும் ரெட்டினா பகுதி முதலில் பாதிப்படையும். அறிகுறியை அலட்சியம் செய்தால் கண் பார்வையை மங்கச்செய்து தீவிர பாதிப்பை உண்டாக்கி விடும். பார்வைக் குறைபாடு என்று கண் மருத்துவரிடம் சென்றால் அவரே நீரிழிவு நோய் பரிசோதனை செய்யவும் வலியுறுத்துவார். இதர அறிகுறிகளோடு பார்வையும் மங்கலாக இருக்கும் பட்சத்தில் நீரிழிவு நோய் பரிசோதனையும் செய்து கொள்வது நல்லது.

### அதிகப்படியான சோர்வு

நீரிழிவு நோயாளிகளுக்கு அடிக்கடி சோர்வு ஏற்படும். இது பல்வேறு வகையான ஊட்டச்சத்து, வாழ்க்கை முறை, நாளமில்லா மற்றும் உளவியல் காரணிகளால் ஏற்படலாம். சோர்வு ஒரு நீரிழிவு அறிகுறியாக மட்டும் அங்கீகரிக்கப்படவில்லை என்றாலும், சோர்வு குறித்த புகார் பெரும்பாலும் முன்கணிப்பு நோயாளிகளால் நிரூபிக்கப்படுகிறது என்று நிபுணர்கள் கூறுகின்றனர். சரியாக ஓய்வெடுத்து ஆரோக்கியமாக சாப்பிட்டாலும் ஒருசிலருக்கு சோர்வு ஏற்படும். அது நீரிழிவு நோயின் எச்சரிக்கை அறிகுறியாக இருக்கலாம்.

### அடிக்கடி சிறுநீர் கழித்தல்

நாள் ஒன்றுக்கு 4 அல்லது 5 முறை சிறுநீர் கழிப்பது சரி. ஆனால் அதற்கு அதிகமாக சிறுநீர் கழிக்க வேண்டும் போல் தோன்றுவதும் அடிக்கடி சிறுநீர் கழிப்பதும் நீரிழிவு நோய்க்கான அறிகுறிதான். இரத்தத்தில் குளுக்கோஸ் அளவு அதிகரிக்கும்போது அவை இரத்த ஓட்டத்தில் திரவங்களின் அளவை அதிகரித்து சிறுநீரகத்துக்கு அதிக அழுத்தம் கொடுக்கும். இதனால் அதிக அளவு சிறுநீரை உறிஞ்சும் சிறுநீரகமானது சிறுநீரை வெளியேற்ற அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டும் என்னும் எண்ணத்தை உண்டாக்கும். சிலருக்கு சிறுநீர்த் தொற்றும் உண்டாகக்கூடும். மேலும் அதிக வறட்சியால் அதிகத் தண்ணீரைக் குடிக்க நேரும்போது அதிக சிறுநீர் கழிப்பதும் இயல்பு என்று பலரும் இதை தவறாக நினைத்துவிடுகிறார்கள். ஆனால் இவை இரண்டுமே நீரிழிவு நோயின் ஆரம்ப கட்ட அறிகுறிகள் என்பதை உணர வேண்டும்.



### நோய் குணமாக

#### தானியங்கள்

தினமும் சாப்பிடும் உணவுகளில் கைக்குத்தல் அரிசி, தவிடு நீக்காத கோதுமை மா, கேழ்வரகு, சோளம், ஓட்ஸ், துவரம் பருப்பு, பாசிப்பயறு, உளுத்தம்பருப்பு போன்ற தானியங்களை அதிகளவு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

#### காய்கறிகள்

நோய் உள்ளவர்கள் தினமும் அன்றாட உணவு முறையில் சேர்த்துக் கொள்ள வேண்டிய காய்கறிகள் – கரட், பீட்ரூட் தவிர மற்ற அனைத்துக் காய்கறிகளையும் சாப்பிடலாம், முக்கியமாக அனைத்துக் கீரை வகைகளையும் சாப்பிடலாம்.

#### பழங்கள்

அப்பிள், கொய்யா, பப்பாளி, தோடை , மாதுளை போன்ற பழங்களை மருத்துவரின் ஆலோசனைப்படி தினமும் சாப்பிடலாம்.

#### இறைச்சி வகை

கோழிக்கறி, மீன் , முட்டையில் வெள்ளைக்கரு ஆகியவை சாப்பிடலாம்.

அன்றாடம் சாப்பிடக் கூடியவை, கொழுப்பு நீக்கிய பால், அதிக புளிப்பில்லாத மோர், சூரிய காந்தி எண்ணெய், தவிட்டு எண்ணெய், ஒலிவ் எண்ணெய், சீனி இல்லாத தேநீர், கோப்பி அளவோடு குடிக்க லாம். மேலும் முந்திரி, பாதாம், வோல்நட் போன்றவற்றையும் சாப்பிடலாம்.

#### நோய் உள்ளவர்கள் சாப்பிடக் கூடாத கிழங்கு வகைகள்

உருளைக்கிழங்கு, சேனைக்கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, பறங்கிகாய் ஆகியவை உணவில் சேர்க்கக் கூடாது.

#### நோய் உள்ளவர்கள் தவிர்க்க வேண்டிய பழங்கள்

குறிப்பாக வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், அன்னாசிப்பழம், சீத்தாப்பழம், சப்போட்டாப்பழம், தர்ப்பூசணி, பேரீச்சை ஆகிய பழங்களை சாப்பிடக்கூடாது.

#### நோய் உள்ளவர்கள் தவிர்க்க வேண்டிய உணவுகள்

எருமைப்பால், தயிர், பாலாடை, வெண்ணெய், நெய், பால்கோவா, ஐஸ்கிறீம், கேக் வகைகள் மற்றும் இனிப்புகள் ஆகியவை சாப்பிடக் கூடாது.

#### நோய் உள்ளவர்கள் தவிர்க்க வேண்டிய இறைச்சி வகை

ஆட்டுக்கறி, மாட்டுக்கறி, பன்றிக்கறி, ஈரல், மூளை மற்றும் முட்டையின் மஞ்சள் கரு சாப்பிடக்கூடாது.

#### நோய் உள்ளவர்கள் தவிர்க்க வேண்டிய தின்பண்டங்கள்

வெல்லம், இனிப்புப் பலகாரங்கள், சிப்ஸ், வடை, முறுக்கு, பூரி, சமோசா போன்ற எண்ணெயில் பொரித்த பலகாரங்களையும் சாப்பிடக்கூடாது.

### திடீர் உடல் எடை இழப்பு

உங்கள் உடலில் இரத்த குளுக்கோஸை சரியாக செயலாக்க முடியாதபோது, திடீர் எடை இழப்பு ஏற்படும். எந்தவொரு உணவு முறை, உடற்பயிற்சி அல்லது விசேட சிகிச்சை இல்லாமல் எடை இழப்பு ஏற்படுகிறதோ, அது பொதுவாக நீரிழிவு நோயின் அறிகுறியாக அடையாளம் காணப்படுகிறது. இது குறிப்பாக வகை 2 நீரிழிவு நோய்க்கான சிக்கல்களுக்கான ஆபத்து காரணியாகவும் இருக்கலாம்.

### தோல் நிறமாற்றம்

உங்கள் கழுத்து, அக்குள், இடுப்பு போன்றவை அடர் கருப்பு நிறத்தில் மாறும். அகாந்தோசிஸ் நிக்ரிக்கன்ஸ் (அக்குள் மற்றும் கழுத்து போன்ற தோல் மடிப்புகளில் தோலின் நிறம் கறுப்பாக மாறும்) என்பது அனைத்து வயதினருக்கும் பொதுவான தோல் அறிகுறி யாகும். சில சமயம் இந்த தோல் நிற மாற்றம் உங்கள் உயிருக்கு ஆபத்தாகலாம். நீரிழிவு நோய் கண்டறியப்படாத நோயாளிகளுக்கு இது முதல் அறிகுறியாகும். ஆரம்ப கட்டத்தில் இத்தகைய அறிகுறிகளை அடையாளம் காண்பது கிளைசெமிக் கட்டுப் பாட்டிற்கும் நீரிழிவு நோயை நிர்வகிக்கவும் உதவும்.

### ஆறாத காயம்

உடலில் இரத்த சீனியின் அளவு அதிகமாக இருந்தால், இரத்த ஓட்ட மண்டலம் சேதமடையும். இதனால் காயங்கள் குணமாவதற்கு தாமதமாகும். அத்தோடு பிற தொற்று நோய்களை உருவாக்கும் அபாயத்தையும் அதிகரிக்கும். நோய் தீவிரமாக இருக்கும் பட்சத்தில் அவை அந்த காயத்தை ஆற செய்யாமல் அதிகப்படியாகவே தாக்கத் தொடங்கும். உடலில் இருக்க கூடிய நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பதே இதற்கு காரணம். குறிப்பாக சருமத்தில் சாதாரணமாக உண்டாகக்கூடிய சிராய்ப்புகள் முதல் வெட்டுக் காயங்கள் வரை மெதுவாக ஆறும். அதனால் தான் நீரிழிவு நோயாளிகள் காயம் உண்டாகாமல் உடலைப் பார்த்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

நீங்கள் நன்றாகத் தேடிப்பார்த்தால் மேற் கண்ட உடல் சிக்கல்கள் நம் வீட்டில் இருக் கும் பெரியவர்களுக்கும் இருக்கும். அவர் களுக்கு மேற்சொன்ன அறிகுறிகள் தென் பட்டால் உடனே சரியான சிகிச்சை அளித்து அவர்களைக் காப்பாற்றுவது நம் கடமை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

நீங்கள் நன்றாக தேடிப்பார்த்தால் மேற் கண்ட உடல் சிக்கல்கள் நம் வீட்டில் இருக் கும் பெரியவர்களுக்கும் இருக்கும். அவர் களுக்கு மேற்சொன்ன அறிகுறிகள் தென்பட்டால் உடனே அவர்களுக்கு சரியான சிகிச்சை அளித்து அவர்களை காப்பாற்றுவது நம் கடமை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.







# சிறுவர் கதிர்

## தெனாலிராமன் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

சுமார் நானூற்றெண்பது ஆண்டுகளுக்கு முன் இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் உள்ள ஒரு சிற்றூரில் ஓர் ஏழை அந்தணக் குடும்பத்தில் பிறந்தான் தெனாலிராமன். இளமையிலேயே அவன் தன் தந்தையை இழந்தான். அதனால் அவனும் அவனுடைய தாயாரும் தெனாலி என்னும் ஊரில் வசித்துவந்த அவனுடைய தாய் மாமன் ஆதரவில் வாழ்ந்து வந்தனர்.

அவனைப் பள்ளிக்கு அனுப்பியும் பள்ளிப்படிப்பில் அவனுக்கு நாட்டம் செல்லவில்லை.

சிறு வயதிலேயே விகடமாகப் பேசுவதில் வல்லமை பெற்றான். அதனால் அவன் பிற்காலத்தில் விகடகவி என்னும் பெயர் பெற்று பெரும் புகழுடன் விளங்கினான்.

காளி மகாதேவியின் அருட்கடாட்சம் பெற்றவன். பின் வரலாற்றுப் புகழ்பெற்ற விஜயநகர சாம்ராஜ்யத்தின் அரசன் கிருஷ்ணதேவராயரின் அரண்மனை விகடகவியாக இருந்து மன்னரையும் மக்களையும் மகிழ்வித்தான். அவனுடைய நகைச்சுவைக்காக மன்னர் அவ்வப்போது ஏராளமான பரிசுகளை அளித்து ஊக்குவித்தார். தெனாலி ராமன் விகடகவி, குமார பாரதி என்ற பட்டங்கள் பெற்றவன். இவனுடைய வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பலகதைகளாகவழங்கப்படுகின்றன.

இப்போது தெனாலி ராமன் கதை ஒன்றை வாசிப்போமா? ...............

## பிறந்த நாள் பரிசு

மன்னர் கிருஷ்ணதேவராயருக்குப் பிறந்தநாள் விழா. நகரமெல்லாம் தோரணம், வீடெல்லாம் அலங்காரம்! மக்கள் தங்கள் பிறந்த நாள் போல மன்னரின் பிறந்த நாளை மகிழ்ச்சியோடு கொண்டாடினர்.

முதல்நாள் இரவே வீதிகள் தோறும் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள், வாண வேடிக்கைகள், அரண்மனையில் வெளிநாடுகளிலிருந்து வந்த தூதுவர்களுக்கு விருந்து ஏகதடபுடலாக நடந்தது.

மறுநாள் அரச சபையில் அரசருக்கு மரியாதை செலுத்துதல் இடம்பெற்றது. முதலில் வெளிநாடுகளிலிருந்து வந்த அரசப் பிரதானிகள், தங்கள் நாட்டு மன்னர்கள் அனுப்பிய பரிசுகளை வழங்கினர்.

பிறகு அரசப் பிரதானிகள், பொதுமக்கள் மன்னருக்கு பரிசளித்து மரியாதை செலுத்தினார்கள். அதன்பிறகு அரசரின் நெருங்கிய நண்பர்கள் தங்கள் பரிசுகளை அளித்தனர். அப்போதுதான் பெரியதொரு பொட்டலத்துடன் தெனாலிராமன் உள்ளே நுழைந்தான். அரசர் உள்பட எல்லாரும் வியப்போடு பார்த்தனர்.

மற்றவர்களிடம் பரிசுகளை வாங்கித் தன் அருகே வைத்த மன்னர், தெனாலிராமன் கொண்டு வந்த பரிசுப் பொட்டலம் மிகப் பெரிதாக இருந்ததாலும் அவையிலுள்ளவர்கள் ஆவலோடு என்ன பரிசு என்று பார்த்ததாலும் அந்தப் பொட்டலத்தைப் பிரிக்கும்படி தெனாலிராமனிடம் கூறினார் அரசர்.

தெனாலிராமன் தயங்காமல் பொட்டலத்தைப் பிரித்தான். பிரித்துக் கொண்டே இருந்தான். பிரிக்கப் பிரிக்கத் தாழைமடல்கள் காலடியில் சேர்ந்தனவே தவிர பரிசுப் பொருள் என்னவென்று தெரியவில்லை.

அதனால் எல்லாரும் ஆவலுடன் கவனித்தனர். கடைசியில் மிகச்சிறிய பொட்டலமாக இருந்ததைப் பிரித்தான். அதற்குள் நன்றாகப் பழுத்துக் காய்ந்த புளியம்பழம் ஒன்றிருந்தது.

அவையினர் கேலியாகச் சிரித்தனர்.

அரசர் கையமர்த்திச் சிரிப்பு அடங்கியவுடன், தெனாலிராமன் கொடுத்த பரிசு சிறிதாக இருக்கலாம். அதற்கு அவன் கொடுக்கப்போகும் விளக்கம் பெரிதாக இருக்கலாமல்லவா? என்று அவையினரைப் பார்த்துக் கூறிவிட்டு தெனாலி ராமன் பக்கம் திரும்பி, ராமா இந்த சிறிய பொருளைத் தேர்ந்தெடுத்ததன் காரணம் என்ன? எனக் கேட்டார்.

அரசே, ஒரு நாட்டை ஆளும் மன்னர் எப்படி இருக்க வேண்டும் என்ற தத்துவத்தை விளக்கும் பழம் புளியம்பழம் ஒன்றுதான். மன்னராக இருப்பவர் உலகம் என்ற புளிய மரத்தில் காய்க்கும் பழத்தைப் போன்றவர். அவர் பழத்தின் சுவையைப் போல இனிமையானவராக இருக்க வேண்டும்.


அதே நேரத்தில் ஆசாபாசங்கள் என்ற புளியம் பழ ஓட்டில் ஒட்டாமலும் இருக்க வேண்டும் என்பதை விளக்கவே இந்த புளியம்பழத்தைப் பரிசாகக் கொண்டு வந்தேன். புளியம்பழமும் ஓடும்போல இருங்கள்! என்றான்.

அவையினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர். மன்னர் கண்கள் பனிக்க ஆசனத்தைவிட்டு எழுந்து தெனாலிராமனைத் தழுவி, ராமா எனக்குச் சரியான புத்தி புகட்டினாய். ஒரு பிறந்த நாள் விழாவிற்கு இத்தனை ஆடம்பரம் தேவையில்லை.

பொக்கிஷப் பணமும் பொது மக்கள் பணமும் வீணாகும்படிசெய்துவிட்டேன். உடனேவிசேடங்களை நிறுத்துங்கள். இனி என் பிறந்தநாளன்று கோயில்களில் மட்டுமே அர்ச்சனை ஆராதனை செய்யப்பட வேண்டும். அவசியமில்லாமல் பணத்தை ஆடம்பரமாகச் செலவு செய்யக்கூடாது, என உத்தரவிட்டார்.

தெனாலிராமனின் துணிச்சலையும் சாதுரியத்தையும் எல்லாரும் பாராட்டினர்.

அரசர் தனக்கு வந்த பரிசுப் பொருள்களில் விலை உயர்ந்தவற்றை எடுத்து தெனாலிராமனுக்குப் பரிசாகத் தந்தார்.



## புத்தகம் இதோ!!

புத்தகம் இதோ
புத்தகம் இதோ
நித்தம் நித்தம் உதவுகின்ற
புத்தகம் இதோ!

முத்து முத்துக் கதைகளெல்லாம்
விரும்பி நாமும் படித்திட
உத்தமர்கள் வாழ்க்கை தன்னை
உணர்ந்து நாமும் நடந்திட

புத்தகம் இதோ
புத்தகம் இதோ
நித்தம் நித்தம் உதவுகின்ற
புத்தகம் இதோ!

குருவைப் போல நல்ல தெல்லாம்
கூறி நம்மை உயர்த்திட
அருமை நண்பன் போல் நமக்கு
அருகில் இருந்து உதவிட

புத்தகம் இதோ
புத்தகம் இதோ
நித்தம் நித்தம் உதவுகின்ற
புத்தகம் இதோ!

மெத்தப் பெரிய கவிஞ ரோடும்
வேண்டும் போது பேசிட
சித்தம் மகிழச் செய்யும் நல்ல
சித்திரங்கள் பார்த்திட


புத்தகம் இதோ
புத்தகம் இதோ
நித்தம் நித்தம் உதவுகின்ற
புத்தகம் இதோ!

இரவும் பகலும் எந்த நாளும்
ஏற்ற கல்வி கற்றிட
உரிய முறையில் அறிவு பெற்றே
உயர்ந்து நாமும் சிறந்திட

புத்தகம் இதோ
புத்தகம் இதோ
நித்தம் நித்தம் உதவுகின்ற
புத்தகம் இதோ!

குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

## சிறந்த வர்ணத்துக்கு பரிசு தரும் எண்ணம்



இந்த ஓவியத்துக்கு பொருத்தமாக வர்ணம் தீட்டி அனுப்புங்கள் சிறந்த வர்ணம் தீட்டலுக்கு பெறுமதியான பரிசு காத்திருக்கிறது .
அனுப்ப வேண்டிய முகவரி:-
காலைக்கதிர்,சிறுவர் பகுதி,
இல.30, இந்துக்கல்லூரி வீதி.
யாழ்ப்பாணம்.

# கவைலக் கதிர்





## மறதிக்கார மக்கள்!

மீண்டும் உங்கள் இராஜாங்கமே
வேண்டும் எங்களுக்கு !

கொரோனாவால் குடிமூழ்கவிருந்த
எங்கள் ஏகபோக
வர்த்தகச் சந்தையை
ஏற்றுமதி இறக்குமதியை
நஷ்டத்திலிருந்து காப்பாற்ற,
நாம் சரித்திரம் காணா
வரலாற்றுச் சாதனையாய்
இரவோடு இரவாக
ஒரேயடியாக காஸ் விலையை அதிகரிக்க
அதற்கும் மேலாக
பால்மா, சீனி, பருப்பு, அரிசி, கோதுமை,
சீமெந்து என வேண்டிய பொருள்களின்
விலைகளை நாம்
வேண்டியவாறு அதிகரிக்க,
சுற்றிவளைப்பு தண்டப்பணச்
சோலிகளை நீக்கிப்
பச்சைக்கொடி காட்டி
பக்குவமாய் எமக்கு
ஆதரவுக்கரம் நீட்டிய
அமைச்சுப் பிரதானிகள்
எம்.பிக்கள் அத்தனை பேர்களுக்கும்
நன்றியோ நன்றி!

அடுத்த தேர்தலிலும் நிச்சயம்
நீங்களே வரவேண்டும்.
உங்களின் பக்கபலமாய்
நாம் நிற்போம்.
மக்களென்ன மக்கள், மறதிக்காரர் அவர்கள்
இருக்கவே இருக்கிறது
அப்பாவிகளான அவர்களை ஏமாற்ற பல
கோஷங்கள்.
வெற்றி நிச்சயம் மீண்டும் உங்களுக்கே;
வாழ்த்துகள்!



ஷெல்லிதாசன்
திருகோணமலை.

## எதுவும் இல்லை

அந்தப் பறவை அதற்காகத்தான்
பாடிக்கொண்டிருக்கிறது
உன் காதில் விழுவதால்
உனக்காக என்றாகி விடாது

மழை உன் பிரார்த்தனைக்காய்
பெய்வதாய் நினைத்துக்கொள்கிறாய்
அது நினைத்தபோது
நிலத்தில் வந்து விழுகிறது

காற்று உன் சுவாசத்திற்காக வீசுவதாய்
எண்ணிக் கொள்கிறாய்
அது வீசும் இடத்தில்
உன் சுவாசப்பாதைகள் இருக்கின்றன

நெருப்பு உனக்காக
படைக்கப்பட்டதாக சொல்கிறாய்
நீதான் அதை எடுத்து
உனக்கு ஏற்றவாறு பயன்படுத்துகிறாய்

நிலம் உன் சொந்தம் என
உரிமை கோருகிறாய்
அது பூமியிடம் இருப்பது
பூமியாலானது

ஆகாயம் உன்னை வாழ வைக்க
வந்ததாக இயம்புகிறாய்
அது அதன் இயல்பில் அப்படி இருக்கிறது
இங்கு உன்னுடையதென்று சொல்ல
எதுவும் இல்லை.



அய்யப்பமாதவன் -
இந்தியா



## நீயுமா புருட்டஸ்

நேசத்தின்
இறுதி மைல் கல்லில்
தொடங்கிற்று பயணம்

நெடுஞ்சாலையென
நீள்கின்றன சர்ச்சைகள்

முறித்துக்கொள்ள தேடுகிறோம்;
ஒரு கோப்பை;
சில துளிகள்;
இன்னுமோர் மாலைப்பொழுது

முடிந்தே தொடங்கிய பயணத்தின்
இன்னுமோர் முடிவுரை;
மங்கல நாணினாலும்;
மாற்று மோதிரத்தினாலும்

தங்கங்கள் ,
அத்தனையும் தங்கங்கள்

வெற்று காமமென
குறுவாள்,
மேனி மீதிறங்க
வாழ்க்கை,
சிரித்து கெலிக்க;
குற்றுயிர் காதல்
கேட்கிறது
நீயுமா? புருட்டஸ்





லலிதகோபன்
திருகோணமலை

## அக்கரைக்கு போன நிலாவுக்கு



தனுவில் முனங்கின்
வீச்சுளாத்தி மரங்கள்
முகையவிழ்த்த வாசனையை
செக்கல் சோளகம்
கரைநீளம் தூவிக்கொண்டிருந்தது.
அந்த மெல்லிய மாலையில்தான்
தோணியேறினேன்.

தலைகள் கொய்தெறியப்பட்ட
தனுவில் தென்னைகளை
தளநார் இல்லாமல்
ஏறிக்கொண்டிருந்தது
முகமுடைந்த நிலவு.
முனங்கை விட்டு
தோணி அகலுவதை
நிலவு
முகிற்புதருக்குள் மறைந்திருந்து
எட்டியெட்டிப் பார்த்ததை
நான் கண்டேன்.
அவளும்தான்.

முனங்குப் பாறையில்
இறுக்கிக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு,
அணையவந்த கள்ளத்தோணியில்
ஏற்றி அனுப்பி வைத்தாள்.

என்னை நானே
நாடு கடத்திக் கொண்ட நாள்தொட்டு
அவளது மௌனத்தின் குரல்கள்
வீச்சுளாத்திக் காற்றிலும் அலையிலுமாக
வந்துவந்து போம்.
இன்னுமவள்
முனங்குப் பாறையில்தான்
அமர்ந்திருக்கிறாள்
மீள வருவேனென்ற நினைப்பில்.

பூவும் பிஞ்சுமான
வீச்சுளாத்தி மரங்கள்
எல்லாமிழந்து
மழிவற்றி நிற்பதாக சொன்னது
அண்மையில்
தெருவில் நடந்த கொண்டல் காற்று.
மீண்டும் நான் வருவதாக
நம்புகிறாள் அவள்
என்றும் சொன்னது.
நானோ
வார்த்தை தவறிய கடன்காரனாக
ஈரத்தெரு நீளம் நடக்கிறேன்.

அதே நிலவு
இப்போதும், இங்கேயும்
முகிற்புதருக்குள் மறைந்திருந்தபடி
எட்டிப் பார்ப்பதைக் காண்கிறேன்.
அவளும்
அங்கிதைக் காணத் தவற மாட்டாள்.



தமயந்தி - நோர்வே




# தக்காளிச் செய்கையில் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம்



### அறிமுகம்

பொதுவாகவே மரக்கறிப்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் பெருமளவு பணத்தை முதலிடுவதோடு அதில் நிகரமாக அரை மடங்கை பீடைகளைக்கட்டுப்படுத்துவதற்காக செலவுசெய்கின்றனர். சரியான முறையில் பீடைகளை இனங்காணாமல் அல்லது சிபாரிசு செய்யப்படாத கிருமி நாசினிகளை அதிகளவில் அடிக்கடி பயன்படுத்துவதால் மரக்கறிகளின் உற்பத்திச்செலவு அதிகரிப்பதோடு சூழலியல் சார் பெரும்பாதிப்புக்களும் ஏற்படுகின்றன. அந்தவகையில் கிருமிநாசினிப் பயன்பாடுகளை குறைத்து பீடைகளை கட்டுப்படுத்துவதற்கான சிறந்த இயற்கை முறைத்தீர்வே ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம் ஆகும்.

ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம் எனப்படுவது இரசாயன, பௌதிக, மரபணு தொழில்நுட்பங்கள், உயிரியல் ரீதியான கட்டுப்பாடுகள் போன்ற வழிகளை அடிப்படையாகக்கொண்டு ஒருங்கிணைந்த பீடைக்கட்டுப்பாட்டினை மேற்கொள்வதனூடாக சூழலியல் ஆபத்துக்களை குறைத்து ஆரோக்கிய பொருளாதார மட்டத்தை அடைதல் ஆகும்.

### மரக்கறிச்செய்கையில் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்தின் அவசியம்

சராசரியாக ஆசியக் குடும்பங்களில் மதிய உணவில் மரக்கறிப்பயிர்கள் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. விவசாயிகள் அறுவடைக்கு முந்திய கால இடைவெளிகளை கருத்தில் கொள்ளாமல் குறுகியகால சந்தைப்படுத்தலினாலும் சிபாரிசு அற்ற பீடைநாசினிப் பயன்பாட்டினாலோ அல்லது கட்டுப்பட்ட அளவிலும் அதிகமான பீடைநாசினிப் பயன்பாட்டினாலோ மரக்கறிகள் நஞ்சாவதற்கான வாய்ப்பு அதிகளவாக உள்ளது. மீண்டும் மீண்டுமான பூச்சிகொல்லிப் பாவனைகளால் தீமை விளைவிக்கும் பீடைகளின் உடல் தாங்கி இருப்பதற்கான எதிர்ப்புத்தன்மையை பெற்றுக் கொள்வதற்குமான வாய்ப்புக்களும் அதிகம். இது பயனற்ற பணவிரயத்தையே மேலும் அதிகரிக்கும். ஆரோக்கிய மரக்கறிகளை பெறுதல் வேண்டுமாயின் பீடைநாசினியின் பயன்பாட்டைக் குறைத்தல் மிக அவசியமாகின்றது.

### ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம் நாற்றுமேடை அமைத்தல்

தரமான ஆரோக்கியமான வீரியமுடைய நாற்றுக்களை பெறுவதற்காக நாற்றுமேடை அமைத்தலும் பேணப்படுதலும் அவசியமானதாகும். விதைத் தேவை 300 - 400 கிராம் / ஹெக்டேயர் ஆகும்

3அஸ1அ அளவுடைய. 10 நாற்றுமேடைகள் 1 ஹெக்டேயர் பயிர்ச்செய்கைக்கு போதுமானதாக இருக்கும். யாழ்ப்பாணமாவட்டம் உயர்வலய பிரதேசம் என்பதனால் தாழ்பாத்தி நாற்றுமேடை 15cm ஆழமுடையதாக அமைக்கப்படல் வேண்டும். நாற்று



மேடையானது 5cm உயரமளவில் வைக்கோல் பரப்பப்பட்டு எரியூட்டப்பட்டு தொற்றுநீக்கம் செய்யப்படல் வேண்டும்.

றைக்கோடேமா 250கிராம் / கிலோகிராம் எனும் விகிதத்தில் தக்காளி விதைகளுடன் கலக்கப்பட்டு 5உஅ நிரல் இடைவெளிகளில் விதையிடல் செய்யப்படல் வேண்டும். விதைகள் விதைக்கப்பட்ட பின்னர் உலர்ந்த வாழை இலைகள் அல்லது வைக்கோலை பயன்படுத்தி மூடுபடை அமைத்தல் வித்து முளைத்தலின் வாய்ப்பை அதிகரிக்கும். வித்து நன்கு முளைத்தலிற்கு 7 - 10 நாள்கள் எடுக்கும். தினமும் போதியளவு நீர்ப்பாசனம் செய்தல் வேண்டும். வித்து முளைத்தலிற்கு பின்னர் தேவைக்கேற்ப நீர்ப்பாசனமும் களை அகற்றல் செயற்பாடுகளும் மேற்கொள்ள வேண்டும். 28நாள்களின் பின்னர் நாற்றுக்களை நடுகைக்கு பயன்படுத்தலாம்.

### நடுகை நிலம் தயார்ப்படுத்தல்

நிலம் நடுகைக்கு தயார்ப்படுத்தலின்போது மாட்டெரு 1தொன் / ஹெக்டேயர் எனும் விகிதத்தில் இடப்பட்டு உழப்பட வேண்டும்.

### எல்லைப் பயிர்ச்செய்கை

தக்காளிநாற்று நடுகை செய்வதற்கு 2வாரங்களிற்கு முன்னர் பண்படுத்தப்பட்ட குறித்த காணிப்பகுதியைச்சுற்றி எல்லைப்பயிராக இறுங்கு வரம்பிலிருந்து 1அடி இடைவெளியில் 3வரிசைகளில் சிக்சக் முறையில் நடுகை செய்யப்பட வேண்டும். இறுங்கு போன்ற எல்லைப்பயிர்கள் நடவு செய்யப்படுகின்றமையால் பீடை நாசினிகளோ பூச்சிக்கொல்லிகளோ இல்லாமல் இயற்கை முறையில் பொருளாதார ரீதியான சேதங்களின்றி பயிர்கள் பாதுகாக்கப்படுகின்றன.

### நாற்று நடுகை

தக்காளி நாற்றுக்கள் நடுகை செய்யப்படும் போது தக்காளி நிலையம் வரம்பிலிருந்து 2அடி தூரத்தில் 80cm×50cm இடைவெளிகளில் 1குழியில் 2 அல்லது 3 நாற்றுக்கள் எனும் விகிதத்தில் நடப்பட்ட பின்னர் நாற்றுகளிற்கு நிழல் வழங்கப்படல் வேண்டும். தக்காளிக்கன்றுகளிற்கு கலப்புப்பயிராக (mix crop) 2 வார வயதுடைய செவ்வந்திக்கன்றுகள் நாட்டப்படுவதோடு பூச்சித்தாக்கத்தை குறைப்பதற்காக மஞ்சள் ஒட்டும் பலகைகளும் பயன்படுத்தப்படுகின்றன. மஞ்சள்நிறம் பூச்சிகளைக்கவரும் தன்மை கொண்டமையால் பிரதான பயிரின் மீதான பீடைத்தாக்கம் குறைக்கப்படுகிறது.

### நீர்ப்பாசனமும் களைக்கட்டுப்பாடும்

முதலிரு வாரங்கள் தினமும் போதியளவு நீர்ப்பாசனம் செய்தல் வேண்டும். வித்து முளைத்தலிற்கு பின்னர் தேவைக்கேற்ப நீர்ப்பாசனமும் களை அகற்றல் செயற்பாடுகளும் மேற்கொள்ள வேண்டும்.

நாற்று நடுகையின் பின்னர் களைகள் அகற்றப்பட்டு பாத்திகள் அமைக்கப்பட்டு 3நாள்களிற்கு ஒரு முறை நீர்ப்பாசனம் செய்யப்படுவதோடு இரண்டு வாரங்களிற்கு ஒருமுறை களைக்கட்டுப்பாடும் செய்யப்பட வேண்டும்.

ஒருங்கிணைந்த பீடைக்கட்டுப்பாடு முறையில் எப்பொழுதுமே விளைச்சல் அதிகமாக இருக்கும். ஒருங்கிணைந்த பீடைக்கட்டுப்பாட்டு முறையில் பூச்சிகொல்லிப்பயன்பாடுகள் இல்லை. பீடை நாசினிகளிற்கான செலவு இல்லை. எனவே வருமானம் குறைவென்றாலும் இலாபம் என ஒருபங்கு எப்பொழுதுமே இருக்கும். இன்றைய காலகட்டத்தில் இயற்கைவிவசாயத்துடன் கூடிய காய்கறிகளிற்கான கேள்வி அதிகம் என்பதும் மேலதிக வாய்ப்பாகும்.

**ஆக்கம்:- கஜானியா கணேசமூர்த்தி,**
NVQ6 மாணவி,
யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம்.

# இயற்கை வேளாண்மையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்



இயற்கை வேளாண்மையில் பல்வேறுவிதமான நன்மைகள் சுற்றுச்சூழலுக்கு கிடைக்கின்றன. இயற்கை வேளாண்மை செய்யப்படும் நிலத்தில் சேதனப் பொருள்கள் அதிக அளவில் இருப்பதால் மண்வளம் பராமரிக்கப்பட்டு மண் அரிமானம் தடுக்கப்படுகிறது.

மண்ணில் நுண்ணுயிர்களின் செயல்பாடுகள் அதிக அளவில் இருக்கும். இதனால் மண்ணின் அமைப்பு மேம்படுவதுடன் பயிர்ச்சத்துக்கள் நன்முறையில் பயிர்களுக்கு கிடைக்கிறது.

சாதாரண சாகுபடி முறையினை விட இயற்கை வேளாண்மையில் நீர்வளம் மற்றும் நிலம் மாசுபடுதல் குறைவு. பல்வேறு விதமான பயிர்கள், பயிர் மரபியல் வளங்கள் இயற்கை வேளாண்மையில் அதிகம் உள்ளன.

இயற்கை வேளாண்மையினால் பறவைகள் மற்றும் சிறுபிராணிகளுக்கு வேண்டிய உணவுப்பொருள்கள் தேவையான அளவில் கிடைக்கின்றன. இயற்கை வேளாண்மையினால் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பூச்சிகள் இதர உயிரினங்களின் பெருக்கம் சமநிலைப்படுகிறது.

இயற்கை வேளாண்மையினால் சுற்றுச்சூழலைப்பாதிக்கும் பசுமைக்குடில் வாயுக்கள் வெளியாவது தடுக்கப்பட்டு பருவநிலை மாறுபாட்டின் தாக்கம் குறைகிறது. இயற்கை வேளாண்மையில் சேதனப் பொருட்களின் சுழற்சி மற்றும் பயிர்ச்சத்துக்களின் உபயோகம் முறைப்படுத்தப்படுவதால் சுற்றுச்சூழல் கரியமில வாயுவின் அளவு அதிகரிப்பதில்லை.

இயற்கை வேளாண்மை முறைகள் மண்ணின் வளம், மண்ணின் அமைப்பு மற்றும் நீர்பிடிப்புத்திறனை மேம்படுத்துவதினால் நிலமானது தரிசாகாமல் என்றென்றும் பசுமையாக இருந்து பலன் அளிக்க வல்லதாக இருப்பதற்கு உதவுகிறது.

எனவே, விவசாயிகள் ஏதேனும் ஒரு வகையில் பயிர்ச்செய்கையில் இயற்கை இடுபொருள்களின் பசுந்தாள் உரப்பயிர்கள், மண்புழு உரம், வேளாண் தொழிற்சாலைக் கழிவுகள் பயன்பாட்டினை அதிகரித்து மண்வளத்தைக் காத்து பயன்பெற வேண்டும்.






# பண்ணை சார் தொழிலான காடை வளர்ப்பு

இலங்கையை போன்ற ஆசிய நாடுகளில் மந்தகதியிலிருந்து மித வேகத்தில் வளர்ச்சி கண்டுகொண்டிருக்கும் பண்ணை சார் தொழில்களில் ஒன்றே காடை வளர்ப்பாகும். காடை வளர்ப்பை பொறுத்த வரையில் காடை முட்டை, காடை இறைச்சி என்பன சுவை மிக்க உணவுகளாக மக்களால் நுகரப்படுகின்றன. நிகரமாக குறைந்த மூலதனத்துடன் குறுகிய காலத்தில் அதி கூடிய விளைச்சலை ஈட்டித்தருதல் இதன் விசேட அம்சமாகும். அதாவது முறையான பராமரிப்பின் கீழ் வளர்க்கப்படும் பட்சத்தில் பிறப்பிலிருந்து 45 நாள்களில் முட்டையையும், 35 - 42 நாள்களில் இறைச்சியையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக அமைதல் பொருளாதார ரீதியான மேலதிக வாய்ப்பாக அமைகின்றது. மிகக் குறைந்த வயதில் சந்தைப்படுத்தக் கூடியதாக அமைவதுடன் முட்டையிடும் வீதம் அதிகமாக காணப்படுகின்றது. கோழிகளுடன் ஒப்பிடுகையில் காடைகளுக்கு நோயெதிர்ப்பு சக்தி அதிகம். (தடுப்பூசியேற்றல் நடைமுறையில் இல்லை) எனவே எல்லா தட்ப வெப்ப நிலைகளையும் தாக்குப்பிடித்து வளரும் சக்தியை கொண்டது. அத்துடன் குறைந்த இடவசதி போதுமானது அதாவது ஒரு கோழி வளர்க்க வேண்டிய இடத்தில் 5 - 7 காடைகளை வளர்க்கலாம். இது தவிர இலகுவான அடைகாக்கும் பொறியை மலிவாக கிடைக்கும் பொருட்களைக் கொண்டு வீட்டிலேயே தயாரிக்க முடியும். காடைகளுக்கான தீவனமானது கோழித்தீவனத்திற்கான மூலப் பொருள்களை கொண்டு தயாரிக்கப்படுவதால் கோழித்தீவனமே காடைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான சாத்தியமான காரணிகள் காடை வளர்பு வளர்ச்சியடைவதற்கு முக்கிய பங்காற்றுகின்றன.

## காடையின் இயல்புகள்

பிறந்து நான்கு வாரங்களுக்கு பின்பே ஆண், பெண் காடைகளை இனங்காண முடியும். ஆண் காடைகளுக்கு மார்பு பகுதியில் பழுப்பு நிறமும், வெள்ளை நிறமும் கலந்து சீராக காணப்படும். பெண் காடைகளுக்கு பழுப்பு நிறத்துடன், கறுப்பு சாம்பல் நிற புள்ளிகள் கழுத்து, முகம் மற்றும் மார்பு பகுதிகளில் காணப்படும். 3 பெண் காடைகளுக்கு 1 ஆண் காடை என்ற விகிதம் முட்டை உற்பத்திக்கு பொருத்தமானதாகும். 6 வார வயதில் பெண் காடைகள் 175 - 200 கிராம் எடையும், ஆண் காடைகள் 125 - 150 கிராம் எடையும் அடைந்திருக்கும். 6 - 7 வார வயதில் காடைகள் முட்டை இட ஆரம்பித்து 22 வார வயது வரை இடும். மாலை நேரங்களிலேயே காடை முட்டையிடும். முட்டையிடும் காடைகளுக்கு 16 மணி நேரம் வெளிச்சம் அவசியமாகும்.

## காடை இனங்கள்

பொப் வைட்
பட்டன் காடை
கலிபோர்னியா காடை
ஜப்பானிஸ் காடை
ஏசியன் புழு

## செயற்கை முறையில் காடை முட்டைகளை அடைகாத்தல்

இயற்கை முறையில் குஞ்சுகள் பொரிக்கப்படுவதை விட செயற்கை முறையில் குஞ்சுகள் பொரிக்கப்படுதல் இலாபகரமானதாகும். அதிகளவான குஞ்சுகளை ஒரே தடவையில் இலகுவான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ள முடியும். வீட்டிலேயே இலகுவான முட்டை அடைகாக்கும் பொறியை தயாரிப்பதற்கான எளிய பொறிமுறை முன்வைக்கப்படுகின்றது.

இரண்டு வெவ்வேறு அளவிலான காட்போட் பெட்டிகள் அதாவது பெரிய பெட்டியினுள் சிறிய பெட்டி வைக்கப்படக்கூடியவாறு பேணப்படுதல் வேண்டும். சிறிய பெட்டியினுள்ளும் இரண்டு பெட்டிகளினதும் விளிம்புகளிற்கான இடைவெளிகளிலும் உமி போடுதல் வேண்டும். பெட்டியினுள் துளையிடுவதனூடாக 100W மின்குமிழ், வெப்பக்கட்டுப்படுத்தி (Temperature contoller), சிறிய மின்விசிறியை இணைக்க வேண்டும். அத்துடன் சிறியகுவளையில் நீர் வைக்கப்பட வேண்டும். பெட்டியினுள் வெப்பநிலையை 99 பாகையில் பேண வேண்டும். சிறிய வெப்பமானியை பயன்படுத்தி வெப்பநிலையை கணித்துக் கொள்ள முடியும். முட்டைகளை ஒன்றுடனொன்று தொடுகையுறாதவாறு வைத்தல் வேண்டும். ஒவ்வொரு நாளும் முட்டைகளை 4 - 5 தடவைகள் திருப்புதல் வேண்டும். இறுதி இரு நாள்கள் திருப்பக்கூடாது. அடைப்பொறியில் 17 - 18 நாள்கள் முட்டைகள் வைக்கப்பட வேண்டும்.

## செயற்கைமுறை வெப்பம் வழங்கும் அலகு

பொரிக்கப்பட்ட காடைக் குஞ்சுகள் அடைப்பொறியி




லிருந்து செயற்கைமுறை வெப்பமூட்டும் அலகிற்கு மாற்றப்படல் வேண்டும். இவ் அலகின் நடுவிலேயே மின்குமிழ் பொருத்தி வெப்பம் வழங்க வேண்டும். வெப்பநிலை 95 பாகையில் பேணப்படவேண்டும். அத்துடன் நிலத்தில் கடதாசி விரித்து அதில் தீவனத்தை பரவ வேண்டும். கடதாசி மாற்றப்படுவதன் மூலம் கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்தலாம். தண்ணீர் ஊட்டிகள் மின்குமிழிலிருந்து சற்றுத் தொலைவில் வைக்கப்பட வேண்டும். பெரும்பாலான காடைகள் தண்ணீர் வைக்கும் பாத்திரத்தில் (Waterer) விழுந்து இறக்கும் இழப்பு அதிகம் ஆகும். எனவே இதை தவிர்ப்பதற்காக தண்ணீரினுள் கோலி குண்டுகள் அல்லது கூழாங்கற்களை போடவேண்டும் இவ்வலகில் சுத்தத்தை பேணுதல் அவசியமாகும். ஒரு மாதம் வரை இவ்வலகில் வளர்க்கப்பட வேண்டும். பின்பு கூடுகளிற்கு இடம்மாற்றி வளர்க்கலாம்.

## காடைகளுக்கான உணவூட்டல்

காடைத் தீவனம் மிகவும் சிறிய துகள்களாக இருத்தல் வேண்டும். 5 வார வயது வரை ஒரு காடை 500 கிராம் தீவனத்தை உட்கொள்ளும். ஆறு வார வயதிற்கு மேல் ஒரு காடை நாள் ஒன்றுக்கு 30 - 35 கிராம் தீவனத்தை உட்கொள்ளும். காடைகளின் தீவன மாற்று திறன் 12:400 அதாவது 12 முட்டைகள் இடுவதற்கு 400 கிராம் தீவனம் தேவைப்படுகின்றது. முதல் இரண்டு வாரங்கள் ஆரம்பகாலத்தீவனமும் அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்கள் முடிவுகாலத்தீவனமும் வழங்கப்பட வேண்டும். இது தவிர காடைத்தீவனமாக மக்காச்சோளம், வெள்ளைச் சோளம், அரிசித் தவிடு, சோயாத்தூள், மீன்தூள், கடலைப் பிண்ணாக்கு, சூரிய காந்திப் பிண்ணாக்கு போன்றவற்றை மிகச்சிறிய துகள்களாக அரைத்து வழங்கலாம்.

## காடை முட்டை

காடை முட்டையில் விற்றமின்களும், இதர சத்துக்களும், புரதச் சத்தும் கோழி முட்டைடையை விட அதிகமாகவே உள்ளன.

ஒவ்வாமை பிரச்சினை உடையவர்கள் காடை முட்டையை உண்ணல் நல்லது ஏனெனில் இதில் ஒவ்வாமைக்கு எதிரான புரதச் சத்து அதிகமாக உள்ளது.

தினமும் காடை முட்டையை உண்டு வந்தால் உடலில் நோயெதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

பித்தப்பை கற்கள் மற்றும் சிறுநீரகக் கற்களை கரைக்கும் சக்தி காடை முட்டைக்கு உண்டு.

இரத்தத்தில் உள்ள ஈமோகுளோபின் அளவை அதிகரிக்கச் செய்வதால் கர்ப்பிணித் தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் இது சிறந்தது.

புற்றுநோயின் வளர்ச்சியைத் தடுக்கும் கார்சினோஜெனிக் பொருள்கள் அதிகமாக இதில் உண்டு.

அல்சர் பிரச்சினை உள்ளவர்கள் தினமும் காடை முட்டையை உணவில் சேர்த்து வந்தால் உணவுக்கால் வாய்ப் பாதையிலுள்ள காயங்கள் மற்றும் புண்களை ஆற்றிவிடும்.

சுவாசத்தொகுதி சார்ந்த நோய்கள் மற்றும் நீரிழிவு உள்ளவர்கள் அன்றாட உணவில் காடைமுட்டையைச் சேர்த்து வருவது நல்லது.

சிறுவர்களில், மூளை வளர்ச்சியையும் என்பு வளர்ச்சியையும் விருத்தியையும் பேணுகின்றது.

காடை முட்டையில் காணப்படும் ஊட்டச்சத்துக்கள் உச்சந்தலையில் குருதிச்சுற்றோட்டத்தை சீராகப் பேணுவதால் முடியுதிர்வுப் பிரச்சினை பொடுகுப் பிரச்சினை போன்றவற்றிற்கு தீர்வாக அமைகின்றது.

## காடை இறைச்சி

காடை இறைச்சி புரதச்சத்து நிறைந்ததுடன் கோழி, தாரா ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது கொழுப்புச் சத்து குறைந்ததாகவும் காணப்படுகிறது.

அசைவ உணவுப்பிரியர்களால் சுவைமிக்க உணவாக காடை இறைச்சி நுகரப்படுகிறது.


## காடைகளுக்கு ஏற்படும் நோய்கள்

காடை அம்மை
மூச்சுக்குழல் அழற்சி
பறவைக்காய்ச்சல்
அஸ்பேர்ஜில்லசிஸ்
ஒட்டுண்ணி நோய்கள்
கொக்சியிடோசிஸ்
வட்டப்புழு, நாடாப்புழு (அக ஒட்டுண்ணி)

## நோய்கள் ஏற்படாமல் தடுக்கும் வழிகள்

* போதுமான இட வசதிகளுடனும் காற்றோட்டத்துடனும் கூடுகளை அமைத்தல்.
* உணவூட்டிகளையும், நீர் ஊட்டிகளையும் சுத்தமாகப் பேணல்.
* பாவிக்கும் இடங்களையும் உபகரணங்களையும் தொற்று நீக்கல்
* கூழத்தை உலர்வாகவும் சுத்தமாகவும் பேணல்
* பூச்சிப்பீடைகளை கட்டுப்படுத்தல்
* இறைச்சிக்காக வளர்க்கப்படும் காடைக்கழிவுகளை முறையாக வெளியேற்றல்.
* சுற்றுச்சூழலை சுத்தமாகப் பேணல்.

ஆக்கம்:- S.M.லிபிஸியா,
NVQ6 மாணவி,
யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம்.


(A) ஆண்காடை (B) பெண்காடை

# சிந்திய துளிநீர்



மதிவதனி இராஜசேகரன்

(B.A, IHD in Law)

வைத்தியசாலை வளாகம் எங்கும் அமைதி குடி கொண்டிருந்தது. நேரம் இரவு பதினொரு மணி தாண்டிக் கொண்டிருந்தது. ஆஸ்பத்திரி வீதி முன் தேநீர் கடையிலிருந்து தென்றல் வானொலியில் இரவின் மடியில் அறிவிப்பாளர் ஜெயகிருஷ்ணாவின் மதுரக் குரலில் இரவின் இனிமைக்கு இதம் சேர்ப்பது போல இரவின் மடியில் நிகழ்ச்சித் தொகுக்கப்பட்டு போய்க் கொண்டிருந்தது. காற்றலை வழியே மயக்கும் மாலைப் பொழுதே நீ போ. போ. இனிக்கும் இன்ப இரவே நீ. வா, வா என .... ராஜாவும் ஜிக்கியும் ஜோடிக் குரலில் உருகிக் கொண்டிருந்தனர். இன்ப இரவின் எந்தச் சலனமும் இன்றி ஓர் உருவம் வைத்தியசாலை வளாகத்தின் சிற்றுண்டிச் சாலையோரம் கிடந்த அந்த கைப்பிடிகொஞ்சம் உடைந்த கதிரையில் அமர்ந்திருந்து தலையைத் தனது கைகளில் ஊன்றியவாறு நிலத்தில் விழுந்த அந்த விளக்குக் கம்பத்தின் வெளிச்சத்தினை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தது. ஆம் அவன் வேறுயாருமல்ல. கடந்த 6 மாத காலமாக இதே போன்று இரவு பகல் பாராமல் வைத்தியசாலையே தஞ்சமெனக் கிடந்த ஜெயப்பிரகாஷ் தான் அது. கலைந்த கேசம். களையிழந்த விழிகள், தண்ணீரையே கண்டிராத தேகம். சந்தோசத்தைத் தொலைத்த உள்ளமாக அவன் இருந்தான். பார்ப்போர் மனதைப் பதைக்க வைப்ப தாகவே இருந்தது. இத்தனைக்கும் அவன். யாழ்ப் பாணத்தில் ஓரளவு பெயர் சொல்லும்படியான செல்வாக் கான குடும்பத்தின் செல்லப்பிள்ளை... விழி நோக்கிய படியே இருந்த ஜெயப்பிரகாஷின் சிந்தனை பின்னோக் கிப் பயணப்பட ஆரம்பித்தது.

அன்றைய விழாவில் பல்கலைக்கழக அனைத்து பீட மாணவர்களும் கைலாசபதி அரங்கில் ஒன்று கூடியிருந்தனர். என்றுமில்லாதவாறு சத்தம் வானைப் பிளந்தது. விழா ஏற்பாடு சிறப்புற ஏற்பாடாகியிருந்தது. மாணவர்களின் வருகையும் கணிசமான அளவு திருப்தியாகவே இருந்தது. கலைநிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. ஏதோவொரு கலாகஷேத்திரா பள்ளியிலிருந்து மாணவிகள் இருவரது தில்லானா போய்க் கொண்டிருந்தது நேரம் போய் விட்டதே என்கிற அவசரத்தில் அரங்கில் உள்நுழைய முற்பட்ட ஜெயப்பிரகாஷ் அதிரடியாக அவள் மீது மோதிவிட்டான். சுதாகரித்துக் கொண்டான் அவன்.

Sorry எனக் கூறிக் கொண்டு அவளது சிதறிக் கிடந்த கைப்பையையும் அதனுடன் இணைந்த பொருள்களையும் பொறுக்கி எடுத்தவன் நிமிர்ந்த போது பிரமித்துத்தான் போனான். புத்தம் புதிதாய்ப் பூத்த தாமரை நிறத்திலும் அதன் அழகுக்குக் குறைவில்லாத வகையிலும் ஒருத்தி, படபடத்த அவள் விழிகள் தாமரையில் மொய்த்த வண்டுகள் போல காட்சியளித்தன. செப்பு இதழின் வடிவழகோ பிரம்மனின் படைப்பின் திறனைப் பறைசாற்றியது வடித்துவைத்த சிலை போல ஒருத்தி கன்முன்நிற்பதைக் கண்ட அவன் ஓர் நிமிட இடைவெளிக்குப் பின்னர்தான் இமைக்க ஆரம்பித்தான் யார் இந்த தேவதை எங்கிருந்தாள் இவ்வளவு நாள்களாக என்ன பெயர் இவளுக்கு எந்த வருடத்தில் படிக்கின்றாள் இவள் எதனைப் படிக்கிறாள் கணப்பொழுதில் உதயமான கேள்விகள் யாவற்றினையும் ஓரமாய் வைத்துவிட்டு ஹலோ... நான் ஜெயப்பிரகாஷ்... பிரகாஷ் என்பார்கள். ..... தெரியாமல் மோதி விட்டேன் என்று படபடத்தவன் உள்ளே நுழைந்தான். அவளும் பரவாயில்லை. நானும் தான் கவனிக்க வில்லை உங்களில் குற்றமில்லை நானும் தான் பார்க்காமல் வந்து விட்டேன் ... என்று கூறிய படியே அவன் பின்னே உள்நுழைந்தாள். பழம் நழுவிப் பாலில் வீழ்ந்தது போலிருந்தது பிரகாஷுக்கு. அவளும்அவனருகே இருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள். சிறிதுநேரம் இருவரும் பேசவில்லை மேடையில் தில்லான முடிந்து கொண்டிருந்தது.

பிரகாஷ்தான் அப்போது வாயைத் திறந்தான்.

மன்னிக்கவேணும் உங்கட பெயர் சொல்லுவீங்களா?... எதிர்பார்ப்பினை மறந்தவாறு அவன் கேட்க அவளும் ஓர் முறை அவனை நிமிர்ந்து பார்த்தவளால் நான் மாதங்கி 3rd year management. ஓ.... சரி சரி நான் Final Low உங்களைச் சந்தித்ததில் சந்தோஷம் என்று தனது சந்தோஷத்தை வெளிப்படுத்தினான். அன்றைய அவர்களது நட்பானது நாளாவட்டத்தில் காதலாகிக் கனிந்து பெற்றோர் சம்மதத்தில் கல்யாணம் வரை சென்றது. அன்பில் திளைத்த இரு உள்ளம் ஆசையில் உருகி காதலில் கனிந்து நின்றது எத்தனை சந்தோஷங்களுண்டோ அத்தனையும் அவர்களுக்கு வலியவே கிடைத்தது. காதலின் அடையாளமாக மாதங்கி, மகவைச் சுமக்கத் தொடங்கினாள். ஆனந்தத்தின் உச்ச எல்லைக்குச்சென்றான் ஜெயப்பிரகாஷ்... விதி வலியது அல்லவா சோதனைக்காலம் அவர்களையும் விடவில்லை... ஆனந்தவாழ்வினில் ஓர் நாள்.... அன்றும் வழமை போலவே விடிந்தது. அன்று சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு பண்ணிய ஓர் விருந்துபசாரத்தில் பங்குபற்றுவதற்காக திருகோணமலை நோக்கிப் புறப்பட்டான் பிரகாஷ் தனது காதல் மனைவி மாதங்கியோடு திருகோணமலை, நிலாவெளியில் பிரசித்தமான Hotel ஒன்றில் அன்றைய விருந்துபசாரம் களைகட்டியிருந்தது. புதுமனைவியின் துணையோடு கம்பீரமாக ஆஜானுபாகுவாக அவனது அந்தக் கம்பீரம் மாதங்கிக்கு பெருமையோடு அவன்மேல் காதலையும் மேலும் அதிகரித்தது. மாதங்கியின் அழகைப் பற்றி விவாதிக்காத கூட்டமே அன்றிருக்க நியாயமில்லை இரண்டு நாள்கள் விருந்துபசார ஏற்பாடு அன்று இரவு விருந்துபசாரத்தோடு முடிப்பதாகத்தான் ஏற்பாடு.

அன்றைய மாலை நேர இனிமையை இதமாக் கழிக்க இளஞ்சோடி தமது வாகனத்தில் திருகோணமலை நகரை அண்டிய பகுதிகளில் உலாவந்து கொண்டிருந்தது. அன்றுதான் அந்த விபரீதமும் அரங்கேறியது.

தனது வாழ்வில் அனர்த்தம் நிகழப்போவது தெரியாமல் கேலியும் கிண்டலுமாக ஊடலும் கூடலுமாக அவர்களது மகிழுந்துப் பிரயாணம் மகிழ்வாக கடந்து கொண்டிருந்தது. அவர்களது அந்த இனிமைக்கு மேலும் இனிமை சேர்ப்பது போல திருகோணமலை நகர மத்தியில் காணப்பட்ட காளிகோவிலிலும் சனக் கூட்டம் அலை மோதியது. அம்பாளைத் தரிசித்த ஆனந்தத்தோடு நெற்றியில் விபூதியையும் குங்குமத்தையும் இட்டுக் கொண்டு தட்சனையைத் தட்டில் இட்டபடி பிரகாஷ் நடக்க அவன் பின்னாலே மருண்ட மானாக மாதங்கி, அங்கு நின்று துள்ளி விளையாடிய மான் கூட்டத்தினை அவனுக்குக் காட்டியபடி பின் நகர்ந்தாள். வீதியைக் கடந்து மைக்கேசர் விளையாட்டுத் திடலுக்கு அருகாமையில் நின்றிருந்த தனது காரினை எடுப்பதற்காக பிரகாஷ் வீதியைக் கடக்க முற்பட்டான் அவ்வேளை அவன்முன்னால் ஓர் எட்டு வயது மதிக் கத்தக்க சிறுவன் தனது தந்தையின் கரத்தினை உதறித் தள்ளியபடி வீதியைக் கடக்கமுற்பட்டான். சிறுகன்று பயமறியாது என்பார்கள். இங்கும் அதுதான் நிகழ்ந்தது. எதிர்பாராத அவனது பாய்ச்சல் கண்டு பிரகாஷை விட மாதங்கி பதறிப்போனாள் வீதியில் வேகவேகமாக வந்து கொண்டிருந்தது ஓர் தனியார் பேருந்து. நிச்சயம் அங்கு ஓர் அனர்த்தம் நிகழ்வதற்கான நிச்சயநிலை தென்பட்டது. சிறுவனை நெருங்கியது பேருந்து கணப்பொழுதில் இக்காட்சி மாதங்கியின் மனதையும் சிந்தனையையும் ஒரு நொடியில் தாக்கி நின்றது கண்ணில் மின்னல் ஒன்று பாய்ந்து மூளையைத் தாக்கியது போன்ற ஓர் பிரமை அவளுள் ஏற்பட்டது. கத்த வாய் எடுத்தவளின் உதடுகளிலிருந்து வெறும் காற்றுத்தான் வெளிப்பட்டது. கால்கள் துவண்டன கண்கள் இரண்டும் இருட்டை வாங்கிக் கொண்டன. மாதங்கி முல்லைக் கொடி போல அசைவற்றுத் துவண்டு சாய்ந்தாள் நிலத்தில். வீதி மருங்கில் கோவிலில் வழிபாட்டுக்காக வந்திருந்த மக்கள் கூட்டத்தில் நின்றிருந்த சில பெண்கள் விரைந்து ஓடி அவளைத் தூக்க நிறுத்த முயற்சித்தனர். யாவும் பயனற்றுப் போனது. அவள் கண் விழிக்கவில்லை. நான்கு எட்டில் பாய்ந்து வந்த பிரகாஷ் அவனைப் பூப்போல தூக்கி எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டு ஏய் மாது ... மாதும்மா.. எனக் கன்னத்தில் தட்டினான். ஆனால் எதுவும் பலன் தரவில்லை. வைத்தியசாலைக்குப் பறந்தது அவன் வாகனம். பல மணி நேர சிகிச்சைக்குப் பின் வைத்தியர் கூறினார் விபத்து கடந்துவிடும் என்கிற ஓர் அதிர்ச்சி அவளை மயக்கமடையச் செய்தது என்றார். எதுவானாலும் 48 மணித்தியால கவனிப்பின் பின் தான் உண்மை நிலை கூற முடியும் என்று கூறிநின்றார். வாழ்க்கையே சூனியமாகிப் போன பேரதிர்ச்சி அவனை ஆட்கொண்டது. அந்த இரண்டு நாட்களும் இரண்டு யுகமானது. அவனுக்குத் திருகோணமலையின் இனிமை கொடுமையாகிப் போனது தான் வேதனை. ஆனாலும் இறுதியில் வைத்தியர் கூறிய பதில் உலகமும் வானமும் சேர்ந்து அவனது தலையில் இடியாய் இறங்கியது போன்றிருந்தது. பிரகாசுக்கு மட்டுமில்லை. அவன் சார்ந்த மொத்த உறவுகளுமே ஸ்தம்பித்துப் போயினர்.

வைத்தியர் பிரகாஸிடம் கூறியது இதுதான். பிரகாஷ் உங்கள் மனைவி விபத்து நிகழ்ந்து விடும் என்கிற அதிர்ச்சிக்கு உள்ளாகி மயக்கமடைந்தார். அந்த அதிர்ச்சி அவரது மூளையைத் தாக்கிச் சென்று விட்டது. அதனால் அவர் கொண்ட மயக்கம் அவரை 'கோமா' நிலைக்கு கொண்டு சென்று விட்டது என்பதே. அந்த இடிதாங்கி செய்தி அழுது புரண்டான். உண்ணாமலே கோவில் கோவிலாக அலைந்தான். என்னென்ன இராஜ வைத்தியம் உண்டோ அத்தனையும் பார்த்துவிட்டான். ஆனால் பலன் வெறும் பூச்சியமே. கடந்த ஆறு மாத காலமாக அவள் இந்த பேசா மடந்தையாக நித்திரைப்பதுமையாக நிரந்தரமாக வைத்தியசாலை அந்த 7 ம் இலக்க அறையில் துயில் கொண்டுள்ளாள்.

மாதங்கி விபத்தின் போது கர்ப்பவதியாக இருந்ததனாலும் வைத்தியர்கள் குழந்தை ஆரோக்கியமாக வளர்ந்து வருகின்றது என்பதனாலும் அவளது இந்தக் கவனிப்பும் வைத்தியமும் அவளுடைய மணிவயிற்றில் வளரும் மகவுக்கும் உரியதாகியது. குழந்தை பிறக்கும் நிறைமாசத்தை எட்டிவிட்டாலும் இன்று அவளுக்கு அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையை பிரசவிக்க இருப்பதனாலும் இன்றைய இந்த இரவு நீண்ட இரவாகிப் போனது. பிரகாஷிற்கு விழிநீர் மல்க அவனது எழிற்கோலம் களை இழந்த ஓவியம் போல் ஆகியது. குழந்தையின் அழுகுரல் கேட்டு தன் சுயம் திரும்பினான் பிரகாஷ்.

முகத்தில் பிரகாசத்தின் சாயல் தோன்றியது. காதல் மனைவி தந்த அந்த முத்தாரத்தைக் காண கால்கள் வேகமாகப் பிரசவ அறை நோக்கி நகர்ந்தன. அங்கே தன் மகவைக் காணும்முன்னம் தன் ஆருயிர்க் துணைவியைத் தேடின அவன் விழிகள். அவள்.. அவனது இன்னுயிர் காதலி. இப்போதும் அந்த நித்திரைத் தாரகையாகவே இருந்தாள். எந்தமாற்றமும் அவளிடமில்லை. அடுத்தநொடி தன் இன்ப சாகரத்தை கட்டி வெல்லத்தை முத்துமழலையைச் சின்ன மாதங்கியைப் பூப்போல தூக்கி நெற்றியில் முத்தமிட்டான் பிரகாஷ். அன்றைய நாளும் அடுத்துவந்தநாளும் கடந்து மேலும் மூன்று மாதங்கள் கடந்தன. மாதங்கியிடம் எந்த மாறுதலுமில்லை. ஆனால் மனம் தளரா விக்கிரமனாகத்தான் எப்போதுமே இருந்தான் நம் பிரகாஷ். அன்றைய நாளும் வழமை போல விடிந்தது. மாலையாகி இருள் கவியத் தொடங்கியது. மாதங்கியின் தனிமை அறையில் பிரகாஷ் மெல்ல உள்ளே

(19ஆம் பக்கம் பார்க்க)

இந்தவாரம் முதல்

# குயில் கூடு

பாகம் 01

அமாவாசை இருள் சூழலைக் 'கும்' இருட்டாக்கிக் கொண்டிருந்தது. வானத்து விண் மீன்களின் அந்தச் சிறு துளி வெளிச்சம் வானலை வழி வந்து பூமியை நிரப்பிக் கொண்டிருந்தது. இருவேறு முரண்பாட்டிற்குள் சிக்கித்தவித்த புள் இனங்கள் சிறகுகளை ஓர் முறை அடித்து தமது கூட்டுக்குள் முடங்கிக் கொண்டன. தூரத்தில் அந்த ஒற்றை நாயின் குரைப்பு மெதுமெதுவாக ஓய்ந்து கொண்டிருந்தது. சூசையப்பர் கோவில் மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து மணி பன்னிரண்டுமுறை ஒலித்து ஓய்ந்தது. ஊர் ஓய்ந்து வெகுநேரமாகியது. ஆனாலும் தொலைவில் மோட்டார் சைக்கிளின் ஓசைகள் அடிக்கடி மெதுவாகக் கேட்டவண்ணமே இருந்தன. காலத்தின் கோலம் இயந்திர வாழ்வில் இரவில் கூட அந்த அமைதி பறிபோய் பலகாலம் ஆகிவிட்டிருந்தது. 'நிர்மலா' அதுதான் அவள் பெயர்.

புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள். நள்ளிரவு தாண்டியும் அவள் கண் இமைகள் கொஞ்சம் கூட மூடுவதாக இல்லை. இரவினைச் சபித்தபடி மெதுவாக எழுந்து அமர்ந்தாள். மங்கிய இரவின் வெளிச்சம் அவளது கட்டிலுக்கு நேரே உயிரிழந்து போகும்போல் மங்கலாக இருந்தது. தலைமாட்டு மேசையில் இந்த செம்பிலிருந்து இரண்டு மிடறு தண்ணீரைக் குடித்தவள் 'கடவுளே நித்திரை வர மாட்டேன் என்கிறதே' என இரவை நொந்தபடி மீண்டும் தலையணைக்கு மேல் இன்னொரு தலையணையை வைத்து கொஞ்சம் உயரமாக்கிக் கொண்ட பின் படுத்துக் கொண்டாள். கண் இமைகள் மெதுவாக இறுகத் தொடங்கின.

'நிர்மலா' அவளது இயற்பெயர். ஜெனற் நிர்மலா. நித்திரையைத் தொலைத்து அவள் நீண்ட நேரம் விழித்திருந்து புரள்வதற்கு என்னதான் காரணமாக இருக்கலாம்... விடை தெரியா வினாவால் நீங்கள் புலம்புவது எனக்குப் புரியாமல் இல்லை. நிர்மலா அவள்தான் நமது கதையின் நாயகி. சுண்டிவிட்டால் கன்றிவிடும் நிறமுமல்ல, எட்டிப்பிடித்தால் ஒடிந்து விடும் சிற்றிடையும் அல்ல. பருவத்தில் கனிந்து பார்ப்போரைப் பரவசப்படுத்தும் பருவ மங்கையுமல்ல. அதற்காக ஆண்டு அனுபவித்த உதிரும் நிலை வந்துவிட்ட பழுத்த பழமும் இல்லை நிர்மலா. அவள் முப்பத்தெட்டு வயதுமுடிந்து முப்பத்தொன்பது வயதில் நிற்கும் பேரிளம் பெண்தான். அவள் கன்றிவிடும் நிறமில்லாவிட்டாலும்பார்ப்போரைச்சுண்டியிழுக்கும் ஏதோ ஒருவகை கவர்ச்சி எப்போதும் அவளிடம் குடிகொண்டிருக்கும் ஓர் இயல்பாகும். கதை சொல்லும் காந்தக் கண்கள் அவளது சொத்து. மெல்லிய உடல்வகு இல்லைதான் ஆனாலும் கொழுத்த உடல்வாகும் கிடையாது. அளவான கட்டுக் கோப்பான உடல்வகு பழைய பழம்பெரும் நடிகை சாவித்திரியை நினைவூட்டுவதாக அமைந்திருப்பவை உடலமைப்பும் அவளது கண்களும் தான். யாழ் நகர மத்தியில் தூய கத்தோலிக்கக் குடியில் வந்த மத்தியாஸ் சூசையப்புவுக்கும் பிலோமின் றோசம்மாவுக்கும் பிறந்த மகள்தான் இந்த ஜெனற் நிர்மலா. இரண்டு ஆண் சகோதரர்களுக்கும் இரு பெண் சகோதரிகளுக்கும் கடைக்குட்டியாய் ஐந்தாவதாய்ப் பிறந்தவள். ஐயா. அம்மா இருவரும் இறந்துவிட தமையன்மார், தமக்கைமாரின் அரவணைப்பில் வாழ்ந்து இன்று திருமணமாகி தன் இல்லத்துத் தலைவனோடு வாழ்ந்து வரும் பாவை அவள். றொபின் அலெக்ஸ் தான் அவளது கணவன். தனியார் நிறுவனமொன்றில் முக்கிய பொறுப்பிலிருப்பவன்.



திறந்திருந்த யன்னல் வழியே சூரியக் கதிரின் கீற்று முகத்தில் பட்டு சுட்டுவிட உடனே கண் விழித்து விடாமல் கட்டிலை தனது வலது கையால் ஓர் துளாவல் துளாவினாள். கட்டில் வெறுமையாக இருந்தது. தலையணை மட்டும் நடுவே அவள் கைகளில் தட்டுப்பட்டது. ஐயோ... இவர் எழும்பிவிட்டார் போல.... என்று மனதில் உச்சரித்தவள் சடாரென போர்வையை விலக்கிக் கொண்டு சோம்பல் முறித்தவளாக எழும்பி தன் தலைமுடியை இருகைகளாலும் பிடித்து ஓர் திருகு திருகிக் கொண்டையாக முடித்துக் கொண்டாள். முடித்தவள் வாய்விட்டுக் கூப்பிட்டாள். 'இஞ்சரப்பா... எங்க நிற்குறீங்க... என்னை எழுப்பியிருக்கலாமல்லோ... இவ்வளவு நேரம் நித்திரையாகிப் போனேன்.. .. இரவு நித்திரை வரயில்லைத்தானே... என்று கழிவறை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்... ஓம்.. ஓம் நீர் நல்ல நித்திரையப்பா எழுப்ப மனம்வரயில்ல. அதுதான் நான் எழும்பி வந்துட்டன்... என்று பதில் குரல் முன் கூடத்திலிருந்து வந்தது. அங்கு அமர்ந்திருந்த அலெக்ஸ்னது குரல் தான் அது. அன்றைய சனி வாரமலரான 'செம்மண்ணைப் புரட்டிக் கொண்ருந்தான் அவன். என்னப்பா பேப்பர் வந்துட்டுதோ... வாங்கி வந்துட்டீங்களோ... எனக் கேள்வி கேட்டபடியே இஞ்சரப்பா.. இண்டைக்குப் பால் வந்ததோ.. நேற்றும் பால்காரன் வரவில்லை. உங்களுக்கு ரின் பாலில ரீ போடவோப்பா என்று கூறியபடியே முன் கூடத்துக்குள் வந்தாள் நிர்மலா... அவளை நிமிர்ந்து பார்த்த அலெக்ஸ், ஓம் போட்டுக் கொண்டு வாரும்... உமக்கும் போட்டு எடுத்து வாரும். நானும் பார்க்குறன் நீர் வர வர நல்லா சாப்பிடுறதில்லை... என்னதான் செய்யுறீரோ... என மெல்லக் கோபம் காட்டியவனாக 'செம்மண்ணை'ப் புரட்டினான். 'விரல் ரேகையைப் போல் தனித்துவமானது தாய்ப்பால்' என்கிற பன்னிரண்டாம் பக்க ஆக்கமொன்று மின்விசிறியின் தாக்கத்தில் சிக்குண்டு மெலெழுந்து பறந்து நிர்மலாவின் முகத்தில் தஞ்சம் கேட்டு நின்றது. பத்திரிகையை

மதிவதனி இராஜசேகரன்
(B.A, IHD in Law)

கையிலெடுத்து பக்கத்தைப் பார்த்தவளின் பங்கஜ வதனம் ஓர்முறை கன்றி வாடியது. இமைகள் படபடத்து விரிந்து சோகத்தைச் சொல்லியது. உதடுகள் வெடித்து விம்மல் வந்து விடுமோ என நினைத்தவன் தன் முன் பற்களைக் கொண்டு உதடுகளை அழுத்தினாள்.

ஆனாலும் அவளை மீறிப் பெருமூச்சினோடு சிறிய முனகலோடு திரும்பி அடி எடுத்து வைத்தவளை நிமிரும்போது கண்ணுற்ற அலெக்ஸ் எழுந்து மெதுவகத் திருப்பினான். நிம்மி... ஏய் நிம்மி.. அவனது ஆறுதல் குரலையும் மீறி அவள் குரல் உடைந்தது. அவன் தோள்மீது சாய்ந்து விம்ம ஆரம்பித்தான் அவள்...

தொடரும்....

# சிந்திய துளி நீர்...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி....)

போனான். அவன் கையில் அவனது விலையுயர்ந்த கைத்தொலைபேசியும் கேட்கும் உபகரணமும் இருந்தது. தொட்டிலில் விளையாடிக் கொண்டிருந்த மகளை மெதுவாகத் தூக்கி எடுத்தான். அவளது பூப்போன்ற மென் பஞ்சுப் பாதங்களில் கொஞ்சம் வலிக்கும்படி சுண்டினான். குழந்தை அழ ஆரம்பித்தாள். குவா... குவா... என அவள் அழுகை மேலும் மேலும் அதிகரித்தது.

அவளது அழுகுரலைத் தனது தொலைபேசியில் பதிவு செய்து கொண்டான். அதிகரித்த அழுகை மேலும் அதிகரிக்க மேலும் இரண்டுமுறை பாதங்களில் வலிக்கும்படி சுண்டினான். அதையும் பதிவு செய்து கொண்டான். குழந்தை அமைதியாகத் தூங்கும் வரை தாலாட்டி உறங்க வைத்தான். வைத்தியரின் சில ஆலோசனைப்படி குழந்தையின் பதிவு செய்யப்பட்ட அழுகைக்குரலை தான் வைத்திருந்த கேட்கும் உபகரணத்தினூடாக மாதங்கியின் காதுவரை சேர்த்தான் பிரகாஷ். மீண்டும் மீண்டும் மாதங்கியின் காது மடல்களுக்குள் குழந்தையின் அழுகுரல் ஒலித்துக் கொண்டே இருந்தது. பெற்றமனமல்லவா அவள் பித்தென்பது யாம் அறியாததா என்ன. உலக அதிசயம் அன்னை.

இது யாவரும் அறிந்த உண்மை... ஆம் பிரகாஷின் அந்தக் குரல் தொடுகை வைத்தியம் மாதங்கியின் மன ஆழத்தில் பிரதிபலித்ததோ என்னமோ அழகான செம்பட்டுக் கன்னங்கள் என்றுமில்லாதவாறு கன்றிச் சிவந்தன. கண்மடல்கள் விரியவில்லை. ஆனால் தன் மகவு தன்முன் அழும் அந்த அமுதக் குரல் எந்நிலையிலும் அந்தத் தாயை எழுப்பிவிடும் என்பதற்குச் சான்று சாட்சியாக அவள் கண்களிலிருந்து ஒரு துளி நீர் மட்டும் கன்னத்தில் வீழ்ந்து காதோரம் தொக்கி நின்றது. இதைக் கண்ணுற்ற பிரகாஷின் உள்ளத்தில் ஆயிரம் பூ பூத்தது. .. வானத்தில் விடி வெள்ளி தோன்றிவிட எங்கோ ஓர் தொலைவில் வசந்தகாலக் குயிலின் ஓசை காற்றிலே கலந்து வந்தது....



என்றோ ஒருநாள் அவள் மாதங்கி கண்விழித்து விடப்போகிறாள் என்ற நம்பிக்கை அவன் உள்ள ஆழத்தில் ஆழமாய் வேரூன்றியது. அவ்வேளை உதய சூரியனின் காலைக்கதிர்கள் மெல்ல மெல்ல முழு உலகையும் வியாபிக்கத் தொடங்கியது.... என்றோ ஒருநாள் என் மனைவி புத்துயிர் பெற்று எழுவாள் என்கிற நம்பிக்கையுடன் பிரகாஷ் எழுந்து நடக்க ஆரம்பித்தான்.



# வாழ்க்கையில் இப்படியெல்லாம் இருக்கு தெரியுமா ?

ப்ரியமதா பயஸ்

நீங்கள் எந்தவிதமான காலணிகளை அணிந்து இருக்கீறீர்கள் என்பதையே உங்களை சந்திக்கும் நபர் முதலில் கவனிப்பார். அதை வைத்து தான் உங்களின் மீதான முக்கிய மதிப்பீடு அமையும் என உளவியல் சொல்கிறது.

நீங்கள் சிக்கலான சந்திப்புகளில் (Meeting) உங்கள் மேலாளரின் திட்டுகளில் இருந்து தப்பிக்க வேண்டுமானால் அவரது இருக்கைக்கு அடுத்த இருக்கையில் அமர வேண்டும். ஏனெனில் நமது மூளை எதிரே இருப்பவரின் மீது தான் அதிக கவனம் செலுத்தும்.

உளவியல் படி, சிவப்பு வண்ணம் அணியும் பெண்களும், நீல வண்ணம் அணியும் ஆண்களுமே அதிகமாக எதிர்பாலினத்தவரை ஈர்க்கின்றனர் எனக் கூறுகின்றனர்.

ஒரு செயலை தொடர்ச்சியாக 66 நாள்களுக்கு செய்தால் அது உங்களின் பழக்கமாக (Habit) மாறி விடும். பழக்க வழக்கங்களே நமது வாழ்க்கையை தீர்மானிக்கின்றன.

முக்கியமான வேலையில் இருக்கும் போது அதற்கு சம்பந்தம் இல்லாத பிற சிந்தனைகள் திரும்ப திரும்ப நினைவில் வந்து நம்மை திசை திருப்பும், குறிப்பாக தேர்வு எழுதும் பொழுது சினிமாப் பாடல்கள் வரிகள் நினைவில் வரும். அப்போது அந்த பாடலின் இறுதியைப் பற்றி சிந்திக்கும் போது அந்தப் பாடல் நமது சிந்தனையிலிந்து விலகும்.

நீங்கள் கேட்கும் இசை, உலகத்தின் மீதான உங்கள் பார்வையை மாற்றும் சக்தி வாய்ந்தது.

தியானத்தை தொடர்ச்சியாக 8 வாரங்கள் செய்வதால் நமது மூளையின் கற்றல் தொடர்பான பகுதி (Grey Matter) அதிகமாவதாக கூறுகின்றனர்.

தூக்கமின்மை மற்றும் அளவு கடந்த பசி ஆகிய இரண்டும் தான் நமது கோபத்திற்கான மிக முக்கிய காரணங்களாகும்.

நம் நடத்தை (Behaviour) நாம் உடுத்தும் உடையை பொறுத்தும் அமையும். பேனாவை பற்களுக்கு இடையே வைப்பதன் மூலம் நமது மூளைக்கு நாம் மகிழ்ச்சியாகவும் மற்றும் சிரிப்பதும் போன்ற உணர்வை கொடுக்கலாம்.

நல்ல வாசனைத் திரவியங்களை உபயோகிப்பவரை நுகரும் போது நம்மை அறியாமலேயே அவர்கள் மீது ஈர்ப்பு ஏற்படும். ஆண்கள், அவர்கள் தாயின் உடல் எலும்பு அமைப்பை ஒத்த பெண்களினால் அதிகமாக ஈர்க்கப்படுகிறார்கள்.

அதிகப்படியான சிந்தித்தலுடன் உறங்கும் போது நமது மூளை நாம் விழித்து இருப்பதாகவே கருதுமாம். அதனால்தான் தூங்கி எழும் போது சோர்வாக உணர்கிறோம்.

ஆண்கள் சராசரியாக ஒரு நாளைக்கு 12,500 சொற்களும் பெண்கள் 22,000 சொற்களும் பேசுகின்றனர் எனக் கூறப்படுகிறது. ஒருவர் உணவு அருந்தும் சமயத்தில் ஏதாவது பொருள்களோ நபரோ அறிமுகமானால் அதன் மீது சிறப்பு அபிப்பிராயம் ஏற்படும்.

சிவப்பு, ஆரஞ்சு மற்றும் மஞ்சள் வண்ணங்கள் பசியைத் தூண்டும் உணர்வு உடையவை. உணவகங்கள் பெரும்பாலும் இந்த வண்ணத்தில் தான் இருப்பதற்கு காரணம் இதுதான். 20 நிமிடங்களுக்கு மேல் நம்மால் தொடர்ச்சியாக ஒரே விடயத்தில் கவனத்தை செலுத்த முடியாது. போதையில் ஒருவர் சொல்லும் கூற்றுகள் 65% உண்மையாக இருக்கும்.

உங்களை யாராவது கவனிக்கிறார்களா என்பதை கண்டறிய கொட்டாவி விடுங்கள். ஏனெனில் கொட்டாவி ஒரு தொற்று போன்றது. யாராவது கொட்டாவி விடுவதை பார்த்தாலோ நினைத்தாலோ (கொட்டாவி விடும் வீடியோ பார்த்தால் கூட) நிச்சயமாக நம்மை கவனிக்கும் நபருக்கும் வரும். நீங்கள் கோபமாக இருக்கையில் எண்களை இறங்கு வரிசையில் எண்ணும் போது (10,9,8,7) கோபத்தின் வீரியம் குறைய ஆரம்பிக்கும்

# உலகத்திலேயே கொடுமையான உணர்வு இதுதான்



நாம் உபயோகப்படுத்தப்பட்டு தூக்கியெறியப்பட்டோம் என்ற உணர்வு தான் உலகத்திலேயே கொடுமையான உணர்வு. நாம் உண்மையாக அன்பு செலுத்தும் ஒருவரிடம் வெகு நாள்கள் கோபத்துடன் இருக்க முடியாது.

ஒருவர் மீது நம் கோபம் மூன்று நாள்களுக்கு மேல்தொடருமானால், அவர் மீது நமக்கு உண்மையான அன்பு இல்லை என்று அர்த்தம். பொதுவாக எல்லோரிடமும் நன்றாக பழகுபவரே அதிக மனக் காயம் அடைகிறார்.

ஒருவர் நம்மிடம் பொய் சொல்கிறார் என்று நம்பினால், நாம் ஒன்றுமே சொல்லத் தேவையில்லை. அவரே அதற்கான காரணங்களை பட்டியலிடுவார். நமக்கு தெரிந்த ஒரு அறிவுரையை ஒருவர் சொல்லும்போது, எனக்குத் தெரியும் என்று சொல்லாமல் உண்மைதான் என்பது நாகரிகமானது.

மனித மனது ஞாபகங்களை அசை போட்டுக்கொண்டு இருப்பதால் தான் அது உயிர்ப்புடன் இருக்கிறது.

ஏதோ ஒன்றுக்காக வாதிடும் நபர் பெரும்பாலும் தன் கட்டுப்பாட்டை இழந்து கத்தவே செய்வார். பதிலுக்கு கத்துவது தான் மனித இயல்பு. அதை செய்ய வேண்டாம். அமைதி காத்து மெதுவாக பதில் கொடுப்பதே வெற்றி கொடுக்கும்.

எப்போதும் நம் உள்ளுணர்வு சரியாக தான் இருக்கும். ஏதோ இருக்கிறது என்று அது சொன்னால், கண்டிப்பாக ஏதோ இருக்கும். கோபம், ஏமாற்றம், இப்படி நம் உணர்வுகளுக்கு ஞாபகம் என்னும் தீனியை போட்டுக்கொண்டு இருப்பதால் தான், அதை விட்டு நம்மால் விலக முடியவில்லை.

நம் நடத்தை மற்றும் தோற்றத்திலும் மற்றவர்கள் கவனிக்கும் அளவை விட அவர்கள் அவ்வாறு கவனிப்பதாக நாம் தான் எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

யாரேனும் நீங்கள் மாறி விட்டிர்கள் என்றால், அவர்கள் எதிர்பார்த்தது போல நீங்கள் நடிப்பதை நிறுத்திவிட்டீர்கள் என்பதற்கான 95% வாய்ப்பு உள்ளது.

நம்முடன் சேர்ந்து வம்பு பேசுபவர் நம்மைப் பற்றியும் வம்பளப்பார் என்பதை மனதில் இருத்தவும்.

எதிலும் ஒழுங்கு எதிர்ப்பார்ப்பவர்கள், தன்னை அதனால் வருத்திக் கொள்வதால், அதிக மன உளைச்சலுக்கு உள்ளாவர்.

# கத்தோலிக்கத் திருச்சபையின் வரலாற்றில் இரு திருத்தந்தையர்களின் சமகால இருப்பு

## ஆறு நூற்றாண்டுகளில் நடைபெறாத ஓர் அபூர்வ நிகழ்வு

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்-
(ஊடக வருகை விரிவுரையாளர் -
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் -
யாழ். பல்கலைக்கழகம்,
இயக்குநர் - பிஷ்ப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

94 வயதை அடைந்துள்ள ஓய்வு நிலை திருத்தந்தை 16 ஆவது பெனடிக்ற் அவர்கள் அண்மையில் கூறிய ஒரு விடயம் கத்தோலிக்க உலகை மட்டுமல்ல, முழு உலகையுமே சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

விரைவில் இவ்வுலகை விட்டு அகன்று, விண்ணுலகில் உள்ள எனது அன்புக்குரியவர்களிடம் இணையப் போகிறேன் என்ற அவரின் வார்த்தைகளே அனைவரையும் நின்று யோசிக்க வைத்துள்ளது.

அத்துடன் ஓய்வு நிலை திருத்தந்தை 16ஆவது பெனடிக்ற் அவர்கள் மரணத்தை ஏற்றுக் கொண்டுள்ளமையுடன் மரணத்தை வரவேற்றுக் காத்திருக்கிறார் என எண்ணவும் செய்துள்ளது.

94 வயதை அடைந்துள்ள ஓய்வு நிலை திருத்தந்தை 16 ஆவது பெனடிக்ற் அவர்கள் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொள்ளும் போது சரித்திரத்தில் ஒரு பெரிய மாற்றம் ஏற்படவுள்ளது. திருத்தந்தை 16 ஆவது பெனடிக்ற் - திருத்தந்தை பிரான்சீஸ் ஆகிய இரு திருத்தந்தையர்களும் கத்தோலிக்க திருச்சபையில் சம காலத்தில் இருப்பது ஆறு நூற்றாண்டுகளில் நடைபெறாத ஓர் அபூர்வ நிகழ்வு. இந்த இரு திருத் தந்தையர்களின் சமகால இருப்பு பற்றி முத்திரை ஒன்றை வத்திக்கான் அரசு வெளியிட்டுள்ளது என்பது இங்கு நோக்கப்பட வேண்டிய ஒன்று. இந்த முத்திரை இவ்வாக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

### கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் இரண்டு திருத்தந்தையர்கள்

கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் இரண்டு திருத்தந்தையர்கள் ஒரே நேரத்தில் இருந்தார்கள் என்பது 600 ஆண்டுகளாக நடைபெறாத சம்பவம். எனவே தான் தமது முதிர்ந்த வயது காரணமாகவும், உடல் நலக் குறைவு காரணமாகவும் தாம் திருத்தந்தைப் பணியை 2013 பெப்ரவரி 28ஆம் நாள் துறக்கப் போகிறோர் எனத் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு உலகக் கத்தோலிக்க திருச்



சபையைப் பொறுத்தவரை மிக அதிர்ச்சியான ஒரு செய்தியாக அமைந்தது. 600 ஆண்டுகளுக்கு மேலாக இவ்வாறு ஒரு திருத்தந்தை பணியிலிருந்து விலகினர் அல்லர் என்பதோடு திருத்தந்தைப் பதவி வாழ்நாள் முழுவதற்கும் நீடிக்கும் ஒரு பதவி என்பதே வழக்கமாகும். ஒரு திருத்தந்தையின் இறப்புக்குப் பின்னர்தான் புதிய திருத்தந்தை தேர்ந்தெடுக்கப்படுவார்.

### ஓய்வு நிலை திருத்தந்தை 16வது பெனடிக்ற் அவர்கள்

திருத்தந்தை பதினாறாம் ஆசீர்வாதப்பர் உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் 265 ஆவது திருத்தந்தையாக இருந்தவர். இவர் 1927 ஏப்ரல் திங்கள் 16ஆம் நாள் பவேரியா, ஜேர்மனியில் பிறந்தார். இவரது இயற்பெயர் ஜோசப் ராட்ஸிங்கர் என்பதாகும். 2005 ஏப்ரல் திங்கள் 19ஆம் நாள் தனது 78 அகவையில் திருத்தந்தையாகப் பொறுப்பேற்றார். தமக்கு முன்னிருந்தவர்களைப் போலவே திருத்தந்தையாகத் தேர்வு செய்யப்பட்டவுடன் பெயர் மாற்றம் செய்து கொண்டார். 2005 ஏப்ரல் திங்கள் 24ஆம் நாள் பாப்பரசராக தமது முதல் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். 2005 மே திங்கள் 7 ஆம் நாள் புனித யோவான் லாத்தரன் பேராலயத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் முன்னதாக மூனிச் உயர்மறைமாவட்டத்



தின் கர்தினால் பேராயராக செயற்பட்டு வந்தார். இவர் கத்தோலிக்க திருச்சபையின் 264 திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரின் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பினார். இவர் 28 பெப்ரவரி 2013இல் உரோம் நேரம் இரவு 8 மணிக்கு தனது திருத்தந்தை பதவியிலிருந்து விலகினார்.

### திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற் பணித் துறப்பு

திருத்தந்தை பதினாறாம் பெனடிக் அவர்கள் தமது பணியைத் துறக்கப் போகிறார் என்ற அதிர்ச்சி அறிவிப்பு முதல் முறையாக வத்திக்கான் நகரில் 2013 பெப்ரவரி 11ஆம் நாள் காலையில் வெளியிடப்பட்டது.

கடந்த சுமார் 600 ஆண்டுகளாக திருத்தந்தையர் தம் பணியைத் துறந்தவர்கள் அல்லர். பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் தம் இறப்பு வரை பதவி வகிப்பதே வழக்கமாக இருந்தது. இப்பின்னணியில் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ற் தாம் பணி துறக்கப்போகிறார் என அறிவித்தமை கத்தோலிக்க திருச்சபையிலும் உலக அளவிலும் அதிர்ச்சியான செய்தியாக இருந்தது.

தமது வயது முதிர்வு மற்றும் உடல் நலக் குறைவு காரணமாகத் தாம் பணி துறக்கவிருக்கிறார் என திருத்தந்தை அறிவித்தார். இந்த அறிவிப்பை வெளியிட்டபோது அவருக்கு வயது 85. பணி துறப்பு பற்றிய அறிவிப்பைத் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ற் அவர்கள் வெளியிட்ட பெப்ரவரி 11ஆம் நாள் கத்தோலிக்க திருச்சபையால் கடைப்பிடிக்கப்படுகின்ற உலக நோயாளர் நாள் ஆகும். தாமும் நோய்வாய்ப்பட்டிருப்பதை உணர்த்துவதற்காக அந்த நாளை அவர் தேர்ந்துகொண்டார் என்று கருதப்படுகிறது. மேலும் சில மறைச்சாட்சிகளுக்குப் புனிதர் பட்டம் அளிப்பதற்கான அறிவிப்பையும் அன்று திருத்தந்தை பெனடிக்ற் அவர்கள் உரோமையில் கூடிய கர்தினால்கள் முன்னிலையில் வெளியிட்டார்.

தம் பணி துறப்பு அறிவிப்பைத் திருத்தந்தை பெனடிக்ற் அவர்கள் இலத்தீன் மொழியில் வாசித்தார். தாம் அறிவிக்கவிருக்கின்ற முடிவு திருச்சபையின் வாழ்வைப் பொறுத்தமட்டில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர் கூறினார். தாம் பணி விலகினாலும் இறைவேண்டலில் ஈடுபட்டு திருச்சபையின் நலனுக்காகத் தம்




வாழ்வை அர்ப்பணிக்கப் போகிறேன் எனவும் அவர் உறுதியளித்தார்.

### தொடர் நிகழ்வுகள்

2013 பெப்ரவரி 13ஆம் நாள், வழக்கமான புதன் உரை நிகழ்த்தலின் போது, தமக்காகவும், தமக்குப் பின் திருத்தந்தைப் பதவியை ஏற்பவருக்காகவும் இறைவனை மன்றாடும்படி மக்களிடம் கேட்டுக்கொண்டார். பல நூற்றாண்டுகளாக இத்தகைய பணி துறப்பு நிகழாததால், வத்திக்கான் நகர ஆட்சித் துறையினர் பல விவரங்களைப் படிப்படியாகத்தான் தெரிவித்தனர். ஓய்வு பெறுகின்ற திருத்தந்தை எப்பெயரால் அழைக்கப்படுவார், எவ்வித உடை அணிவார், எங்கே தங்கியிருப்பார் போன்ற பல கேள்விகளுக்குப் பதில் காண வேண்டியிருந்தது.

பணி துறந்த பதினாறாம் பெனடிக்ற் இவர்கள் 'ஓய்வுபெற்ற திருத்தந்தை' என்று அழைக்கப்படுவார். திருத்தந்தையாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டபோது சூடிக்கொண்ட பதினாறாம் பெனடிக்ற் என்னும் பெயர் அவருக்குத் தொடரும். திருத்தந்தைக்கே உரிய வெண்ணிற அங்கியை அவர் அணிவார். ஆயினும் அந்த அங்கியில் வேறு அணிகள் இணைக்கப்படாது. அவர் வழக்கமாக அணிந்த சிவப்பு நிறக் காலணியைக் களைந்து விட்டு சாதாரண காலணிகளை அணிவார்.

வத்திக்கான் நகரத்திற்கு உள்ளேயே தாம் தங்கியிருக்க பதினாறாம் பெனடிக்ற் முடிவு செய்துள்ளார். ஓய்வுபெற்ற பின் இரு மாதங்கள் காஸ்டல் கண்டோல்போ என்னும் கோடையில்லத்தில் தங்கியிருப்பார். அப்போது அவருக்கு நிலையான இருப்பிடம் வத்திக்கான் நகருக்குள் தயாரிக்கப்படும். அந்த நிலையான ஓய்விடம் இதுவரை ஒரு துறவற இல்லமாக இருந்து வந்தது. அந்த இல்லத்தில் சில மாற்றங்கள் செய்து முடிந்ததும் பதினாறாம் பெனடிக்ற் அங்கு நிலையாகக் குடியேறி ஓய்வெடுப்பார் என முடிவு செய்யப்பட்டது.

### பணிதுறந்த நாள் நிகழ்வுகள்

2013 பெப்ரவரி 28ஆம் நாள் பதினாறாம் பெனடிக்ற் அவர்கள் பணிதுறப்பது தொடர்பாக பல நிகழ்ச்சிகள் நடந்தன. காலையில் திருத்தந்தை தம் உறைவிடத்தில் கூடியிருந்த சுமார் 70 கர்தினால்மார்களை சந்தித்தார். ஏனைய கர்தினால்மார் உலகின் பல பகுதிகளிலிருந்தும் வத்திக்கானுக்கு வந்துகொண்டிருந்தனர். வத்திக்கானில் ஏற்கெனவே கூடியிருந்த கர்தினால்மார்களுக்கு உரையாற்றியபோது தமக்குப் பின் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் அவர்கள் நடுவிலிருந்து வருவார் என்றும் அவருக்குத் தாம்

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்

நிபந்தனையற்ற கீழ்ப்படிதலையும் மரியாதையையும் அளிக்கிறார் எனவும் பெனடிக்ற் அவர்கள் வாக்களித்தார். கர்தினால்மார் ஒருவர் ஒருவராகத் திருத்தந்தையை அணுகி மரியாதைத் தெரிவித்துக் கொண்டனர்.

பின்னர் திருத்தந்தை தமக்குத் திருச்சபை ஆட்சியில் நேரடியாக ஒத்துழைப்பு நல்கிய அனைவரையும் சந்தித்து சிறிது உரையாற்றி ஆசி வழங்கினார். பின்னர் மாலை 4:45 அளவில் வத்திக்கான் நகரில் அமைந்துள்ள சிறிய உலங்கு வானூர்தி தளத்திற்குச் சென்று வானூர்தியில் ஏறினார். சுமார் 15 நிமிட பயணத்திற்குப்பின் 5.00 மணிக்கு அல்பானி குன்றில் அமைந்துள்ள உலங்கு வானூர்தி தளத்தில் இறங்கி, அங்கிருந்து காஸ்டல் கண்டோல்போ கோடையில்லம் சென்றார். கோடையில்ல வளாகத்தில் கூடிவந்திருந்த மக்களுக்குச் சிறிய உரையாற்றி இறுதியாக விடைபெற்றுக்கொண்டார். இவ்வாறு திருத்தந்தை பதினாறாம் பெனடிக்டின் சுமார் எட்டு ஆண்டு பணிக் காலம் முடிவுக்கு வந்தது.

திருத்தந்தை பெனடிக்ற் அவர்கள் வத்திக்கானை விட்டு கோடையில்லம் செல்ல உலங்கு வானூர்தியில் ஏறும் வேளையில் தமதி இறுதி டுவிட்டர் செய்தியை அனுப்பினார். 'உங்கள் அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றி. கிறிஸ்துவை உங்கள் வாழ்வின் மையமாகக் கொண்டிருந்து அதனால் ஏற்படும் மகிழ்ச்சியை நீங்கள் எப்போதும் அனுபவித்திட வாழ்த்துகின்றேன்' - என அச்செய்தி அமைந்திருந்தது.

எங்கள் ஞானத்தந்தையர்க்கே இறைவனே ஆசீ அருள்குவீரே என இறையாசீர் வேண்டுவோம்.

# யாழ்ப்பாணத்தின் மாண்புமிகு ஆளுமை



- முனைவர்.திருநாவுக்கரசு கமலநாதன் -
(இணைத்தலைவர், நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்)

குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் யாழ்ப்பாணச் சைவத் தமிழர் ஆளுமையின் மதிப்பார்ந்த அடையாளம்.

நல்லூர் கந்தசுவாமியார் ஈழத்துச் சைவ மக்களினதும், உலகம் முழுவதும் பரந்து வாழுகின்ற சைவ மக்களதும் கண்கண்ட தெய்வம். கலியுக வரதன். நல்லூர்க் கந்தனை ஒரு முறையாயினும் தரிசனம் செய்து விடவேண்டுமெனத் தமிழ்க் கூறு நல்லுலகச் சைவமக்கள் அவாவுற்றிருப்பதை அறிவோம். அந்த அவா தோன்றக் கந்தனின் கருணைக் கடாட்சத்தை உலகறியச் செய்த பெருமை மாப்பாணர் குடும்பத்திற்கே உரியது.

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் நிர்வாகம் அதன் ஆரம்பம் முதல் மாப்பாணர் குடும்பத்தாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கோயிலின் முழு உரித்துடையவர்களும் அவர்களே.

தற்போது பெருங்கோயிலாக வியத்தகு வளர்ச்சி கண்டுள்ள நல்லூர் கந்தசுவாமி ஆலயம் கி.பி.1734 இல், கச்சேரியில் சிறாப்பராகப் பணியாற்றிய முதலாம் இரகுநாத மாப்பாண முதலியார் அவர்களால் சிறு ஓலைக் குடிசையில் உருவாக்கம் பெற்றதாக வரலாற்று ஆய்வில் க.சி.குலநாதன் குறிப்பிட்டுள்ளார். அவர் 1882ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட பழைய இடாப்பொன்றில் இருந்து இத்தகவலைப் பெற்றார் எனக் கூறியுள்ளார். அன்றிலிருந்து மாப்பாணர் பரம்பரையினர் மேற்படி கோயிலைச் சிறப்புற நிருவகித்து வருகின்றனர். அந்த மாப்பாணர் பரம்பரை வரிசையில் பத்தாவது நிர்வாக அதிகாரி குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் ஆவார்.

குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்கள் 1929 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி பிறந்தார். அவர் தனது ஆரம்பக் கல்வியை நல்லூர் மங்கயர்க்கரசி வித்தியாசாலையில் கற்று இடைநிலைக் கல்விக்காக, மத்திய கல்லூரியில் இணைந்தார். பின்னர் கொழும்பு சென் பீற்றேர்ஸ் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்து, அங்கு அவரது கற்குந்திறன், செயற்திறன், சகபாடிகளுடன் பழகும் பாங்கு, திட்டமிட்டு செயலாற்றும் ஒழுங்கு போன்றவற்றின் உயர்வால் தனது ஆளுமையை வெளிப்படுத்தி சிங்கள மாணவர்களால் யாழ்ப்பாணத்தின் இளவரசர்' என்று கௌரவமாக அழைக்கப்பட்டார். கற்கும் காலத்திலேயே 'யாழ்ப்பாணத்தின் ஆளுமை மிக்க அடையாளமாக ஐயா அவர்கள்திகழ்ந்தமையை கண்டுமகிழ்ச்சி கொள்ள முடிகின்றது.

"செய்யத் தெரிந்தவன் சாதிக்கின்றான்.
செய்யத்தெரியாதவன் போதிக்கின்றான்"

என்று ஒரு முது மொழி உண்டு. இதில் ஐயா முதலாவது நிலையில் உயர்கின்றார். அதிகம் பேசாது தனது தந்தையாரிடமும் சகோதரரிடமும் பெற்ற பட்டறிவுகொண்டும் தனது உயர்வான, தனித்துவமான ஆளுமை வழி நின்றும் அமைதியாக நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பல சாதனைகள் புரிந்தவர் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார். அவர் ஆலய நிர்வாகத்தினை பொறுப்பேற்ற 1964 ஆம் ஆண்டிலிருந்து ஆற்றிய திருப்பணிகளைப் பட்டியலிட்டால், நீண்டு செல்லும். முக்கியமான சிலவற்றை மட்டும் இங்கு கூறுவேன். தீர்த்தக் கேணிக்கும் கோவில் பிரகாரத்துக்கும் இடையில் இருந்த பாதையை மூடி கோவிலை விஸ்தரித்தமை, சண்முகப் பெருமானுக்கு அழகிய சிறிய கோபுரம், முத்துக்குமாரருக்கு விமானத்துடன் கூடிய சந்நிதி, கிழக்குக் கோபுரத்துடன் அமைந்துள்ள சொக்கட்டான் பந்தல் வடிவில் அமைந்த வில்லு மண்டபம், வசந்தமண்டப விஸ்தரிப்பு, சண்முக நவதள ராஜ கோபுரம், குபேர நவதள ராஜ கோபுரம், தீர்த்தக்கேணி புனருத்தாரணம், சண்முகருக்கு பொன்னாலான சுவர்ணசபை விமானம் எனப் பலவற்றைக் கூற முடியும். இவையாவும் அவர் கந்தசுவாமியார் மீது கொண்ட ஆழமான பக்தியின் வடிவங்கள். எதைச் செய்தாலும் முருகன் செய்விக்கின்றான் என்பது அவரது அசைக்கமுடியாத நம்பிக்கை. அதனால் அவர் ஆற்றிய பணிகள் எல்லாவற்றிலும் முருகபக்தியின் நாதம் ஒலித்துக்கொண்டே இருக்கும். மேலும் அவர் ஆற்றுகின்ற ஒவ்வொரு செயலிலும் தமிழர் பாரம்பரியம் இழையோடி நிற்கும். மற்றும் சைவசமயக் கலாசாரம் இணைந்திருக்கும்.

இத்தகு மிகப்பெறுமதி மிக்க கனதியான கருமங்களை ஆற்றி யாழ்ப்பாண சைவ சமயத்தவர் தலை நிமிர்ந்து வாழ வாழ்ந்து காட்டி, உழைத்த பெருமகன் குகஸ்ரீ குமாரதாச மாப்பாண முதலியார்.

ஆனால் அவர் எக்காலத்திலும் அதனைத் தானே செய்தேன் என்று யாருக்கும் வெளிப்படுத்துவதில்லை. எல்லாம் முருகனே செய்கின்றான் என்று அடக்கமாகக் கூறித் தனது வாழ்க்கையை முழுதாக முருகனுடனேயே ஐக்கியப்படுத்தி வாழ்ந்து வந்தார். கோயிலுக்கு வெளியே அவரை எங்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் காண்பது அரிது. எந்த விழா நிகழ்ச்சிக்கோ அல்லது எந்த மாலை மரியாதைக்கோ அவர் அடிமையாகாதவர். தானுண்டு தனது முருகன் பணியுண்டு என்று வாழ்ந்தவர். யாராவது அவர் அந்த விழாவுக்குச் சென்றிருக்கலாம், அந்தச் சங்கத்தில் இருந்திருக்கலாம் என்று நினைப்பார்களேயானால் அது தவறானது. அபத்தமானது. இதை ஏன் இங்கே கூறுகின்றேன் என்றால், நல்லூரான் செம்மணி வளைவு கட்டுமாணப் பணிகள் தொடங்கும் வேளை அவரைக் கொண்டு அவர் கையால் அத்திவாரக்கல் நாட்ட அடியவர் சிலர் விரும்பினர். அவரிடம் சென்று எமது விருப்பத்தைத் தெரிவித்தோம். அவர் அதனைக் கண்டிப்பாக மறுத்துக் கூறியது, நாங்கள் பாருங்கோ உவை ஒன்றுக்கும் வாழ் நாளில் போனது கிடையாது. நாங்கள் முருகனோடு வாழ்கின்றோம். அவர் பணி செய்து அவரோடு வாழ்வதுதான் எங்கள் பழக்கமும் விருப்பமும். – என்று அடக்கமாக, சுருக்கமாகக் கூறி மறுத்து விட்டார். அவ்வாறு தன்னை எங்கும் முதன்மைப்படுத்த விரும்பாத பெருந்தகை அவர். இப்படியான சிந்தனை கொண்ட தூய்மையானவர் வாழ்ந்த பூமியில்,அவர் வாழ்ந்த காலத்தில், நாமும் வாழ்ந்தோம் என்பது எமக்கு கிடைத்த பாக்கியமே.

நல்லூர் மண்ணில் பல சித்தர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். பல அரிய கருத்துக்களை, தத்துவங்களை சமூகத்துக்குத் தந்துள்ளார்கள். அப்படியான சித்தர்களில் ஒருவராக எம்முடன் வாழ்ந்த முருகக் கடவுளாகவே அவர் இருந்திருக்கின்றார். அவரது ஒவ்வொரு செயலிலும் ஆழமான பொருள் பொதிந்திருக்கும். அங்கே முற்போக்குச் சிந்தனைகள் மலிந்து சேர்ந்து செல்லும். ஏழை – பணக்காரர் என்ற எவ்வித பாகுபாடும் அவர் நிர்வாக ஒழுங்கில் கிடையாது. முருகக் கடவுள் முன் அனைவரும் சமம் என்பதே அவரது உயர்வான சமத்துவக் குறிக் கோள். சமூகத்தில்உயர்வான மேல்தட்டுக் குடிகளாக இருந்தாலும் ஏனைய பக்தர்கள் போன்றே ஆலயத்தில் கணிக்கப் பெறுவார்கள். அதற்கு முன்மாதிரியாக தானும் அதனைப் பின்பற்றி தனது குடும்ப உறுப்பினர்களையும் பின்பற்ற வைத்தார். கரையில்லாத வெள்ளை நூல்வேட்டி, சால்வை, மேனியில் திரு நீற்றுக்குறி கையில் ஒரு குடை. அவர் கோயில் வளாகத்தில் நடந்து வந்து அந்தத் தூணில் சாய்ந்து அமர்ந்திருந்து, நான் எசமான் அல்லன், தொண்டடிமை என்று கூறாமல் கூறும் காட்சி, கையெடுத்து வணங்க வைக்கும். கோயில் தர்மகர்த்தாக்கள் என்றால் பட்டுப் பீதாம்பரங்களுடன் தங்கப் பவுண் மாலைகள், கை விரல்களில் மோதிரங்கள் அணிந்து காட்சி தரல் வேண்டும் என்ற மாயையை உடைத் தெறிந்த உயர்ந்த சமூக சீர்திருத்தவாதி எங்கள் எஜமான் ஐயா. அவரது தந்தையார் அவருக்களித்த வைரம் பதித்த மோதிரத்தை, தான் அணியாமல் முருகன் முடியில் சூட்டி அழகு பார்த்த அற்புத சிற்பி. எளிமை விரும்பி. எத்தனையோ வருடங்களுக்கு முன்னர் அறவிடப்பட்ட அர்ச்சனைச் சீட்டின் பெறுமதி ரூபா 1.00 என்பதைப் பக்தர்கள் நலன் கருதி மாற்றம் செய்ய அவர் அனுமதிக்கவேயில்லை. ஒரு அன்பர் அவரிடம் சென்று ஐயா பல கோயில்களில் அர்ச்சனைச் சீட்டின் பெறுமதியை ரூபா 15, ரூபா20 என்று அதிகரித்து விட்டார்கள். நீங்கள் ரூபா 5 என்றாலும் நிர்ணயிக்கலாம்தானே என்று கூறியுள்ளார். அதற்கு ஐயா இல்லைப் பாருங்கோ. நீங்கள் விரும்பினால் ரூபா 5 கொடுத்து 5சீட்டுக்களை வாங்குங்கோ.5 சாமிகளுக்கு அர்ச்சனை செய்யுங்கோ.நான் ஏழை மக்களும் தமது பிரார்த்தனையைச் செய்து திருப்தி காண்பதற்காகவே அப்படி வைத்துள்ளேன் என அமைதியாகக் கூறிய ஏழைபங்காளர். நல்லூர் பக்தர் மனதை வெகு நேர்த்தியாக அறிந்து செயற்பட்டவர் அவர். இந்திய அமைதி காக்கும் படையினருடான யுத்த காலத்தில் நல்லூர் கோயிலின் உட் பிரகாரத்தை முழுமையாக இடம்பெயர்ந்த மக்களுக்காக ஒதுக்கி உதவிய பெருமகன். அவர் தான் ஆற்றிய பணிகளை வெளியில் தம்பட்டம் அடிக்காதமையாக அவை வெளியில் தெரிய வருவதில்லை.

ஒரு கட்டடத்துக்கோ அல்லது வீட்டுக்கோ அத்திவாரந்தான் முக்கியம். அது வெளியில் தெரிவதில்லை. அதனால் அதற்கு முக்கியத்துவம் இல்லை என்று கருத முடியுமா? அது போன்றதுதான் ஐயாவின் செயல்களும் சேவைகளும். நல்லூர் கோயில்தான் அவரது வீடு, உலகம் எல்லாம். அங்கிருந்து எமது சமூகத்தின் உயர்வுக்காகவும் சைவசமயத்தின் எழுச்சிக்காகவும், அமைதியாக அவர் ஆற்றிய பணிகளின் சிறப்பையும் அவரின் பக்தி சிறப்பையும் உலகம் உணர்ந்து கொண்டாடுகின்றது. கந்தப்பெருமான் ஐயாவின் சகோதரரை கார்த்திகை நட்த்திரத்திலும், ஐயாவை தனது நட்த்திரமான விசாக தினத்திலும் தன்னுடன் ஐக்கியமாக்கி முழுமையடைவித்துள்ளார்.

சைவசமயத்தவரின் விசேட விரததினமான சதுர்த்தி, நவராத்திரி, புரட்டாதிச் சனி ஆகியனவும் அன்று (09.10.2021) சேர்ந்து கொள்வதும் ஐயாவின் இறை பக்தியின் தூய்மையை உறுதிப்படுத்தும் நிதர்சன செய்திகளாகும். மேலும் அன்றைய தினம் இந்தியாவிலுள்ள சிதம்பரம் சிவன்ஆலயத்தில் மோட்சதீப மேற்றி அவர் ஆத்மா சாந்திக்கு உறுதி செய்தமை புனிதம் நிறைந்த செயற்பாடாகின்றது. முருகா சரணம்.



# விவாகரத்து எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது?

பஸ்றி ஸீ.ஹனியா
LL.B (Jaffna)

திருமணம் எனும் பந்தத்தினுள் உட்புகும் அனைவருமே வாழ்நாள் முழுவதும் ஒருவருக்கொருவர் ஆதரவாகவும், துணையாகவும் இருப்போம் எனும் உறுதிமொழியுடனேயே தமது பயணத்தை ஆரம்பிக்கின்றனர். ஆனால், பல்வேறு சமூக, பொருளாதாரக் காரணிகளின் தாக்கத்தால் தமது உறுதிமொழியைப் புறந்தள்ளவும் அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

இதன் விளைவாக திருமண முறிவு அரங்கேறுகின்றது. திருமண முறிவு அடைந்துவிட்டால் திருமணமாகாத நிலையை அடைந்து திருமணமாகாதவர் ஒருவருக்கு இருக்கும் உரிமைகள் அனைத்தும் மறுபடியும் வழங்கப்படும்.

அவ்வாறு திருமண முறிவு ஒன்று சட்டத்தால் தீர்வாக வழங்கப்பட வேண்டும் என்றால் அதற்கு ஆள்சார் சட்டங்களில் வேறு நடைமுறைகளும், பொதுச் சட்டத்தில் வேறு நடைமுறைகளும் காணப்படுகின்றன. ஆகவே, இன்றைய புரிதல் பொதுச் சட்டத்தின் விவாகரத்து நடைமுறை பற்றியதாகும்.

இன்று நாட்டின் நீதிக்கட்டமைப்பு முறைமையில் முதனிலை குடியியல் நியாயாதிக்கத்தைக் கொண்ட மாவட்ட நீதிமன்றங்கள் திருமணப் பிணக்குகளால் நிரம்பி வழிகின்றன.

திருமணம் என்பது திருமண ஒப்பந்தத்துக்குத் தகுதி எனக் காணும் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் சமூகக் கோட்பாட்டின் உறுதிமொழியின் பிரகாரம் இணைந்து ஒரு குடும்பத்தை சட்டரீதியில் உருவாக்குவது எனலாம்.

இருந்தபோதிலும் ஓரினத் திருமணங்களில் ஒரே இனத்தைச் சேர்ந்த இருவர் திருமணம் செய்து கொள்கின்றனர். ஆனாலும், இலங்கையில் இற்றை வரைக்கும் இதற்கு அனுமதி இல்லை என்ற காரணத்தால் நாம் இந்த வரைவிலக்கணத்தைக் கூறுவோம். எதிர்காலத்தில் ஓரினத் திருமணங்களுக்கு அங்கீகாரம் கிடைத்து விட்டால் அப்போது வரைவிலக்கணங்களை மாற்றுவது பற்றி யோசிக்கலாம்.



விவாக - விவாகரத்துக் கட்டளைச் சட்டம் விவாகரத்துக்கு மூன்று வழிகளை (திருமணக் குற்றங்களை ) அறிமுகம் செய்கின்றது. இவற்றுள் ஏதேனும் ஒன்றின் வழியாகவே அதாவது குறிப்பிட்ட திருமணக் குற்றத்தை நிரூபிப்பதன் ஊடாகவே பாதிக்கப்பட்ட தரப்பு தனக்கான நிவாரணமாக விவாகரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் ஒரு திருமணக்குற்றம் **(Matrimonial fault)** ஒரு தரப்பிடம் இருந்தால் மட்டுமே மற்றைய தரப்பு நிவாரணம் பெற முடியும் என்பதாகும்.

முதற் குற்றம் சோரம் போதலாகும் **(Adultery)**. இது எம்மவர் சமூகத்தினரிடையே கணக்கிலெடுக்கக்கூடிய அளவில் வேரூன்றிவிட்ட ஒன்று. அதாவது திருமணமான ஆணோ, பெண்ணோ திருமண ஒப்பந்தத்துக்குப் புறம்பாக வெளிநபர் ஒருவருடன் பாலியல் ரீதியான உடல் தொடர்பைக் கொண்டிருப்பதாகும். இது இருமண தாரத்திலிருந்து **(Bigamy)** வேறுபட்டது. இருதார மணம் இலங்கை தண்டனைச்சட்டக் கோவையின் மூலம் 7 வருடங்கள் வரை நீடிக்கப்படக்கூடிய சிறைத் தண்டனைக்கு உட்படுத்தக்கூடிய குற்றமாகும். ஆனால், சோரம் போதலானது திருமணக் குற்றம் மட்டுமே. அதாவது விவாகரத்துக்கான ஒரு வழியே அன்றி தண்டிக்கப்படக் கூடிய குற்றமல்ல.

இதனை எளிய முறையில் கூறுவோமானால், திருமணத்துக்குப் பின் சட்டரீதியற்ற பாலியல் உறவை வைத்திருந்தால் அது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படாது. விவாகரத்துக்குரிய காரணிகளில் ஒன்றாக மாத்திரமே கருதப்படும். ஆனால், சட்டரீதியாக இன்னொருவரைத் திருமணம் செய்து துணைவராக்கிக் கொண்டால் அது சட்டரீதியான குற்றமாகக் கொள்ளப்படுகின்றது.

இந்தச் செயற்பாடு திருமணத்துக்கு முன்னரோ அல்லது ஒரு தடவை நடந்த உடல் தொடர்பு என்ற ரீதியிலோ திருமணக் குற்றமாகக் கருதப்படமாட்டாது. மாறாக திருமணத்தின் பின் தொடர்ச்சியாக வேறோருவருடன் உடல் சார்ந்த உறவைப் பேணி வருவதே இந்தக் குற்றமாகும். ஆனால், தாய் அத்தகைய உறவைப் பேணுகின்றபோதிலும் தந்தை நிரூபிக்கப்பட்ட பிள்ளையின் பராமரிப்பு கடமைப்பாட்டில் இருந்து அவர் தப்பிக்க முடியாது. ஆனால், நடைமுறைச் சிக்கல் என்னவெனில் சோரம் போதலை நிரூபிப்பது நிகழ்தகவளவில் கடினமானதொன்று. உடல் உறவு **(Sexual Intercourse)** இன்று நிகழ்தகவளவில் **(Balance of Probabilities)** நிரூபிக்க வேண்டிய ஒன்றாகும். அதாவது குற்றஞ்சாட்டும் தரப்பு குற்றஞ்சாட்டப்பட்டவர் இந்தத் தவறை செய்தார் என நிரூபிக்கும் **(Burden of Proof)** பொறுப்பை சட்டத்தின்பால் ஏற்கக் கடமைப்பட்டவர். அவ்வாறு நிரூபிக்கத் தவறும் பட்சத்தில் விவாகரத்து விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படுவது யதார்த்த சாதாரணமாகும்.

இரண்டாவது குற்றமாக வன்ம உறவறுப்பைக் **(Malicious Desertion)** காட்டலாம். இது இன்று வரை நீதித்துறையின் தொடர் பொருள்கோடல் பணிக்கு வாய்ப்பளித்து வரும் ஒரு கோட்பாடாகும். அதாவது குறிப்பிட்ட ஒரு வாழ்க்கைத் துணை மற்றைய துணையுடன் வாழ்வது பொறுத்துக்கொள்ள முடியாத **(Intolerable)** துன்பத்தையும் வாழ்வுக்கே ஆபத்தானதாகவும் **(endanger to Life)** அமையும் எனில் அதை நாம் வன்ம உறவறுத்தலுக்கு உதாரணமாகக் காட்டலாம்.

எவ்வாறெனிலும் அத்துன்பத்தை விளைவிக்கும் நபர் திருமண பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் **(Intention)** அதனைச் செய்திருக்க வேண்டும். இன்று பெரும்பாலான விவாகரத்து வழக்குகள் இப்பகுதியினுள்ளேயே தாக்கல் செய்யப்படுகின்றன. ஏனெனில் அனைத்து திருமணக் குற்றங்களும் திருமணத்தை முடிவுறுத்தும் நோக்கத்துடன் செய்யப்படின் அது இலகுவாக வன்ம உறவறுப்பு என்ற விடயத்தினுள் அடங்கிவிடும். ஏனெனில் சோரம் போதல் எனும் ஓர் திருமணக் குற்றத்தை புரியும் ஓர் ஆண் தனது மனைவியுடனான திருமண பந்தத்தை முடிவுறுத்த விரும்புவதாகக் காட்ட முடியும்.

இவ்வன்ம உறவறுப்பு இரண்டு பகுதிகளாகக் காட்சிப்படுத்தப்பட முடியும்.

முதலாவதாக சாதாரண உறவறுப்பு **(Simple Malicious desertion)**. இதில் துன்பத்தை விளைவிக்கும் துணை மற்றைய துணையை திருமண இல்லத்தை விட்டு வெளியேற்றும் நடவடிக்கையாகும். துன்பம் தாங்காது அப்பாவி துணை வீட்டை விட்டு வெளியேறுவதையே இது காட்டுகின்றது.

அடுத்த வகை, அமைய வன்ம உறவறுப்பாகும் **(Constructive malicious desertion)**. இதில் பாதிக்கப்பட்ட தரப்பு திருமண இல்லத்தில் தங்கியிருக்கக் குற்றமுள்ள தரப்பு பந்தத்தை முறிக்கும் எண்ணத்துடன் வீட்டை விட்டு வெளியேறி செல்லலைக் குறிக்கும்.

மேலும் வெறும் உடல் ரீதியான பிரிவு மட்டும் ஒரு போதும் வன்ம உறவறுப்பாகச் சட்டத்தின் முன் காட்டப்படமாட்டாது. தொழில் அல்லது பொருளாதாரக் காரணிகளின் தாக்கத்தால் இன்று தம்பதியினர் பிரிந்து வாழ்வது தவிர்க்க இயலாதது. எனவே, குற்றமுள்ள துணையின் திருமண பந்தத்தை முடிவுறுத்தும் எண்ணம் உறுதியாக நீதிமன்றின் முன்பு நிரூபிக்கப்படும் வரை விவாகரத்துப் பெறுவது சாத்தியமானதன்று.

மூன்றாவதாக நாம் சுட்டுவது, தாம்பத்திய உறவில் ஈடுபடக்கூடிய தகைமை இழப்பாகும். இதை ஆங்கிலத்தில் **Impotency** எனக் கூறுவர். இது ஆண்களின் தந்தைமையையோ அல்லது பெண்களின் மகப்பேற்று தகைமையையோ குறிப்பதில்லை. மாறாக ஓர் ஆண் பெண்ணுடன் பாலுறவை ஏற்படுத்தக்கூடிய விடயம் என நம்பப்பட்டாலும் இன்றைய சட்ட கருதுகோள் பெண்களும் பாலியல் ரீதியில் உறவைப் பேண முடியாதவாறு உடல், உளப் பிணிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை மருத்துவ வளர்ச்சியின் உதவியோடு நிரூபித்துள்ளது.




எனவே, இன்று இருபாலாரும் இந்தத் தகுதியீனத்துக்கு ஆளாகின்றார்கள். இதற்கு ஒரு முன்நிபந்தனையாக நிரூபிக்க வேண்டியது இந்தக் குறிப்பிட்ட தகுதியீனம் திருமணத்துக்கு முன்னிருந்தே பாதித்திருக்க வேண்டும். மேலும், திருமணம் நடக்கும் வேளையிலும் அவர் அந்தத் தகுதியீனத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

திருமணத்துக்குப் பிறகு ஏற்படும் பாதிப்புக்களால் உதாரணமாக திருமணத்தின் பின்னர் ஏற்படும் விபத்து மற்றும் மன உளைச்சல் என்பவற்றால் ஏற்பட்ட தகுதியீனத்தைக் காட்டி விவாகரத்துப் பெற முடியாது.

மேலும், திருமணமாகி குறிப்பிட்ட காலங்களில்தான் விவாகரத்துப் பெற முடியும் என்ற வரையறைகள் எதுவும் கிடையாது என்பதனை மக்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

இறுதியாக இலங்கையில் திருமணத் தீர்வுகளாக விவாகரத்துப் பெற நிவாரணம் பெற விரும்பும் பகுதி மற்றைய தரப்பின் திருமணக் குற்றத்தை நீதிமன்றத்தின் முன் நிரூபிப்பது கட்டாயமானதாகும்.

எது எதுவாக இருந்தபோதிலும் இந்தக் கட்டாயக் குறையைக் கூறலானதே இன்று விவாகரத்து நடைமுறையானது பல வருடங்களுக்கு இழுத்துக் கொண்டும் விரைவாக விவாகரத்துப் பெற முடியாத நிலைக்கும் காரணமாகும். இதற்கு இன்று மாவட்ட நீதிமன்றங்களின் திருமணத் தீர்வு வழக்குகளின் பழுச் சுமையே ஆதாரமாகும்.



# பொது அறிவு வாராந்தம் ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.

பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இப்பகுதியில் பத்து பொதுஅறிவு வினாக்கள் இடம்பெறும். கேள்விக்குரிய உங்கள் பதில்கள் அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை பிரசுமாகும்.

சனிக்கிழமை காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு உங்கள் விடைகளை அனுப்பி வையுங்கள்.

தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.

உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகிய வற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

**1. உலகக் கிண்ண தகுதிச் சுற்றில் ஏ பிரிவில் முதலிடம் பெற்ற அணி எது?**

**2. சர்வதேச ரி- 20 போட்டியில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் யார்?**

**3. 360, 296, 247, 211, 186, ... என்ற எண் தொடரின் அடுத்து வரும் இரு எண்களும் எவை?**

**4. குழந்தைக் கவிஞர் என அழைக்கப்படுபவர் யார்?**

**5. இலங்கையின் மிகப் பழைமையான நூல் எது?**

**6. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த போது யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னன் யார்?**

**7. மூன்று தீக்குச்சிகளை வைத்து உருவாக்கக் கூடிய ஒரே ஒரு எண் யாது?**

**8. வட்டத்துக்கு எத்தனை சமச்சீர் அச்சுக்கள் உண்டு?**

**9. அதிகமான நாடுகளைக் கொண்ட கண்டம் எது?**

**10. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமை யகம் அமைந்திருக்கும் இடம் எது?**

பெயர் :- ..........................................

முகவரி :- ..........................................

தொலைபேசி இலக்கம்:- ....................

அடையாள அட்டை:- ..........................

மின்னஞ்சல் முகவரி:- ........................

## 17.10.2021ஆம் திகதி பிரசுரமான பொது அறிவு வினாக்களுக்கான விடைகள்

1. சென்னை சுப்பர் கிங்ஸ்
2. காலை 8 மணி
3. 40, 28
4. ஐப்பசி – 17
5. மார்க்கோணி
6. இரண்டு நாடுகள்’
7. 1960
8. ஸ்புட்னிக் வி
9. மும்பை இந்தியன்ஸ்
10. 65,610 சதுரக் கிலோ மீற்றர்

## சரியான பதிலளித்தவர்கள் விவரம் -

| | | |
|---|---|---|
| 1. எஸ். சதுர்ஜினி | அல்வாய் | 10 |
| 2. வி.வினோத்குமார் | மட்டக்களப்பு | 10 |
| 3. கே. அனுஷன் | ஏழாலை | 10 |
| 4. கே. டிருஷி | உடப்பு | 09 |
| 5. எஸ். கருணாநிதி | யாழ்ப்பாணம் | 09 |
| 6. கே. ஸ்ரீதரன் | கொழும்பு | 09 |
| 7. ஜே. வினோஜன் | குடத்தனை | 08 |

# ஆட்சியாளர்களிடமிருந்தும் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது அதிபர் - ஆசிரியர்களே போராட்டத்தை காட்டிக்கொடுக்காதீர்கள்

## உலப்பனே சுமங்கல தேரர் தெரிவிப்பு



சம்பள முரண்பாட்டை தீர்க்கக் கோரி நூறு நாள்களுக்கும் அதிகமாக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களைக் காட்டிக் கொடுத்து திங்களன்று அதிபர், ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு சமுகமளிப்பார்களாயின் , இனி எந்தவோர் ஆட்சியாளர்களிடமிருந்தும் இதற்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது என்று அதிபர் – ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு எதிரான தேசிய ஒன்றிணைப்பின் ஒருங்கிணைப்பாளர் உலப்பனே சுமங்கல தேரர் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது கல்வி உரிமை பறிக்கப்பட்டு எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளமையே குடிவரவு – குடியகல்வு திணைக்களத்துக்கு முன்னாள் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக காணப்படும் நீண்ட வரிசைக்கான காரணம் ஆகும்.

எனவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் வரை பாடசாலைகளுக்கு சமுகமளிக்கப் போவதில்லை என்றும் உலப்பனே சுமங்கல மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

21 ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் அதிபர் – ஆசிரியர் தொழிற்சங்கங்களின் போராட்டம் பாரிய வெற்றியடைந்துள்ளது.

அதிபர், ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்காமையின் காரணமாக போராட்டங்களை தோல்வியடையச் செய்வதற்கு அரசாங்கம் முன்னெடுத்த முயற்சி முற்றாகத் தோல்வியடைந்துள்ளது.

102 நாள்களுக்கும் அதிகமாக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அதிபர், ஆசிரியர்களை மீண்டும் வீதிக்கு இறக்குவதற்காகவா அரசாங்கம் இவ்வாறு செயற்படுகிறது?

அரசாங்கத்தின் இதுபோன்ற செயற்பாடுகள் மீண்டும் மீண்டும் அதிபர், ஆசிரியர்களை உதாசீனப்படுத்துவதாகும்.

இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களைக் காட்டிக் கொடுத்து திங்களன்று அதிபர், ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகமளித்தால் மீண்டுமொருமுறை எந்தவொரு ஆட்சியாளர்களிடமிருந்தும் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வைப் பெற்றுக் கொள்ளவே முடியாது.

பாடசாலைக்கு சமுகமளிக்காத அதிபர், ஆசிரியர்களின் சம்பளத்தை இடைநிறுத்தல் அல்லது அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் என்பன சட்ட ரீதியானதல்ல.

அவ்வாறான தீர்மானங்களை எடுப்பதற்கு அரசாங்கத்துக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. எனவே எவ்வித தடையும் இன்றி எமது போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். அவற்றுக்கு முன்னிலையில் நின்று தலைமை வகிப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

தமது தோல்வியை மறைப்பதற்காக வியாழனன்று சகல பாடசாலைகளும் திறக்கப்பட்டிருந்தன எனவும், ஆசிரியர்களும் மாணவர்களும் பாடசாலைக்கு சமுகமளித்திருந்தனர் எனவும் கல்வி அமைச்சரும் அமைச்சின் செயலாளரும் கூறுகின்றனர். ஆனால் எந்தவொரு பாடசாலையிலும் நுழைவாயில் கூட திறக்கப்பட்டிருக்கவில்லை என்பதே உண்மை நிலைவரமாகும்.

கல்வி அறிவற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களுமே எமது போராட்டத்தை தவறாக விமர்சித்துக் கொண்டிருக்கின்றனர்.

கற்ற அறிவுடைய அமைச்சர்களுக்கு எமது கோரிக்கைகள் நியாயமானவை என்பது தெரியும். எனவே 25 ஆம் திகதி திங்கட்கிழமையும் நாம் பாடசாலைக்கு சமுகமளிக்கப் போவதில்லை. அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் மாத்திரமே அன்றைய தினம் பாடசாலைகளுக்குச் செல்லும்.

இந்தப் போராட்டத்தின் ஒரு பாகமே குடிவரவு – குடியகல்வு திணைக்களத்துக்கு முன்னாள் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காகக் காணப்படும் நீண்ட வரிசை ஆகும்.

உலகம் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது மாணவர்களின் கல்வி உரிமை இல்லாமலாக்கப்பட்டுள்ளமையால் இலங்கை பின்னோக்கி சென்று கொண்டிருக்கிறது. இதனால் இலங்கையின் எதிர்காலம் தொடர்பில் ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையே இந்த வரிசைக்குக் காரணமாகும். – என்றார்.

# சுகாதார வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்காதமை சாதாரணமாகக் கருதப்பட வேண்டிய ஒன்றல்ல!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

கொரோனா வைரஸின் மீதான மக்களின் ஆர்வம் படிப்படியாக குறைந்து வருவதாகவும் தற்போது, சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிப்பதில் அவர்கள் கவலைப்படுவதில்லை என்றும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அந்தச் சங்கத்தின் பொதுக்குழு உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலபேஜ், சுகாதார வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்காதது சாதாரணமாக கருதப்பட வேண்டிய ஒன்றல்ல என்று கூறினார்.

இந்த நாள்களில் தாம் வீதிகளில் பார்ப்பது எதிர்காலத்தில் மிகவும் துரதிஷ்டவசமான சகுனமாக மாறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் பெரும்பாலான மக்கள் தங்கள் முகமூடிகளை சரியாக அணிய மறந்துவிட்டனர் என்றும் பெரும்பாலான முகமூடிகள் வாய் மற்றும் மூக்கிற்கு பதிலாக கழுத்து அல்லது கன்னத்தை மறைக்கின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

இப்போதெல்லாம், மக்கள் சமூக தூரத்தை பராமரிக்க மறந்துவிட்டனர் என்றும் இந்த நாள்களில் இது தொடர்பில் கடுமையான விமர்சனங்கள் உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம், சுகாதார அமைச்சகம் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் சமூகத்தை திருத்தும் பொறுப்பை ஏற்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாம் பொறுப்புடன் செயற்பட்டால், பயங்கரமான வைரஸை அழிக்க முடியும் என்றும் மேலும் மற்றொரு அலை வருவதை நம்மால் தடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு புறநகரில் அமைதியின்மை!

கொழும்பு புறநகர் பகுதியான கடவத்தை, றாகம வீதியில் உள்ள குப்பியாவத்தை பகுதிக்கு ஒருவரை கைது செய்ய பொலிஸார் சென்றபோது அமைதியின்மை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அப்பகுதியில் குடும்பத் தகராறு தொடர்பாக ஒருவரைக் கைது செய்ய கடவத்தை பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது அமைதியின்மை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்து, நிலைமையை கட்டுப்படுத்த பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழக மீனவரின் சடலம் நேற்று ஒப்படைப்பு; கோட்டைப்பட்டினத்தில் உடனே நல்லடக்கம்!





**(ந.லோகதயாளன்)**

யாழ். காரைநகர் கடற்பரப்பில் கடந்த 18ஆம் திகதி உயிரிழந்த தமிழக மீனவர் ராஜ்கீரனின் சடலம் நேற்று சர்வதேசக் கடலில் வைத்து இந்திய கடலோரக் காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

காரைநகர் கோவளம் பகுதிக்குள் கடந்த 18 ஆம் திகதி ஊடுருவிய தமிழக மீனவரின் படகு இலங்கை கடற்படையினரின் படகுடன் மோதி கடலில் மூழ்கியது.

இதன்போது இரு இந்திய மீனவர்கள் மீட்கப்பட்டபோதும் ஒருவர் காணாமல் போயிருந்தார். இவ்வாறு காணாமல் போன இந்திய மீனவரான ராஜ்கீரன் கடந்த 20 ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த மீனவரின் சடலம், நேற்று அதிகாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருந்து யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தால் பொறுப்பெடுத்து கொண்டு செல்லப்பட்டது.

அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட சடலம் காலை 7 மணியளவில் இலங்கை கடற்படையினரின் கப்பலில் ஏற்றப்பட்டு 7.30 மணியளவில் இலங்கை கடற்படையின் கப்பல் சர்வதேச எல்லையை நோக்கிப் புறப்பட்டது.

ராஜ்கீரனின் சடலத்தை எடுத்துச்சென்ற கப்பல், 10 மணியளவில் சர்வதேச கடல் எல்லையில் வைத்து இந்தியக் கடற்படையினரின் கப்பலில் சடலத்தைக் கையளித்தது.

சடலத்தைப் பொறுப்பேற்ற இந்திய அதிகாரிகளின் கப்பல் சர்வதேச எல்லையில் இருந்து முற்பகல் 10.30 மணியளவில் கோட்டைபட்டினம் நோக்கிப் பயணித்து பிற்பகல் 1.30 மணியளவில் கரையை அண்மித்தது. உள்ளூர் இழுவைப் படகுக்கு சடலம் மாற்றப்பட்டு கோட்டைப் பட்டினம் கிராமத்தைச் சென்றடைந்தது.

அங்கே உடலுக்கு அஞ்சலிகள் செலுத்தப்பட்டு நேரடியாக பிற்பகல் 2.30மணியளவில் அடக்கம் செய்யப்பட்டது.

## சுவர் இடிந்து விழுந்ததில் சிறுவன் சாவு

வீடொன்றின் மதில் சுவர் இடிந்து விழுந்ததில் சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் புத்தளம், பள்ளம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுபொத்த பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 12 வயது சிறுவனே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுவன் சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள் ளார்.

பிரேத பரிசோதனைக்காக சிலாபம் வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பள்ளம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வெலிக்கடைச் சிறையில் கைதிகள் பெரும் கலவரம்

### சொத்துக்களுக்குச் சேதம்; உயிராபத்து இல்லை

**கொழும்பு, வெலிக்கடைச் சிறைச்சாலையில் சுமார் 50 கைதிகள் நேற்று பகல் கலவரத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவியது. எனினும், குறித்த கலவரம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது எனச் சிறைச்சாலைகள் திணைக்களம் நேற்று மாலை தெரிவித்துள்ளது.**




மரணதண்டனை மற்றும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு கலவரத்தில் ஈடுபட்டனர் என்று சிறைச்சாலைத் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்தார்.

சுமார் ஒரு மாதத்துக்கு முன்னதாக சிறைச்சாலையின் கூரை மீதேறி சில கைதிகள் போராட்டத்தை ஆரம்பித்திருந்த நிலையில் நேற்று அது கலவரமாக மாறியது. நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக மேலதிகமாகச் சிறைக்காவலர்கள் அழைக்கப்பட்டனர்.

கைதிகள் சிறைச்சாலைக்குள் உள்ள பொருள்களுக்குச் சேதங்களை ஏற்படுத்தியுள்ள நிலையில், சேதமடைந்த பொருள்களின் மதிப்பீடு இதுவரையில் கணக்கிடப்படவில்லை எனவும் சிறைச்சாலைகள் திணைக்களப் பேச்சாளர் மேலும் கூறினார்.

## வெள்ளைப்பூண்டு மோசடி; மேலும் ஒருவர் கைது

சதொச நிறுவனத்தில் இடம்பெற்றது எனக் கூறப்படும் வெள்ளைப் பூண்டு மோசடி தொடர்பில் மற்றுமொரு சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பம்பலப்பிட்டியைச் சேர்ந்த 56 வயதான வர்த்தகர் ஒருவரின் புதல்வரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சதொச நிறுவனத்துக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்ட சுமார் 150 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதி கொண்ட சுமார் 56 ஆயிரம் கிலோகிராம் வரையிலான இருவெள்ளைப்பூண்டு கொள்கலன்களை உயர் அதிகாரிகளின் எந்த அனுமதியும் இன்றி மூன்றாவது தரப்பொன்றுக்கு விற்பனை செய்த விவ காரத்தில் ஏற்கனவே ஐவர் கைதுசெய்யப் பட்ட நிலையில் ஆறாவது நபர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நபரை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட ஐவரும் தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணை, 50 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## இளைஞர்களைத் தாக்கிய பொலிஸ் அதிகாரிக்கு ஆப்பு

### பணியில் இருந்து இடைநிறுத்தம்

மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூரில் இளைஞர்கள் இருவரைத் தாக்கிய பொலிஸ் அதிகாரி பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அறிவித்துள்ளார்.

வீதியில் பொலிஸ் அதிகாரி ஒருவர், இளைஞர்கள் இருவரைத் தாக்கும் வீடியோவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் டுவிட்டரில் பதிவிட்டு, பொறுப்பான அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து, விடயத்தை ஆராய்ந்து அதிகாரியைப் பணியில் இருந்து இடைநிறுத்த அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொலிஸாரின் கொடுமைகள் தொடர்கின்றன என சாணக்கியன் எம்.பி. சுட்டிக்காட்டியுள்ளார்.

சாணக்கியன் எம்.பிக்குப் பதிலளித்துள்ள அமைச்சர் சரத் வீரசேகர, இளைஞர்களைத் தாக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு இல்லை. இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித் துள்ளார்.

வீதி விபத்தொன்றின் விடயங்களை ஆராய்ந்துகொண்டிருந்த பொலிஸ் அதிகாரியின் பணிக்கு இடையூறு செய்த காரணத்தால் குறித்த இளைஞர்கள் தாக்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## எல்லை நிர்ணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரிவின் வெடிவைத்த கல்லு கிராம அலுவலர் பிரிவுடன் இணைப்பதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அண்மையில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு வவுனியா மாவட்ட தற்போதைய அரச அதிபரால் சமன் பந்துலசேனவின் கோரிக்கை முன்மொழிவாக அனுப்பிவைக்கப்பட்டது.

வடக்கு – வடமத்திய மாகாணங்களின் எல்லைகளை மாற்றி அமைப்பதன் ஊடாக வடக்கு மாகாணத்தின் இனப்பரம்பல் கோலத்தை மாற்றி அமைத்து அதனால் அப்பிரதேசத்தில் தமிழ் மக்களின் அரசியல் ஸ்திரத்தன்மையைக் கேள்விக் குறியாக்குகின்ற செயற்பாடாக இது திட்டமிடப்பட்டுள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு முரணாகவும், இன நல்லிணக்கத்தைப் பாதிக்கின்ற செயலாகவும் இது அமையும் என்பதால் இந்த நடவடிக்கையை உடன் நிறுத்தும்படி வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் அரசின் இவ்வாறான செயல்முறைகளை வன்மையாகக் கண்டிப்பதுடன் செயற்பாட்டை உடன் நிறுத்துமாறு தங்களை நாடி நிற்கின்றோம்.

இவ்வாறான மறைமுக நிகழ்ச்சித் திட்டங்களூடாக முன்னெடுக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்களே இந்நாட்டில் 30 வருடங்களுக்கு மேல் நடந்த போருக்கு வித்திட்டது. இன நல்லுறவைப் பாதிக்கும் விடயமாக அமைந்திருப்பதையும் நினைவுபடுத்துகின்றோம் – என்றுள்ளது.

## வல்வெட்டித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீரசிங்கம் மற்றும் கஜிபன் தர்மராஜ் ஆகியோர் நேற்றுமுன்தினம் இந்தியக் கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு இந்தியக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்த இருவரையும் சென்னை எழும்பூர் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்செய்தபோதே அவர்களை எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து இருவரும் புழல் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

## மேலும் 19 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 13 ஆயிரத்து 593 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் நேற்று 553 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 35 ஆயிரத்து 528 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 350 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 3 ஆயிரத்து 90 ஆக உயர்வடைந்துள்ளது.

## ‘13’ஐ ஒன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றுமுழுதாக, அது ஆரம்ப கட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட நிலையிலேயே நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய அரசை ஒருமித்த நிலைப்பாட்டில் கோருவதற்காக தமிழ்த் தேசிய பரப்பில் செயலாற்றும் அனைத்து கட்சிகளின் கலந்துரையாடலை எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு நேற்றைய (சனியன்று) கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் கட்சித் தலைவர்கள் கலந்துகொண்ட இணையவழியான கூட்டத்தில் செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், என்.சிறிகாந்தா மற்றும் பேராசிரியர் சிவநாதன் (சி.வி.விக்னேஸ்வரன் சார்பில்) ஆகியோர் கலந்து கொண்டனர் – என்றார்.

இதேவேளை, அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியும் பங்கேற்கவுள்ளது. இதனை மனோ கணேசன் எம்.பி. நேற்று உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்தக் கூட்டத்துக்குக் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் அழைப்பு விடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

### சீரற்ற காலநிலையால்

# வவுனியாவில் வீடுகள் சேதம்

**(வவுனியா நிருபர்)**

வவுனியாவில் நேற்று பெய்த கடும் மழை மற்றும் காற்றால் 10 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளமையுடன், பயன்தரும் மரங்களும் அழிவடைந்துள்ளன.

வவுனியாவில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்துவருகின்றது.

இந்நிலையில் நேற்று பெய்த கடும் மழை மற்றும் காற்று காரணமாக வவுனியா இராசேந்திரங்குளம், சூடுவெந்த புலவு ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பத்துக்கும் மேற்பட்ட வீடு கள் பகுதியளவில் சேதமடைந்துள்ளமையுடன் சில வீடுகளின் கூரைத் தகடுகள் காற்றினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இதேவேளை, அரபாத் நகர் பகுதியில் வீசிய கடும் காற்றால் செய்கைபண்ணப்பட்டிருந்த வாழை மற்றும் பப்பாசி போன்ற பயிர்கள் முற்றாக அழிவடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகள் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் தகவல்களைச் சேகரித்துள்ளனர்.

# எலிக் காய்ச்சலால் இருவர் உயிரிழப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் தணிந்துவரும் நிலையில் மறுபுறத்தில் டெங்கு நோயும், எலிக்காய்ச்சலும் அச்சுறுத்தத் தொடங்கியுள்ளன.

கடந்த ஜூன் மாதம் முதல் இம்மாதம் (ஒக்ரோபர்) 20ஆம் திகதி வரையான நான்கு மாதங்களுக்குள் இலங்கையில் எலிக்காய்ச்சல் காரணமாக 250 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த 250 நோயாளர்களும் கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட மற்றும் மாவனெல்ல பிரதேசங் களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்த இருவரும் உள்ளடங்குகின்றனர். அவர்களில் ஒருவர் சாவகச்சேரியிலும், மற்றொருவர் வவுனியாவிலும் உயிரிழந்துள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன் அடிப்படையில், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 15 பேரும், வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் ஒருவரும், யாழ்.போதனா வைத்தியசாலையில் 5 பேரும், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 2 பேரும், மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் 3 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# தீபாவளிப் பண்டிகையையொட்டி ஞாயிறு கடைகளைத் திறக்கவும்

### யாழ். வணிகர் கழகம் வேண்டுகோள்



**(இ.கலையமுதன்)**

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்ப்பாணத்தில் கடைகளை திறந்து வியாபார நடவ டிக்கைகளை முன்னெடுக்குமாறு யாழ். வணிகர் சங்கத் தலைவர் ஆர். ஜெயசேகரன் வர்த்தகர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கொரோனா சூழ்நிலை காரணமாக நீண்ட காலமாக முடக்கப்பட்டிருந்த யாழ். நகரம் படிப்படியாக தற்போது வழமைக்குத் திரும்பி வருகின்றது.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமைகளில் கடைகளைத் திறந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு வர்த்தகர்களை கேட்டுக் கொள்கின்றோம்.

இதன் மூலம் பொதுமக்களும் நன்மை அடைவார்கள் என எதிர்பார்க்கின்றோம். அத்தோடு குறித்த வர்த்தக நிலையங்களைத் திறப்பதற்காக ஏற்கனவே யாழ்ப்பாண மாநகர சபை மற்றும் ஏனைய துறை சார்ந்தவர்களோடு கலந்துரையாடப்பட்டுள்ளது.

வர்த்தகர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தங்கள் கடைகளைத் திறந்து வழமைபோல் வியாபார நடவடிக்கையில் ஈடுபட முடியும் – என்றார்.

# தொற்று அதிகரித்தால் மீண்டும் பயணத்தடை!

### சுகாதாரப் பணிப்பாளர் அறிவிப்பு

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்கு மானால் மீண்டும் பயணத் தடைகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

- இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

தற்போது அமுலில் உள்ள மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை, எதிர்வரும் 31ஆம் திகதி அதிகாலை தளர்த்தப்படவுள்ளது என அரசு நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தது.

இந்நிலையில், பயணத்தடை தளர்த்தப்பட்டாலும் பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களைக் கடைப்பிடித்து செயற்படுகிறார்களா என்பது கண்காணிக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறினார்.

எவ்வாறாயினும், எதிர்காலத்தில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்குமானால் மீண்டும் பயணத்தடைகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.



எனவே, மீண்டும் இவ்வாறானதொரு நிலைக்கு நாட்டை இழுத்துச் செல்ல வேண்டாம் என்றும், சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாகச் செயற்பட வேண்டும் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டார்.

### சார்ள்ஸ் எம்.பியின் ஏற்பாட்டில்

# மன்னாரில் நாளை விவசாயிகள் மாபெரும் அறவழிப் போராட்டம்!

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 174 கமக்கார அமைப்புகளை உள்ளடக்கிய மன்னார் மாவட்ட விவசாய சம்மேளனத்தினர் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மாபெரும் அறவழிப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்தப் போராட்டமானது மன்னார் உயிலங்குளம் கமநல சேவைத்திணைக்களத்தின் முன்பாக இடம்பெறவுள்ளது.

தற்போது கால போக நெற்செய்கை ஆரம்பித்துள்ளது. அரசின் திட்டமிடாத நடவடிக்கை காரணமாக இந்த நாட்டில் பாரிய உரத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த அரசு உடனடியாக விவசாயிகளுக்கு உரத்தை வழங்குமாறு கோரி நடைபெறவுள்ள இந்த போராட்டத்துக்கு அனைத்து விவசாயிகளையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற இ. சார்ள்ஸ் நிர்மலநாதன் அறைகூவல் விடுத்துள்ளார்.

